Registered as a Newspaper in Srilanka

தமிழின் முதல்தர
வார இதழ்

# தீபம்

www.deepam.lk

விலை 30 ரூபா • தீபம் 135 • 18.03.2018


அன்னா பொதிகள் சேவை
வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் கடிதங்கள் சேவை
AnnA EXPRESS COURIER SERVICE
976, கே.கே.எஸ் வீதி,
நாச்சிமார் கோவிலடி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 221 5656
070 330 5500




ஈ.பி.ஆர்.எல்.எவ் உடைகிறது!


மட்டக்களப்பின் சமுர்த்தி மோசடிகள்

ஈரானுக்கு ஆயுத சப்ளை செய்த இஸ்ரேல்





## முதலமைச்சருக்கு பொருத்தமானவரா மாவை?



## WWE
கிங்ஸ் ஒவ் ரிங்ஸ்

## பிரபாகரனின் கணக்கு பிழைத்த இடம்!



மயூரன்ஸ்
நகை மாளிகை
Mayurans Nakai Malikai
22 கரட் தங்கப்பவுன் நகை வியாபாரம்
22 Karat Gold Jwellery
T.P: 021 222 3015, 077 651 0251
95, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் 95, Kasthuriar Road, Jaffna





















# ஒஸ்கார் விழாவிற்கு கேவலமான உடையணிந்து வந்த பிரபலங்கள்!

அமெரிக்காவில் உள்ள லொஸ் ஏஞ்சல்ஸில் 90 ஆவது ஒஸ்கர் விருது விழா நடைபெற்றுக் கொண்டிக்கிறது. இந்த மாபெரும் விருது விழாவிற்கு உலகின் பல பகுதிகளில் இருந்தும் பிரபலங்கள் கலந்து கொண்டு வருகிறார்கள். ஒவ்வொரு திரையுலக பிரபலங்களுக்குமே இந்த ஒஸ்கர் விருதைப் பெற வேண்டுமென்ற எண்ணம் நிச்சயம் இருக்கும். அதே சமயம் இந்த விருது விழாவிலும் கலந்து கொள்ள ஆசையும் இருக்கும். இது மிகப்பெரிய விருது விழா என்பதால், பல நடிகைகள், பாடகிகள் இந்த விருது விழாவிற்கு பல வித்தியாசமான உடைகளை அணிந்து வருவார்கள். அவற்றில் சில உடைகள் நல்ல தோற்றத்தைக் கொடுத்தாலும், பெரும்பாலானோர் அணிந்து வரும் வித்தியாசமான உடைகள் மோசமான தோற்றத்தையே தருகின்றன. அனைவருக்குமே நல்ல ஃபேஷன் டேஸ்ட் இருக்கும் என்று சொல்ல முடியாது.

ஃபேஷனான உடைகளை அணிந்து வருபவர்கள் அனைவருமே ஒரு கட்டத்தில், அதில் தவறுகளை செய்ய நேரிடுகிறது. அந்த வகையில் மாபெரும் ஒஸ்கர் விருது விழாவிற்கு சில பிரபலங்கள் அணிந்து வந்த மோசமான உடைகள் உங்கள் பார்வைக்கு கொடுக்கப்பட்டுள்ளது. அதைக் கொஞ்சம் பாருங்கள்.

**லின்சே வோன்**

அகாடமி விருது விழாவான ஒஸ்கர் விருது விழாவிற்கு அணிந்து வந்த மோசமான உடைகளுள் ஒன்று தான் லின்சே வோன் அணிந்து வந்த கருப்பு நிற உடை. இந்த உடை பார்ப்பதற்கு நன்றாக இருந்தாலும், ஒஸ்கர் போன்ற பெரிய விழாவிற்கு இப்படிப்பட்ட உடையைத் தேர்ந்தெடுத்து அணிந்து வருவது நல்ல தோற்றத்தைக் கொடுக்காது.

**சால்மா ஹாயக்**

சால்மா ஹாயக் மின்னும் ஊதா நிற பல அடுக்குகள் மற்றும் முன்பக்கம் மற்றும் பின்பக்கத்தில் சுருக்கங்களைக் கொண்டதோடு, வெள்ளைக் கற்கள் பதிக்கப்பட்ட மணிகள் தொங்குவது, கேவலமாக இருந்தது எனலாம். இம்மாதிரியான உடைகளை ஒஸ்கருக்கு தேர்ந்தெடுத்து அணிந்து வருபவர்களுக்கு, ஃபேஷன் சென்ஸ் இல்லை என்று தான் கூற வேண்டும்.

**பிளான்கா பிளான்கோ**

நடிகை பிளான்கா பிளான்கோ, கடந்த வருடம் அணிந்து வந்த உடையால் மாபெரும் சங்கடத்திற்கு உள்ளானார். இந்த வருடம் அணிந்து வந்த சிவப்பு மற்றும் வெள்ளை கலந்த டீப்லோ நெக் கொண்ட உடை, அவருக்கு இருக்கும் பரந்த மனதை நன்கு வெளிக்காட்டியது, அவரை படு கவர்ச்சியாக வெளிக்காட்டியது.







**ஆண்ட்ரா டே**

பாடகியான ஆண்ட்ரா டே 2018 ஆம் ஆண்டு ஒஸ்கர் விருது விழாவிற்கு இருப்பதிலேயே மிகவும் கேவலமான ஓர் உடையைத் தேர்ந்தெடுத்து அணிந்து வந்துள்ளார் எனலாம். அதுவும் இந்த உடை ஸ்ட்ராப்லெஸ் கொண்டிருப்பதோடு, இவர் ஒஸ்கரின் சிவப்பு கம்பளத்தில் உட்கார்ந்து கொடுத்த போஸ் மோசமானதாக இருந்தது.

**செயிண்ட் வின்சன்ட்**

பாடகி செயிண்ட் வின்சன்டிற்கு என்ன ஆனது என்று தெரியவில்லை. இவர் தனது உடையின் பாதியை அணிந்து வர மறந்து விட்டார் போல் உள்ளது. அதோடு, கருப்பு நிற உடையின் ஒரு பக்கத்தில் ஃபுல் ஸ்லீவ் இருந்தது, அவர் ஏதோ ஒரு கருப்பு நிற பையை மாட்டிக் கொண்டு வந்தது போன்ற தோற்றத்தைக் கொடுத்தது எனலாம்.

**எம்மா ஸ்டோன்**

எப்போதும் சிறப்பான உடையைத் தேர்ந்தெடுத்து அணிந்து வரும் எம்மா ஸ்டோன், இந்த வருட விழாவிற்கு மெரூன் நிற சாட்டின் டாப் மற்றும் அடர் நீல நிற பேண்ட் அணிந்து படு கேவலமாக வந்துள்ளார். உங்களுக்கு இவரது தோற்றம் பிடித்துள்ளதா என்ன?

**வோய்லா டேவிஸ்**

வோய்லா டேவிஸ் 90 ஆவது ஒஸ்கர் விருது விழாவின் சிவப்பு கம்பளத்திற்கு சற்றும் பொருத்தமில்லாத மற்றும் கேவலமான தோற்றத்தைக் கொடுக்கும் பிங்க் நிற ஸ்லீவ்லெஸ் கவுனை அணிந்து, மோசமான ஒரு தோற்றத்தில் வந்துள்ளார் எனலாம்.

**தாராஜி பி ஹென்சன்**

தாராஜி ஒஸ்கர் விருது விழாவிற்கு தனது ஒட்டுமொத்த உடலும் தெரியும்படியான ஒரு படு மோசமான லேஸ் உடையைத் தேர்ந்தெடுத்து அணிந்து வந்திருந்தார். இந்த உடையில் இவர் அணிந்து வந்த உள்ளாடை கூட நன்கு புலப்பட்டது. இதற்கு இவர் எதுவும் அணியாமலேயே வந்திருக்கலாம்.

**நடாலியா லாபர்கேடே**

பாடகி நடாலியா க்யூட்டான முகத் தோற்றத்தைக் கொண்டவர். இவர் இந்த ஒஸ்கர் விருது விழாவிற்கு அணிந்து வந்த கருப்பு நிற உடை இவரை மோசமாக காட்டியது.

**ரிதா ஹாயக்**

பலவண்ணங்கள் கலந்த டீப் தைஹை ஸ்லிட் கவுன் அணிந்து வந்ததோடு, உடையின் பக்கவாட்டுப் பகுதியில் தனது உடல் தெரியும் படியான மோசமான உடையத் தேர்ந்தெடுத்து அணிந்து வந்திருந்தார்.

**லியா மைக்கல்**

லியா மைக்கல் கருப்பு நிற தைஹை ஸ்லிட் மற்றும் டீப் லோநெக் கொண்ட கவுனில் வந்திருந்தார். இந்த உடை பார்க்க நன்றாக இருந்தாலும், ஒஸ்கர் விருது விழாவிற்கு அணிந்து வருவதற்கு ஏற்ற உடை அல்ல என்றே கூற வேண்டும்.

**டோரா ஸ்டின்சன்**

பாடலாசிரியர் மற்றும் பாடகியான டோரா கருப்பு நிற மின்னும்படியான ஓர் உடை அணிந்து, சாக்கு மூட்டை போல் வந்திருந்தார்.

**க்ளாரி கிராண்ட்**

க்ளாரி கிராண்ட் ஏதோ பார்ட்டிக்கு செல்வது போன்று மின்னும் சில்வர் நிற ஒற்றைத் தோள்பட்டை மற்றும் ஒற்றை ஃபுல் ஸ்லீவ் கொண்ட மற்றும் பல அடுக்குகளையும் கொண்ட கவுன் அணிந்து, இடுப்பு பகுதியில் கருப்பு நிற துணியை அணிந்து கேவலமான தோற்றத்தில் வந்திருந்தார்.

**பாஸ் வேகா**

நடிகையான பாஸ் வேகா ஒஸ்கர் விருது விழாற்கு மெரூன் பூப் பிரிண்ட் போடப்பட்ட வெள்ளை நிற உடை அணிந்து வந்திருந்தார். இநத் உடையில் பாஸ் வேகாஸ் எலும்பும் தோலுமாக இருந்தது போன்று காட்சியளித்தது. இதோடு ஏதோ ஒரு எலும்பு கூட நடப்பது போன்றும் இருந்தது எனலாம்.



**ஹேலி பென்னட்**

இது நடிகை ஹேலி பென்னட் அணிந்து வந்த மொசுமொசு உடை. இந்த உடையானது ஹால்டர் லேஸ் நெக் மற்றும் இறகுகளைக் கொண்டிருந்தது. இது வித்தியாசமாக இருந்தாலும், மிகப்பெரிய விருது விழாவிற்கு அணிந்து வரக்கூடியவாறான ஒரு உடையல்ல. இந்த உடையால் இவரது உண்மையான அழகு பாழாகித் தான் காட்சியளிக்கிறது.



# கடைசிநேர ஹிட் லிஸ்ட்டில் இணைக்கப்பட்ட புலிகள்!

**ராஜிவ் காந்தி கொலை 24**
**புலிகள் சிக்கிய கதை**

கே.ராகோத்தமன்

இது ஒரு பக்கம் நடந்துகொண்டிருந்தபோது, ராஜிவ் காந்தி விசாகப்பட்டணத்திலிருந்து ஸ்ரீபெரும்புதூர் வருவது உறுதி செய்யப்பட்டு, செக்யூரிடி க்ளியரன்ஸுக்கான உத்தரவுகள் அனுப்பப்பட்டன.

அவருக்குச் செய்ய வேண்டிய பாதுகாப்பு ஏற்பாடுகள், அவருக்கு யார் யார், எந்தெந்த இயக்கங்களால் அச்சுறுத்தல், ஆபத்துகள் உண்டு என்றெல்லாம் விரிவாக விளக்கி, தக்க பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு அறிவுறுத்தி டெல்லியிலிருந்து முறைப்படி தகவல் வந்து சேர்ந்தது.

காஷ்மீர் இயக்கங்கள், உல்ஃபா முதல் எத்தனையோ பல இயக்கங்களின் ஹிட் லிஸ்டில் இருப்பவர் என்று குறிப்பிட்டிருந்த அந்தப் பட்டியலில் விடுதலைப் புலிகளின் பெயர் மட்டும் இல்லை.

நிகழ்ச்சியை எவ்வாறு நடத்த வேண்டும், யார் ராஜிவை நெருங்கலாம், யார் யாருக்கெல்லாம் அனுமதி கிடையாது, அவர் தங்குமிடம் எங்கே, எப்படி இருக்கவேண்டும், எம்மாதிரியான பாதுகாப்புகள் செய்யப்பட்டிருக்க வேண்டும் என்று மிக விரிவாக எழுதப்பட்ட அறிக்கை. ஐ.பியிலிருந்து அனுப்பப்பட்ட எச்சரிக்கை அறிக்கை அது.

அதே சமயம் இங்கே, தமிழ்நாடு க்யூ ப்ராஞ்ச் பிரிவு இன்ஸ்பெக்டர் ஜெனரலாக இருந்த எஃப்.சி.சர்மா மட்டும் விடுதலைப் புலிகளால் ஆபத்து இருக்கக்கூடும் என்று குறிப்பிட்டு ஒரு தகவல் அனுப்பியிருந்தார்.

ஸ்ரீபெரும்புதூருக்கு மட்டுமல்லாமல், மறுநாள் ராஜிவ் எங்கெல்லாம் பயணம் செய்ய இருந்தாரோ, அத்தனை இடங்களுக்கும் இந்தத் தகவல்கள் சென்றன.

இந்த எச்சரிக்கைகளின் அடிப்படையில்தான் நிகழ்ச்சியை வடிவமைக்க வேண்டும். ஆகவே, வேறு வழியில்லாமல் ஸ்ரீபெரும்புதூரில் ராஜிவ் தங்குவதற்கு மரகதம் சந்திரசேகர் ஏற்பாடு செய்திருந்த சேட்டு வீட்டை விடுத்து, ஸ்ரீபெரும்புதூரிலுள்ள விருந்தினர் மாளிகையில் இடம் ஏற்பாடு செய்யப்பட்டது.

மாவட்ட ஆட்சித் தலைவர் ஷீலா ப்ரியா பொறுப்பில் அந்த ஏற்பாடு நடந்தது. ராஜிவும் அதனை ஏற்றுக்கொண்டு இருந்தார். ஆனால் வாழப்பாடி ராமமூர்த்திக்கு இந்த ஏற்பாடும் பிடிக்கவில்லை.

அவர், அன்றைய கவர்னர் பீஷ்ம நாராயண் சிங்கிடம் விஷயத்தை விளக்கி, மீனம்பாக்கத்திலிருந்து ஸ்ரீபெரும்புதூர் செல்லும் ராஜிவ், அன்றிரவு மீனம்பாக்கத்துக்கே திரும்பி, விமான நிலைய விருந்தினர் விடுதியில் தங்கும்படி ஏற்பாடு செய்ய விரும்புவதைச் சொல்லி, அவரது ஒத்துழைப்பையும் பெற்றார்.

அதன்படியே இறுதியில் ஏற்பாடு செய்யப்பட்டது. 21ம் திகதி மாலை நான்கு மணிக்கு புவனேஸ்வரிலிருந்து ராஜிவ் விசாகப்பட்டணம் வந்துவிடுவார் என்று எதிர்பார்க்கப்பட்டது. தாமதமில்லாமல் அங்கிருந்து விமானம் மூலம் புறப்பட்டு சென்னை வந்து இறங்கிவிட வேண்டுமென்பது திட்டம்.

விசாகப்பட்டணம் விமானத் தளத்தில் மாலை ஆறு மணிக்கு மேல் எந்த விமானமும் புறப்பட முடியாது. இரவு நேர டேக் ஓஃப் மற்றும் லாண்டிங்குக்கு அங்கே வசதியும் அனுமதியும் இல்லை.

எனவே நாலரை மணிக்குள்ளாக ராஜிவ் கிளம்பிவிட்டால் ஐந்தரை மணி அளவில் தமிழகம் வந்துவிடுவார். சாலைப் பயணம், வரவேற்பு அது இதுவென்று ஒரு அரை மணிநேரம் போனாலும் ஆறு மணிக்கெல்லாம் வந்த வேலையை ஆரம்பித்துவிட முடியும்.

எல்லா ஏற்பாடுகளும் தயாராக இருந்த நிலையில், திட்டமிட்டபடி ஐந்து மணிக்கு ராஜிவ் காந்தி விசாகப்பட்டணம் விமானத் தளத்தில் முதல்வர் ஜனார்த்தன் ரெட்டியுடன் ஹெலிகாப்டரில் வந்து இறங்கி, சென்னை விமானம் ஏற நடந்து வந்துகொண்டிருந்தார்.

சில அடிகள் இன்னும் நடந்தால் விமானத்தை அடைந்துவிடலாம் என்னும் நிலையில், விமானத்தில் இருந்த பைலட், வாகனத்தின் ரேடார் கருவி வேலை செய்யவில்லை என்பதைக் கண்டார்.

ஒரு கணம் அவருக்குப் பதற்றமாகிவிட்டது. ஏற வந்துவிட்ட ராஜிவின் பக்கம் திரும்பி, 'சாரி சார். ரேடார் வேலை செய்யவில்லை. என்னவென்று பார்க்கக் கொஞ்சம் நேரம் வேண்டும்' என்று சொன்னார்.

ராஜிவ் ஒரு பைலட். அவருக்கு இம்மாதிரிப் பிரச்னைகள் எப்போதும் வரலாம் என்பது பற்றி நன்றாகவே தெரியும். எனவே அவர் பதறவில்லை.

'பாருங்கள். ஆனால் கொஞ்சம் சீக்கிரம்' என்று மட்டும் சொல்லிவிட்டு ஜனார்த்தன் ரெட்டியுடன் பேசிக்கொண்டு நின்றார்.

என்ன கோளாறு என்று ஆராயத் தொடங்கிய விமானிக்கு, ஒரு குறிப்பிட்ட கருவியை மாற்றினாலொழிய வண்டி புறப்பட வாய்ப்பில்லை என்பது தெரிந்தது.

எனவே, வேறு வழியில்லாமல், அருகே உள்ள விமானப்படை விமான நிலையத்தில் அந்த ரேடார் பிரச்னைக்குத் தீர்வு கிடைக்குமா என்று பார்க்கச் சொல்லித் தகவல் அனுப்பினார். ம்ஹூம்.

உடனடியாக வாய்ப்பில்லை என்று சொல்லப்பட்டது. தகவலை ராஜிவிடம் தயங்கியபடி சொன்னபோது அவர் மிகுந்த ஏமாற்றமடைந்தார்.

'ஓ, அப்படியானால் என்னால் தமிழ்நாட்டுக்கு இன்று போகமுடியாதா? வேறு விமானம் ஏதாவது ஏற்பாடு செய்ய முடியுமா பாருங்களேன்.

நான் ஆன்ட்டியை ஏமாற்ற விரும்பவில்லை' என்று சொன்னார். 'கொஞ்ச நேரம் பொறுத்திருங்கள், ஏதாவது மாற்று ஏற்பாடு செய்யப் பார்க்கிறோம்' என்று விமானி நம்பிக்கை சொல்லி, தீவிரமாக அந்தக் கருவியை ஏதாவது செய்து சரியாக்க முயற்சி செய்யத் தொடங்கினார்.

(தொடரும்)







# விவசாய அமைச்சிற்குள் 'சம்திங்'!

வடக்கு விவசாய அமைச்சின் கீழ் பல பண்ணைகள் இருக்கின்றன. அங்கு பராமரிப்பு பணிகளிற்கு அன்றாடம் வேலையாட்கள் வந்து போவார்கள். இந்த வகை வேலையாட்கள் நிரந்தரமானவர்கள் அல்ல. எத்தனைபேர் வேலைக்கு வந்தார்கள், சம்பளப்பட்டியலில் குறிக்கப்பட்டவர்கள் அத்தனை பேரும் பண்ணை வேலைக்கு வந்தார்களா என்பதை நுணுக்கமாக கண்காணித்தால் அன்றி, வேறு வழிகளில் உறுதிசெய்ய முடியாது. இதை பயன்படுத்தி சில அதிகாரிகள் திருகுதாளம் விட்டுள்ளார்கள். இது எப்படியோ, சம்பந்தப்பட்டவர்களின் காதுகளிற்கு செல்ல இப்பொழுது பண்ணை வேலையாட்கள் விசயத்தில் கிடுக்குப்பிடி நடைமுறைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாம்.

வடக்கு விவசாய அமைச்சின் முக்கிய அலுவலகமொன்றிற்கு அண்மையில், தனியார் மரக்கன்று விற்பனை நிலையமொன்று உள்ளது. அந்த அலுவலகத்தில் முக்கிய பொறுப்பில் உள்ள அதிகாரியின் மனைவியின் பெயரில்தான் அந்த தனியார் நிறுவனம் உள்ளது. கடமை நேரத்திலும் அந்த அதிகாரி, மனைவியின் விற்பனை நிலையத்தில் சாவகாசமாக உட்கார்ந்திருப்பார்.

இது பற்றி உயரதிகாரிகளிற்கு தொடர்ச்சியாக முறைப்பாடுகள் போக, அண்மையில் திடீரென கணக்காய்வாளர்கள் அங்குதிடீர் சோதனை நடத்தியுள்ளனர். இதன்போது சில முறைகேடுகள் சிக்கியுள்ளன. இதைவிட பெரிய செய்தி அந்த கணக்காய்வாளர்களிற்கு வெளிநாடுகளில் இருந்து அடையாளம் தெரியாத தொலைபேசி இலக்கங்களில் இருந்து கொலை அச்சுறுத்தல் வந்து கொண்டிருக்கிறதாம்!




## கருடன் பக்கம்

# ஈ.பி.ஆர்.எல்.எவ் உடைகிறது!

ஈ.பி.ஆர்.எல்.எவ் அமைப்பிற்குள் பெரிய சிக்கல் ஏற்பட்டுள்ளதென்பதை உள்ளூராட்சி தேர்தலின் முன்னரே தீபத்தில் குறிப்பிட்டிருந்தோம். ஈ.பி.ஆர்.எல்.எவ் அமைப்பின் தலைமை வடக்கிலிருந்து ஒரு முடிவெடுக்க, கிழக்கு முக்கியஸ்தர் துரைரெட்ணம் அதற்கு முரண்டுபிடித்து வருகிறார். வடக்கு நிலைமையை போல கிழக்கு நிலைமை இல்லையென்பதே இதற்காக அவர் சொல்லும் காரணம்.

உதயசூரியன் போன்ற மக்களிற்கு பரிச்சயமான சின்னத்தில்தான் தேர்தலில் களமிறங்க வேண்டுமென, ஈ.பி.ஆர்.எல்.எவ் தமிழர் விடுதலை கூட்டணி சங்கமம் நடப்பதற்கு முன்னரே வலியுறுத்திக் கொண்டிருந்தார் துரைரெட்ணம். ஆனால், உதயசூரியனும் கைகொடுக்காத நிலையில், மட்டக்களப்பு தமிழரசுக் கட்சி முக்கியஸ்தர்களுடன் சில சுற்று இரகசிய பேச்சுக்களையும் நடத்தியிருந்தார். இந்த பேச்சுவார்த்தை விசயத்தை அறிந்ததும், பேச்சில் கலந்து கொண்ட தமிழரசுக்கட்சி முக்கியஸ்தர்களை தீபம் தொடர்பு கொண்டு பேசியது. "இணக்கமாக செயற்படுவது பற்றி பேசினோம்" என்றார்கள். ஆனால், அதற்கும் அப்பால் விசயம் இருக்கிறதென்பதே உண்மை.

இந்த நிலையில், ஈ.பி.ஆர்.எல்.எவ் இற்கு நெருக்கடி ஏற்படும் விதமான புதிய நிலைப்பாட்டிற்கு துரைரெட்ணம் வந்துள்ளார். கிழக்கில் நன்கு அறிமுகமான தமிழ் தேசிய கூட்டமைப்பு, அல்லது தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியுடன்தான் கூட்டு வைக்கலாம், இதை தவிர கிழக்கில் வேறெந்த கட்சியுடனும் கூட்டு வைத்து வெற்றியடைய முடியாதென கட்சி தலைமைக்கு கூறியுள்ளார்.





மட்டக்களப்பிலுள்ள சில உள்ளூர் முக்கியஸ்தர்களுடன் வவுனியாவிற்கு வந்து, சிவசக்தி ஆனந்தன் எம்.பியுடன் பேச்சுவார்த்தை நடத்தியிருக்கிறார். இதை பேச்சுவார்த்தை என்று வகைப்படுத்த முடியாதென்கிறார்கள். அவ்வளவு சச்சரவாகியிருக்கிறது. இனி மீண்டும் அவர்கள் சந்திக்க வாய்ப்பிருக்குமென தோன்றவில்லையென்றார், சந்திப்பில் கலந்துகொண்ட ஒரு உள்ளூர் முக்கியஸ்தர்.

"வடக்கில் தமிழ் மக்கள் பேரவையுடன் அல்லது தமிழ் தேசிய மக்கள் முன்னணியுடன் கூட்டணிவைத்தால், உங்களிற்கு ஏதாவது ஆதாயம் கிடைக்கலாம். ஆனால், கிழக்கில் அது வேலைக்கு ஆகாது. இதுதான் உங்கள் கூட்டணியென்றால், நாம் வேறு முடிவுதான் எடுப்போம்" என கட்சிக்கு நேரடியாக கூறிவிட்டாராம்.

# பொன்சேகாவிடம் மன்னிப்பு கேட்ட அமைச்சர்!

சட்டம் ஒழுங்கு அமைச்சராக யார் பதவியேற்பார்கள் என்றசர்ச்சையை நீடிக்க விடாமல், கடந்த 08ம் திக்தி ரஞ்சித் மத்தும பண்டாரவை நியமித்தார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன. சட்டம் ஒழுங்கு அமைச்சராக பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவை நியமிக்க வேண்டுமென்பதுதான் ஐ.தே.கவின் நிலைப்பாடாக இருந்தது. ஆனால், இன்னொரு ஐ.தே.க முக்கியஸ்தரை சட்டம் ஒழுங்கு அமைச்சராக்கி விட்டார் ஜனாதிபதி. சரத் பொன்சேகாவை சட்டம் ஒழுங்கு அமைச்சராக நியமிக்க முடியாதநிலை ஜனாதிபதிக்கு ஏன் ஏற்பட்டதென்பதை கடந்த வாரங்களில் தீபம் விபரமாக குறிப்பிட்டிருந்தது.

ரஞ்சித் மத்தும பண்டார அமைச்சராக பதவியேற்ற பின்னர், மண்டபத்திற்குவெளியில்வந்து உடனடியாகசரத் பொன்சேகாவை தொலைபேசியில் தொடர்பு கொண்டிருக்கிறார். "பீல்ட்





மார்ஷல் அவர்களே, எனக்கு இந்த அமைச்சு வழங்கப்படுமென நானே எதிர்பார்க்கவில்லை. நான் சுகவீனத்தால் விடுமுறையில் இருந்ததை நீங்களும் அறிவீர்கள். ஜனாதிபதி என்னை நேரடியாக தொலைபேசியில் அழைத்து, அமைச்சை பொறுப்பேற்க அழைத்தபோது என்னால் மறுக்க முடியவில்லை" என்றுள்ளார்.

சிரித்தபடியே இதற்கு பதலளித்த பொன்சேகா, "நீங்கள் அமைச்சுக்குரிய பணிகளை சரிவர செய்துகொண்டு செல்லுங்கள். தேவையான ஒத்துழைப்பை நானும் தருவேன்" என்றுள்ளார்.

இந்த உரையாடல் முடிந்த சற்று நேரத்தில், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடமிருந்து பொன்சேகாவிற்கு அழைப்பு சென்றுள்ளது. "இது பற்றி எனக்கு எதுவும் தெரியாது. ஜனாதிபதி தனது முடிவில் இந்த நியமனத்தை வழங்கியிருக்கிறார்" என கூறியுள்ளார்.

தொடர்ச்சி அடுத்தபக்கம்...

# தீராத சிக்கல்!

உள்ளூராட்சிசபைகள் வரும் 20ம் திகதி கூடுகின்றன. எனினும், நாட்டிலுள்ள பாதி உள்ளூராட்சி சபைகள் யாருக்கும் தெளிவான பெரும்பான்மை இல்லாமல்தான் உள்ளன. இந்த நிலையில், வடக்கு கிழக்கிலும் இழுபறி தொடர்ந்தபடிதான் உள்ளது. அடுத்தவாரம் சபைகள் கூடவுள்ள நிலையில், இன்னும் தெளிவான நிலை தோன்றவில்லை. வடக்கு, கிழக்கில் அதிக சபைகளை கைப்பற்றியுள்ளது தமிழ் தேசிய கூட்டமைப்பு. சபைகளை சிக்கலில்லாமல் நடத்த ஏனைய கட்சிகளுடன் கூட்டணி வைத்துத்தான் ஆக வேண்டிய நிலைமை. வடக்கில் சில சபைகளில் தமிழ் தேசிய மக்கள் முன்னணி தனித்து ஆட்சியமைக்க முயன்றுவரும் நிலையில், தமிழ் தேசிய கூட்டமைப்பிற்கு இன்னும் சிக்கல் அதிகரித்துள்ளது. அண்மையில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் பங்காளிக்கட்சிகள் கலந்துகொண்ட கூட்டத்தில், உள்ளூராட்சிசபைகளில் எப்படி ஆட்சியமைப்பது என்பதை ஆராய்ந்தார்கள். கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனும் இதில் கலந்துகொண்டிருந்தார். ஈ.பி.டி.பி, தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சிகளுடன் கூட்டணி பேச்சுக்கள் வைத்துக்கொள்ளக்கூடாதென தெளிவாக கூறியுள்ளார். யாரும் பேச்சு நடத்தியதாக செய்தி வெளியாகவே கூடாதென அழுத்திக் கூறியுள்ளார். எனினும், வடக்கில் ஈ.பி.டி.பியுடன் இணக்கப்பாட்டிற்கு வராமல் ஆட்சியமைக்க முடியாதென்பதை சில முக்கியஸ்தர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். எனினும், சம்பந்தரிற்கு இதில் உடன்பாடில்லை. சம்பந்தப்பட்ட சபை உறுப்பினர்கள் மட்டத்தில் ஏதாவது பேச்சுவார்த்தை நடத்தி, சபைகளில் இணக்கப்பாட்டை ஏற்படுத்திக் கொள்ளலாம், ஆனால், கட்சி மட்டத்தில் பேச்சு நடத்தப்படாது என முடிவெடுக்கப்பட்டுள்ளது.


# புலிகளின் வாக்கில் ஈ.பி.ஆர்.எல்.எவ்!

திருகோணமலையின் வெருகல் பிரதேசசபை தேர்தலில் உதய சூரியன் சின்னத்தில் போட்டியிட்ட முன்னாள் போராளிகள், தாம் கட்சியால் ஒதுக்கப்படுவதாக விசனம் வெளியிட்டுள்ளனர். தேர்தலிற்காக தம்மை பயன்படுத்திவிட்டு, இப்பொழுது கைவிட்டு விட்டதாக குற்றம் சுமத்தியுள்ளனர்.

வெருகல் பிரதேசத்தில் பொது செயற்பாட்டில் ஈடுபட்டு வந்த முன்னாள் போராளிகள், உள்ளூராட்சி சபை தேர்தலில் போட்டியிட முடிவு செய்து கட்சிகளை அணுகியுள்ளனர். தமிழரசுக்கட்சியின் மூலம் ஆசனம் கிடைக்காததையடுத்து, ஈ.பி.ஆர்.எல்.எவ் அமைப்பின் கிழக்கு முக்கியஸ்தர்கள் ஊடாக உதயசூரியன் சின்னத்தில் களமிறங்கினர்.

முன்னாள் போராளிகள் யாரும் வட்டாரங்களில் வெற்றியடையவில்லை. எனினும், குறிப்பிடத்தக்களவாக வாக்குகளை பெற்றதால், விகிதாசார பட்டியலில் ஒரு ஆசனம் கிடைத்தது. விகிதாசார பட்டியல் ஆசனம் ஈ.பி.ஆர்.எல்.எவ் அமைப்பை சேர்ந்த ஒருவருக்கே வழங்கப்படும் என கட்சி அறிவித்துவிட்டது. வாக்கை பெறுவதற்காக மட்டும் தம்மை ஈ.பி.ஆர்.எல்.எவ் பயன்படுத்தியுள்ளதென அவர்கள் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.


# சுமந்திரனிற்காக காத்திருந்த அருந்தவபாலன்!



தமிழரசுக்கட்சியின் 'தென்மராட்சி அதிருப்தியாளர்' க.அருந்தவபாலனிற்கும், எம்.ஏ.சுமந்திரனுக்கும் இடையிலான சந்திப்பில் என்ன பேசப்பட்டதென்பதுதான், இன்றை திகதிவரை பலரது மண்டையை குடையும் செய்தி. அந்த தகவல்களை இப்பொழுது வெளிப்படுத்துகிறோம். யாழ் மாவட்ட ஒருங்கிணைப்புகுழு கூட்டம் முடிந்ததும், 'ஒருமுறை தனது வீட்டிற்கு வந்துவிட்டு போங்கள்' என வடமாகாணசபை உறுப்பினர் ஜெயசேகரம் அழைத்துள்ளார். சுமந்திரன் அங்கு சென்ற போது, அருந்தவபாலன் காத்திருந்திருக்கிறார்.

தமிழரசுக்கட்சியின் மத்தியகுழு கூட்டத்தில் அருந்தவபாலன் விவகாரத்தை ஆராய்ந்து முடிவெடுக்கவுள்ளது (அனேகமாக கட்சியை விட்டு நீக்குவதாகவும் இருக்கலாம்) என்ற தகவல் வந்ததையடுத்தே, இந்த சந்திப்பை அருந்தவபாலன் விரும்பியிருக்கிறார். 'அப்படியொரு சூழ்நிலை ஏற்பட்டால், உங்களின் நிலைப்பாடு என்ன?' என்றுதான் சுமந்திரனிடம் வினாவியிருக்கிறார். 'இந்த விசயத்தில் கட்சியின் ஏனைய உறுப்பினர்களிற்கு என்ன விதிமுறையோ, அதேவிதிமுறைதான் உங்களிற்கும் என்பதே எனது நிலைப்பாடு' என சுமந்திரன் பதிலளித்துள்ளார். அதேவேளை, கட்சியின் மத்தியகுழுவில் தன்னைப்பற்றியும் நிறைய முறைப்பாடுகள் உள்ளன என்றும் சுமந்திரன் குறிப்பிட்டுள்ளார். கட்சிக்கு விரோதமான முறையில் இனி நடந்துகொள்ள மாட்டேன் என்றும் அருந்தவபாலன் இதன்போது சுமந்திரனிடம் வாக்குறுதியளித்துள்ளார்.


எனினும், 'கடந்த தேர்தல் காலத்தில் அவர் நடந்து கொண்ட விதம் குறித்தே ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது, ஏன் அப்படியான சூழல் ஏற்பட்டது, இனிமேல் அப்படி நடக்காதென்பதை உறுதிசெய்து மத்தியகுழுவிற்கு கடிதம் எழுதுங்கள்' என சுமந்திரன் குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பில் தானும் மத்தியகுழுவிற்கு கடிதம் எழுதுகிறேன் என்றும் சுமந்திரன் குறிப்பிட்டுள்ளார். இந்த சந்திப்பின் இறுதியில், 'சுமந்திரன் எதையும் வெளிப்படையாக பேசிக்கொள்வதுதான் அவரது பலமும் பலவீனமும்' எனபாராட்டும் தொனியில் அருந்த வபாலன் கூறியிருக்கிறார். 'உண்மையை சொல்வது பலவீனம் என்றால், அது அப்படியே இருக்கட்டும்' என்றாராம் சுமந்திரன்!



# இனி சம்பந்தரின் சொல்லும் எடுபடாதாம்!

எதிர்வரும் வடமாகாணசபை தேர்தலில் முதலமைச்சர் வேட்பாளராக க.வி.விக்னேஸ்வரனை நியமிக்க அனுமதிப்பதில்லையென தமிழரசுக்கட்சி முக்கியஸ்தர்கள் தீர்மானித்துள்ளனர். கட்சியின் உயர் மட்ட உறுப்பினர்கள் தமக்கிடையிலான அண்மைய சந்திப்புக்களில் இதுபற்றி பேசி, ஒத்த நிலைப்பாட்டிற்கு வந்திருக்கிறார்கள். முதலமைச்சர் வேட்பாளராக மாவை சேனாதிராசாவை நியமிப்பதென்றும் முடிவெடுத்துள்ளனர்.

கடந்தவாரம் நாம் குறிப்பிட்டதை போல, பாராளுமன்ற உறுப்பினர் பதவியை துறப்பதற்கான முன்னாயத்தங்களில் மாவை சேனாதிராசா ஈடுபட்டுள்ளார். கட்சியின் உயர் மட்ட தலைவர்களின் இந்த முடிவையடுத்தே மாவை, முதலமைச்சர் வேட்பாளராகுவதற்கு தயாராக ஆரம்பித்துள்ளார்.



முக்கிய விடயத்தில் இறுதி முடிவெடுப்பவராகஇதுவரை இரா.சம்பந்தனே இருந்து வந்துள்ளார். எனினும், இம்முறை விக்னேஸ்வரனிற்கு ஆதரவாக சம்பந்தன் முடிவெடுத்தால், அந்த முடிவை ஏற்றுக்கொள்வதில்லையென்றும் இதன்போது பேசப்பட்டுள்ளது. கூட்டமைப்பிற்கு வெளியில் வந்தாவது, அதை எதிர்ப்பதென சில உறுப்பினர்கள் முடிவெடுத்துள்ளனர். அடுத்த மாகாணசபை தேர்தலில் முதலமைச்சர் வேட்பாளராக களமிறங்க போகிறேன் என தமிழரசுக்கட்சியின் முடிவெடுக்கும் மட்டத்தில் உள்ள தலைவர்கள் அனைவரிடமும் மாவை சேனாதிராசா நேரடியாக கூறியுள்ளார்.

# முதலமைச்சருடன் கைகோர்க்கும் புதுக்குடியிருப்பு இளைஞர்கள்!

புதுக்குடியிருப்பு பிரதேசசபைக்கு சுயேச்சை அணியாக வண்டில் சின்னத்தில் களமிறங்கிய இளைஞர்கள் அண்மையில் வடக்கு முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனை சந்தித்து பேசியுள்ளனர். முதலமைச்சர் அலுவலகத்தில் புதன்கிழமைகளில் நடக்கும் மக்கள் சந்திப்பின் போது,மக்கள் சந்திப்போடு சந்திப்பாக இந்த சந்திப்பும் முடிந்துள்ளது.

'முதலமைச்சர் அரசியல்ரீதியாக தலைமை வகிக்க தயாரானால், அவர் பின்னால் நாங்களும் வருவோம்' என்ற செய்தியை இளைஞர்கள் தெரியப்படுத்தியுள்ளனர். அத்துடன் புதுக்குடியிருப்பு பிரதேசசபை செயற்பாடுகளில் உள்ள பலவீனங்களையும் தெரியப்படுத்தியுள்ளனர்.

முதலமைச்சரின் அரசியல் செயற்பாடுகள் யாழ்ப்பாணத்திற்குள் மட்டும் வரையறுக்கப்படாமல், புதுக்குடியிருப்பிற்கும் வரவேண்டுமென்றும் இளைஞர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். இளைஞர்களை சந்தித்ததில் முதலமைச்சரும் மிகுந்த உற்சாகமாகியிருக்கிறார். விரைவில் புதுக்குடியிருப்பில் முதலமைச்சரை காணலாமென தெரிகிறது!

இதேவேளை, இந்த சந்திப்பிற்கு முன்னர் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் செ.கஜேந்திரனும், புதுக்குடியிருப்பு சுயேட்சைக் குழு இளைஞர்களை சந்தித்துள்ளார். தமது கட்சியுடன் இணைந்து கொள்ளுமாறு கஜேந்திரன் அழைப்பு விடுத்திருக்கிறார். 'இணைந்து வேலை செய்த தயாராக இருக்கிறோம், ஆனால் எமது அமைப்பாகத்தான் (மாற்றத்திற்கான இளையோர் அமைப்பு) இணைந்து செயற்படுவோம். எமது அடையாளத்தை துறக்கமாட்டோம்' என இளைஞர்கள் கூறியுள்ளனர். இந்த பதிலில் தமிழ் தேசிய மக்கள் முன்னணிக்கு திருப்தியில்லை.' பார்ப்போம்' என்றுவிட்டு விடைபெற்றாராம்!

தீபம் லென்ஸ்

# மட்டக்களப்பில் சமுர்த்தியால் பயனடைவது பயனாளிகளா? உத்தியோகத்தர்களா?

## தலை சுற்ற வைக்கும் ஊழல் தொடர் 01



அதிக வறுமையான மாவட்ட பட்டியலில் கிழக்கு மாகாணத்தில் முதலிடம்ஞ் தேசியரீதியில் மூன்றாமிடம் இது மட்டக்களப்பு மாவட்டத்தின் எதிர்மறை சாதனைகள்.

மட்டக்களப்பின் வறுமைக்கு என்ன காரணம்? வறுமைக்கு எதிராக அரசாங்கம் எந்த நடவடிக்கையும் எடுத்ததே இல்லையா? வறுமை தணிப்பு,வறுமையிலிருந்து மக்களையும், நாட்டையும் மீட்டெடுத்தல் என்ற தொனிப்பொருளில் அரசாங்கம் உருவாக்கிய சமுர்த்தி திட்டம் வெற்றியளிக்கவில்லையா?

படுத்தும் அரச உத்தியோகத்தர்களே மோசடி செய்தால், எப்படி மாவட்டத்தை வறுமையிலிருந்து மீட்டெடுக்க முடியும்? எப்படி சமுர்த்தி திட்டம் வெற்றியடையும்?

விவசாயம், கால்நடை வளர்ப்பு, மீன்பிடி, சுற்றுலா, தொழில்துறை என எல்லா வாய்ப்புக்களும் இருந்தும் ஏன் மட்டக்களப்பு தொடர்ந்தும் வறுமையின் பிடியில் இருக்கிறது?

மட்டக்களப்பில் சமுர்த்தி திட்டம் வெற்றியளித்ததா என ஆராய புறப்பட்ட எமக்கு, அதிர்ச்சியளிக்கும் அட்சய பாத்திரம் போல கையில் கிடைத்துள்ளது, மட்டக்களப்பில் நடந்த சமுர்த்தி முறைகேடுகள். கேட்டாலே தலைசுற்றும் மெகா ஊழல் அது. சமுர்த்தி திட்ட நடைமுறைகளில் தொடங்கி, அதன் கீழ்மட்டத்தில் ஊழலில் சம்பந்தப்பட்டவர்கள் வரை அனைவரையும் மக்களின் முன் வெளிச்சமிடவுள்ளோம். மக்களின் வறுமை நிவாரணத்தில் விளையாடிய

345 கிராமசேவையாளர் பிரிவுகளை உள்ளடக்கியதாக, 29 சமுர்த்தி வங்கிகள் செயற்பட்டு வருகின்றன. முகாமையாளர், பணியாளர்கள் என 590 உத்தியோகத்தர்கள் கடமையாற்றுகிறார்கள். சமுர்த்தி வங்கி, மகா சங்கங்களில் பணியாற்றுபவர்களிற்கான சம்பளம், பிரயாண கொடுப்பனவுகள் என்பன 2009 முதல், சமுர்த்தி வங்கிகளினால் ஏழை மக்களின் வைப்புக்களிலிருந்தே ஒதுக்கம் செய்யப்படுகிறது.

வறுமை, போசாக்கு, கல்வி, மந்த போசனை போன்றவற்றில் மட்டக்களப்பு பின்தங்கியுள்ளதாக தொடர்ந்து கூறப்பட்டு வருகிறது. எனினும், இந்த பட்டியல்படுத்தல் சரியானதா என்பதையும் கவனிக்க வேண்டும். ஏனெனில் மாவட்டத்தின் ஆறு இலட்சம் சனத்தொகையில், அண்ணளவாக 94,000 குடும்பங்கள் சமுர்த்தி உதவி பெறுபவர்கள். இவர்களின் வாழ்வாதாரம், கடன்

விருதுகளையும் பெற்றுள்ளது. தேசிய ரீதியில் புகைத்தல் எதிர்ப்பு தினத்திற்காக 5, 10 ரூபாக்களிற்காக விற்பனை செய்யப்படும் கொடியின் மூலம், வருடம் ஒன்றிற்கு 14,675,000 ரூபாவை ஈட்டும் நிலையில்ஞ் சமுர்த்தி வங்கி கணக்குகளின் சித்திரை புத்தாண்டு சேமிப்பு ஊக்குவிப்பு திட்டத்தில் 43,000 கணக்குகளின் பெயரில், மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள 29 சமுர்த்தி வங்கிகளின் மூலமும் 2017 இல் சேமிக்கப்பட்ட தொகை 104,042,067 ரூபா. இந்த பட்டியலில் தேசியரீதியில் மட்டக்களப்பு முன்னணியில் உள்ளது. வறுமையில் முன்னணியில் உள்ள மாவட்டம், இந்த பட்டியலிலும் எப்படி முன்னணியில் இருக்க முடியும் என்பது தர்க்கபூர்வமான கேள்வி.

இதேவேளை, இன்னொரு கேள்வியும் உள்ளது. சமுர்த்தி பயனாளிகளிடமிருந்து இவ்வளவு வருமானம் மீட்டக்கூடிய நிலைமையிருந்தும், ஏன்

இந்த கேள்விகளிற்கான விடை எப்படி அமைந்தாலும், மாவட்டத்தின் நிலைமையில் மாற்றம் இருக்காது. ஏனெனில், இலங்கையில் அதிகம் ஊழல் நடந்த மாவட்டங்களில் ஒன்றாக மட்டக்களப்பும் இருக்குமென்றே தோன்றுகிறது. முறையான, வெளிப்படையான விசாரணை நடத்தால் இன்னும் அதிர்ச்சிகரமான முடிவுகள் கிடைக்கலாம். கடந்தகாலங்களில் மட்டக்களப்பில் நடந்த ஊழல் மோசடிகள் பலவற்றை தீபம் வெளியிட்டிருந்தது. அந்த வரிசையில், சமுர்த்தி மோசடி தொடர்பான விபரங்களை இந்தவாரம் வெளியிடவுள்ளோம். மக்களின் வறுமையை போக்க உருவாக்கப்பட்ட சமுர்த்தி திட்டத்தில், அதை நடைமுறைப்

எந்த அரச உத்தியோகத்தரையும் தாராதரம் பாராது, பெயர் விபரங்களுடன் இதில் அம்பலப்படுத்தவுள்ளோம்.

மாவட்டத்தில் சமுர்த்தி நன்மைகளை நேரடியாக நிவாரணமாக பெறுபவர்கள் 79,000 குடும்பங்கள். சமுர்த்தி வங்கிகளின் மூலம் அங்கத்தவர்களாக இயங்கும் நிலையில் உள்ளவர்கள் 25,000 இற்கும் உட்பட்ட குடும்பங்களே. மொத்தமாக 94,000 வரையான குடும்பங்களே, வறுமை தணிப்பு மற்றும் வறுமை குறைப்பு திட்டத்தில் பத்து வருடங்களிற்கு மேலாக நன்மை பெற்று வருகிறார்கள்.

மாவட்டத்தின் பதின்னான்கு பிரதேச செயலாளர் பிரிவுகளில்,

வசதிகளுக்காக 2014 2017 ஆம் ஆண்டு வரை 353 மில்லியனுக்கும் அதிகமான தொகை செலவு செய்யப்பட்டதாக புள்ளிவிபரங்கள் கூறுகின்றன. இந்த நிதி, பயனாளிகளை சரியான முறையில் சென்றடைந்தால், மட்டக்களப்பு மோசமான பட்டியலில் இடம்பெற வாய்ப்பில்லை. பட்டியல் கணிப்பீட்டில் ஏதோ சிக்கல் என்று அர்த்தம். இல்லை, கணிப்பீடு சரியென்றால் அந்த நிதி மக்களை சரியாக சென்றடையவில்லையென்று பொருள்.

மாவட்டத்தில் அதிக குடும்பங்கள் சமுர்த்தி பயனாளிகளாக உள்ள நிலையிலும், சமுர்த்தி தேசிய வேலைத்திட்டங்களில் மட்டக்களப்பு மாவட்டம் பல சாதனைகளையும்,

மாவட்டம் தொடர்ந்தும் வறுமையில் முதலிடத்தில் உள்ளது?

இதேவேளை, சமுர்த்தி உதவிகளால் மக்கள் சரியாக பயனடைந்துள்ளார்களா என்ற கேள்விக்கும் சரியான பதில் கிடையாது. உதவிகள் முழுமையாக மக்களை சென்றடைந்ததா, நடைமுறைப்படுத்தப்பட்ட திட்டங்கள் உண்மையிலேயே மக்களின் வேண்டுகோளினால்தான் தெரிவு செய்யப்பட்டதா என்றால் இல்லையென்றுதான் கூற வேண்டும். கணக்காய்வு திணைக்களம், மாவட்ட அரசஅதிபர், பிரதேச அபிவிருத்திக் குழு தலைவர்களாக உள்ள அரசியல்வாதிகள் என பல தரப்பினர் இதற்கான பொறுப்பை ஏற்க வேண்டும்.

மட்டக்களப்பு மாவட்ட சமுர்த்தி

உதவி திட்டங்கள் தொடர்பில் மக்களுடன் பேசியபோது, எமக்கு கிடைத்தவையெல்லாம் அதிர்ச்சி செய்திகளே. பயனாளிக்கு உண்மையில் தேவையான பொருள் வழங்கப் படாவிட்டால், அது கிடைக்காத உதவியென்றும் வகைப்படுத்தலாம். ஒரு வீட்டில், மூன்று வருடங்களின் முன்னர் வழங்கப்பட்ட வாழ்வாதார உதவிப்பொருட்கள், இன்னும் பெட்டியிலேயே உள்ளன.

2014 - 2017 ஆம் ஆண்டு வரை வழங்கப்பட்ட 353 மில்லியனுக்கும் அதிக பணம் என்பது, சமுர்த்தி திணைக்களத்தினால் செலவு செய்யப் பட்டதுதான். ஆனால் தனியே சமுர்த்தி பயனாளிகளிற்கு மட்டும் இந்த பணம் செல்லவில்லை. பயனாளிகளின் பெயரில், சமுர்த்தி உத்தியோகத்தர்களாலும் சுருட்டப் பட்டுள்ளது. இதற்கான முழுமையான ஆதாரம் தீபத்திடம் உள்ளது. மாவட்டத்திலுள்ள அனைத்து பிரதேசங்களிலுமுள்ள மோசடி சமுர்த்தி உத்தியோகத்தர்களையும், அவர்களின் மோசடி பண பெறுமதியுடன் இந்த தொடரில் வெளிப்படுத்தவுள்ளோம். அடுத்த வாரத்தில் இருந்து அந்த தகவல்கள் வெளியாகும்.



மட்டக்களப்பு எம்.பிக்கள் ஸ்ரீநேசன், யோகேஸ்வரன், வியாழேந்திரன் மற்றும் முன்னாள் கிழக்கு மாகாண அமைச்சர் கி.துரைரட்ணசிங்கம்


**மக்களின் பணத்தை வணிக வங்கிகளிடம் ஒப்படைக்காமல், அவர்களிற்கே கடனாக வழங்கினால், அதிக வட்டி வசூலிக்கும் நுண் கடன் நிறுவனங்களை மக்கள் நாட மாட்டார்கள். நுண் கடன் நிறுவனங்களிடம் கடன் வாங்கிவிட்டு, அதை அடைக்க முடியாமல் தற்கொலை வரை செல்வதும், இதே ஏழை மக்கள்தானே.**

மாவட்டத்திலுள்ள 29 சமுர்த்தி வங்கிகளும், பயனாளிகளின் பெயரில் சமுர்த்தி வங்கிகளில் உள்ள வைப்பு பணத்தை, ஏனைய அரச வங்கிகளில் நிலையான வைப்பாக முதலீடு செய்துள்ளன. இலங்கை வங்கி, மக்கள் வங்கி, தேசிய சேமிப்பு வங்கி, பிரதேச அபிவிருத்தி வங்கி ஆகியவற்றில் 2017ஆம் ஆண்டு டிசம்பர் மாத நிலையான வைப்பு தொகையாக உள்ள பணம் 18,004,600,000 ரூபா!

வணிக வங்கிகளில் இவ்வளவு பெரிய தொகையை நிலையான வைப்பாக சமுர்த்தி வங்கி முதலிட்டுள்ள நிலையில், அந்த பணத்தின் ஒரு பகுதியை உண்மையான தேவையுள்ள மக்களிற்கு கடனாக வழங்கலாம். தன்னிடமுள்ள பணத்தில் 80 வீதம் வரை பயனாளிகளிற்கு கடன் வழங்கலாமென்ற நடைமுறையை கூட சமுர்த்தி வங்கிகள் கொண்டிருக்கின்றன. மக்களின் பணத்தை வணிக வங்கிகளிடம் ஒப்படைக்காமல், அவர்களிற்கே கடனாக வழங்கினால், அதிக வட்டி வசூலிக்கும் நுண் கடன் நிறுவனங்களை மக்கள் நாட மாட்டார்கள். நுண் கடன் நிறுவனங்களிடம் கடன் வாங்கிவிட்டு, அதை அடைக்க முடியாமல் தற்கொலை வரை செல்வதும், மாவட்டத்திலுள்ள இதே ஏழை மக்கள்தானே.

மட்டக்களப்பிலுள்ள 29 சமுர்த்தி வங்கிகளும் இதுவரையும் 31,800 பயனாளிகளே கடன்பெற்றுள்ளனர். இவர்களால் திருப்பி செலுத்தப் படவுள்ள தொகை 632,635,007 ரூபா. இதைவிட, மக்கள் பணத்தை பல்வேறு தரப்பினரும் சமுர்த்தி உத்தியோகத்தர்கள் உள்ளடங்களாக மோசடி செய்து, திரும்ப அறவிட முடியாத தொகையாக உள்ளது 20,936,000 ரூபா.

சித்திரை புத்தாண்டு சேமிப்பு ஊக்குவிப்பு திட்டத்தில் பயனாளிகளை இணைத்துக் கொள்ளும் விதம் பற்றியும் சமுர்த்தி அதிகாரிகள் மீள்பரிசீலனை செய்துகொள்ள வேண்டும். சித்திரை சேமிப்பு திட்டத்திற்கு பணம் சேகரிப்பதற்காக, கடந்த வருடம் டிசம்பர் மாதத்தின் பின் எந்த பயனாளிக்கும் கடன் வழங்கப்படவில்லை, ஜனவரி மாதத்தில் இருந்து முத்திரையும் வழங்கப் படுவதில்லை. ஏப்ரல் முதல் வாரத்தில் கடன் வழங்கி, அப்போது குறிப்பிட்ட தொகையை அறவிட்டு சேமிப்பில் இடுகிறார்கள். சித்திரை சேமிப்பு திட்டத்தில் அதிக பணத்தை சேமித்ததாக காண்பிக்க, டிசம்பரில் இருந்து பயனாளிகளிற்கு கடன் வழங்குவது நிறுத்தப்பட வேண்டுமா? டிசம்பர் தொடக்கம் ஏப்ரல் வரையான காலப்பகுதியில் அவசர தேவையுடையவர்கள் நுண் கடன் நிறுவனங்களையா நாடுவது?



சமுர்த்தி திட்டத்தால் பயனடைந்தவர் என மற்றைய மாவட்டங்களில் உதாரணம் காட்ட பயனாளிகள் உள்ளனர். ஆனால், மட்டக்களப்பு மாவட்டத்தில் சமுர்த்தி அதிகாரிகளால் அப்படியொருவரை அடையாளம் காட்ட முடியவில்லை.

ஆக மொத்தத்தில் சமுர்த்தி திட்டத்தால் மக்கள் பயனடைந்தார்களா, சமுர்த்தி உத்தியோகத்தர்களும், அதிகாரிகளும் பயனடைந்தார்களா என்று கேள்வியெழுப்பினால், தலையை சொறிவதை தவிர வேறு வழியில்லை. ஏனென்றால், அடுத்தடுத்த வாரங்களில் நாம் வெளிப்படுத்தவுள்ள தகவல்களும், ஆதாரங்களும் அதிர்ச்சியை மட்டுமல்ல, மட்டக்களப்பு சமுர்த்தி செயற்திட்டத்தின் பலவீனத்தையும் வெளிப்படுத்தும்.

**(உண்மை வெளிக்கும்)**

**தீபம்**

989/1, பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு, நல்லூர்

**தொடர்புகளிற்கு**

ஆசிரியர்பீடம் : 0214927562 விநியோகம், விளம்பரம் : 0214927542, 0768255563

அலுவலகம் : 0214927561 கருத்துக்கள், முறைப்பாடுகள் : 0768255562

செய்திகள் அனுப்ப : deepamdesk@gmail.com





மேல் வரிசையில் பற்கள் கிடையாது. கீழிருக்கும் சில பற்கள் மேல் உதட்டை அழுத்தி வெளி வந்து நிற்கும். தலை வலது பக்கம் சாய்ந்திருக்கும். நெற்றியை அதிகம் மறைக்காத மயிர். கமராவும், சென்சாரும் பொருத்தப்பட்ட கண்ணாடி. கணினி இணைக்கப்பட்ட சக்கர நாற்காலி. மிகக் குறைவான எடை கொண்ட பொட்டலமாய், சுருண்டு உட்கார்ந்திருக்கும் அந்த உருவம். கன்னத்தின் சில தசைகள் தவிர உடலின் அத்தனை பாகங்களும் செயலிழந்து போய்விட்டன. எந்தவொரு மனிதனும் வாழவே முடியாத சூழல்... ஆனால், அளப்பறிய சாதனைகளோடு சரித்திரம் படைத்து வரும் ஓர் அதி அற்புதன்... இவ்வளவு வலிகளையும் கடந்து அவர் சிரிப்பார். எலும்போடு ஒட்டியிருக்கும் அவரின் கன்னத் தசைகள் சிறிய அசைவைக் கொடுக்கும். அது அத்தனை அழகாய் இருக்கும்... உலக அண்டவியல் ஆராய்ச்சியின் அறிவு அழகன் ஸ்டீபன் ஹாக்கிங்... இன்று நம்மத்தியில் இல்லை. இந்த உலகத்தின் மனச்சாட்சியின் மீது தொடர்ந்து கேள்வியெழுப்பிக் கொண்டிருந்தன அவரது அறிவியல் கண்டுபிடிப்புக்களும், நியாயத்தின் குரலும். பூமியின் மீதான மனிதர்களின் எதேச்சாதிகார செயல்களை தொடர்ந்து கண்டித்து வந்தார். இன்று நவீன அறிவியலின் பிதாமகன் நம்முடன் இல்லை.

அது இரண்டாம் உலகப் போர் சமயம். மருத்துவம் படிக்கும் பிராங்கும், தத்துவம் படிக்கும் இசோபெல்லும் காதல் வயப்படுகிறார்கள். கல்யாணம் செய்து 'கொள்கிறார்கள். எங்கும் போர். பீரங்கிகள், துப்பாக்கிகள், வெடிகுண்டுகளின் சத்தங்களுக்கு மத்தியில், அந்தக் குழந்தையின் அழுகுரல் அத்தனை இன்பமானதாய் அவர்களுக்கு இருக்கிறது. கருவறைக் கடந்து பூமியில் கால் வைத்த அந்தக் குழந்தை எதிர்காலத்தில் அண்டம் கடக்கும் ஆராய்ச்சிகளை மேற்கொள்ளும் என்ற எண்ணம் துளியளவும் அவர்களுக்கு இருந்திருக்க வில்லை. அது 1942 ஆம் ஆண்டு, ஜனவரி 8 ஆம் திகதி. கலிலியோ பிறந்து சரியாக முந்நூறு ஆண்டுகள் ஆன சமயம்.

ஸ்டீபன் ஹாக்கிங் வளரத் தொடங்குகிறார். பள்ளியில் ஒரு சராசரி மாணவன்தான். ஆனால், ஏன்? எப்படி?, என்ற கேள்விகள் எதைப் பார்த்தாலும், எப்பொழுதும் அவனுள் எழுந்துகொண்டேயிருந்தது. அதற்கான விடைகளைத் தொடர்ந்து தேடத் தொடங்குகிறான். எல்லாவற்றிற்கும் மேலாக, இந்த உலகம் எப்படித் தோன்றியது என்ற பெரும் கேள்வி அவனுள் கனன்று கொண்டே இருந்தது.

1960 களில் கல்லூரியில் படித்துக்கொண்டிருந்தார். அந்தச் சமயம் ALS எனப்படும் "Amyotrophic Lateral Sclerosis" என்ற குறைபாட்டு நோயால் பாதிக்கப்பட்டார். கொஞ்சம், கொஞ்சமாக அவரின் உடல் உறுப்புகள் செயலிழக்கத் தொடங்கின. செயலிழக்கும் உறுப்புகளுக்கு ஈடான கருவிகளைத் தானே உருவாக்கி அதை ஈடு செய்து வந்தார். ஒரு கட்டத்தில் பெரும்பாலான உறுப்புகள் செயலிழந்துவிட்ட நிலையில், "ஈக்வலைஸர்" என்ற கம்ப்யூட்டர் ப்ரோக்ராம் உதவியோடு... இன்று கன்னத் தசைகளின் அசைவுகள் மூலம், கம்ப்யூட்டர் குரலில் பேசி வருகிறார்.

இது இவரின் அறிமுகங்கள். இவரின் அடையாளங்கள் அண்டவியல் ஆராய்ச்சிகள்தாம். டைம்மெஷின் (Time Machine), பிளாக் ஹோல் (Black Hole), ஏலியன் (Alien), பிக்பேங் தியரி (Bigbang Theory) என அண்ட அறிவியலின் பல மைல்கல் ஆராய்ச்சிகளை மேற்கொள்பவர். இமேஜினரி டைம் (Imaginary Time) என்ற கோட்பாட்டின் அடிப்படையில், இவர் எழுதிய "எ ப்ரீஃப் ஹிஸ்டரி ஒஃப் டைம்" (A Brief Histroy of Time) என்ற புத்தகம் தமிழ் உட்பட 35 உலக மொழிகளில் மொழிப் பெயர்க்கப்பட்டுள்ளது. தி யூனிவர்ஸ் இன் அ நட் ஷெல் (The Universe in a nutshell), மை ப்ரீஃப் ஹிஸ்டரி (My Brief History) உட்பட பல்வேறு நூல்களை இயற்றியுள்ளார். ஹாலிவுட்டின் பல படங்கள் இவரின் கோட்பாடுகளைத் தழுவித்தான் எடுக்கப்படுகின்றன.


ஸ்டீபன் ஹாக்கிங் (1942. 01. 08 2018.03.14)

கல்லூரி காலத்தில் தன்னுடன் படித்த தோழி ஜேன் வைல்டை காதலித்து திருமணம் செய்து கொண்டார். 30 வருடங்கள் இவர்கள் இருவரும் ஒன்றாக வாழ்ந்தனர். பின்னர், தன்னை கவனித்துக் கொண்ட செவிலியர் எலைனுடன் காதல் கொண்டு அவரைத் திருமணம் செய்து கொண்டு பத்தாண்டுகள் அவரோடு வாழ்ந்தார். உடல் இச்சைகள் கடந்த அழகான காதலாக அந்தக் காதல் இருந்தது.

அதிதீவிர இடதுசாரி சிந்தனை கொண்டவர். பாலஸ்தீனர்களுக்கு எதிரான அநீதிகளை எதிர்த்து இஸ்ரேலில் பங்கேற்க வேண்டிய மிக முக்கிய அறிவியல் கூட்டத்தைப் புறக்கணித்தார். வியட்நாம் மீதான போர், ஈராக் மீதான அமெரிக்கப் படையெடுப்பு என தன் சக்கர நாற்காலியில் பயணித்தபடியே எளிய மனிதர்களின் குரலுக்காக, குரலே இல்லாத நிலையிலும் குரல் கொடுத்தார்.

ஏலியன், வேற்று கிரகம், என 76 வயதில் மரணிக்கும் வரை தொடர்ந்து இயங்கிய ஸ்டீபன், மனித சமுதாயத்திற்கு மிக முக்கிய எச்சரிக்கை மணியை அடித்துள்ளார்

" நம்முடைய பேராசையினாலும், முட்டாள்தனத்தாலும் இந்த பூமியை பெருமளவு சேதப்படுத்தி வருகிறோம். இந்த பூமி 100 ஆண்டுகளுக்கு மேல் நிச்சயம் தாங்காது. மாற்று கிரகத்தைத் தேடி மனித இனம் நகர வேண்டிய காலகட்டம் இது... மரணம் என்னை ஒவ்வொரு நொடியும் துரத்திக் கொண்டிருக்கிறது. ஒவ்வொரு நொடியையும் ரசித்து, பெரும் ஈடுபாட்டோடு மனித இன தொடர்ச்சிக்காகப் போராடிக்கொண்டிருக்கிறேன். வாழ்க்கை எவ்வளவு கடினமானதாக இருந்தாலும், வெற்றிக்கான வழி அதில் இருக்கவே செய்கிறது... நிச்சயம் என் ஆராய்ச்சியில் நான் வெல்வேன்... அதன் மூலம் மனித இனம் தொடர வழிவகுப்பேன் " என்றார்.

அவர் நமக்கு இதுவரை சொல்லி விட்டு சென்றவையே, மனித இனம் தன்னை சுயவிமர்சனம் செய்து கொள்வதற்கு போதுமானவைதான்.

# முதலமைச்சருக்கு பொருத்தமானவரா மாவை?

நம்மாழ்வார்




வடமாகாணசபையின் ஆயுள்காலம் அடுத்த செப்ரெம்பர் மாதத்துடன் முடிவடைகிறது. அனேகமாக செப்ரெம்பரின் பின்னர் வடமாகாண சபை தேர்தல் நடக்க வேண்டும். இதே அரசியல் சூழ்நிலை நீடிக்குமென்றால், தேர்தல் பின்னால் செல்ல வாய்ப்பில்லை. இப்பொழுதுதான் உள்ளூராட்சிசபை தேர்தல் பரபரப்பை முடித்த கட்சிகளிற்கும், மக்களிற்கும் மீண்டும் ஒரு தேர்தல் காலத்தை சந்திக்க வேண்டியிருக்கும்.

தேர்தலென்பது நமது ஜனநாயக கடமைதானே. அதை சந்திப்பதில் சிக்கல் ஒன்றுமிருக்காது. ஆனால், தமிழ் அரசியல் எப்படி சின்னாபின்னப்படும் என்பதை நினைக்கத்தான், படபடப்பு கூடுகிறது. வடமாகாணசபையை கைப்பற்றும் வாய்ப்பு யாருக்கு உண்டு? யார் முதலமைச்சராவார்? கூட்டாட்சிக்கான வாய்ப்பு ஏற்படுமா? என்ற ஏராளம் கேள்விகள் உள்ளன. இந்த கேள்விகள் எல்லாவற்றிற்கும் அடிப்படையான விசயம் அடுத்த முதலமைச்சர் விக்னேஸ்வரனா? மாவை சேனாதிராசாவா? என்பதே.

இந்த கேள்வியிலிருந்தே மேலேயுள்ள கேள்விகளிற்கான விடையை கண்டறிய வேண்டியுள்ளது.

அடுத்த வடக்கு முதலமைச்சராவதற்கான வாய்ப்பு இரண்டு பேருக்கு மட்டுமேயுள்ளது. ஒன்று க.வி.விக்னேஸ்வரன். மற்றது மாவை சேனாதிராசா.

அடுத்த தேர்தலில் இருவருமே எதிரெதிர் முனையில் களத்தில் நிற்கவும் வாய்ப்பிருக்கிறது. அப்படி நின்றால், தமிழ் அரசியலில் என்றுமில்லாத கொதிநிலையுடன், மாற்றங்கள் நிகழ வாய்ப்புண்டு. அல்லது, எதிர்பார்க்கப்பட்ட இருவரில் யாராவது ஒருவர் களத்தில் நிற்காமலிருக்கவும் வாய்ப்புண்டு. இரண்டு சந்தர்ப்பங்களில் அது நடக்கலாம். முதலாவது, மாவையின் தெரிவை சம்பந்தன் நிராகரிக்கலாம். (அதற்கான வாய்ப்புள்ளதா என்பதை இந்த கட்டுரையின் பின்பகுதியில் சொல்கிறேன்). அப்படி நடந்தால், விக்னேஸ்வரன் முதலமைச்சர் வேட்பாளராக இருப்பார். இரண்டாவது, மாவைதான் தமிழரசுக்கட்சியின் வேட்பாளராக களமிறக்கப்படும்போது, போட்டிக்களத்தில் இருந்து விக்னேஸ்வரன் வெளியேற வேண்டும். இதற்கு வாய்ப்புள்ளதா? மாவையின் வெற்றி வாய்ப்பு என்ன? அவர் முதலமைச்சர் பதவிக்கு பொருத்தமானவரா? இவற்றிலிருந்து இந்த கட்டுரையை ஆரம்பிக்கலாம்.

மாவை சேனாதிராசாவின் அப்டேற் வெர்சன்தான் விக்னேஸ்வரன் என்று கடந்தவாரம் குறிப்பிட்டிருந்தேன். அப்டேற் வெர்சனே இந்தளவு சொதப்பி, விமர்சனங்களை சந்தித்தால், அடிப்படி வெர்சன் (basic version) எப்படியிருக்குமென்பதை சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

மக்களை உணர்ச்சிமயப்படுத்தும் வழக்கமான தமிழ் தேசிய பேச்சு, அரசியல் மொழியின் மேம்பட்ட வடிவமாகத்தான் விக்னேஸ்வரன் இருக்கிறார். அதுதான் அவரது கவர்ச்சி. நீதியரசர், இந்து தோற்றம் என்பன மேலதிக ப்ளஸ். இவையெல்லாவற்றிலும் மாவை, வெகுவாக விக்னேஸ்வரனை விட பின்தங்கியிருக்கிறார். தமிழரசுக்கட்சி ஆதரவுத் தளமும், நீண்டகால அரசிய லிருப்பும்தான் அவரது அடித்தளம்.

தொலைபேசி நிறுவனங்கள் ஒரு வெற்றிகரமான உற்பத்தியை செய்தால், நீண்டகாலத்திற்கு அதன் அப்டேற் வெர்சன்களை உருவாக்கிக் கொண்டிருக்கும். சம்சுங் கலக்சி, அப்பிள் ஐ என்பன நம் வாழும்கால உதாரணம். நொக்கியா, விண்டோஸ் நிறுவனங்களில் அப்டேற் வெர்சன்கள் சறுக்கிய சமகால உதாரணமும் உள்ளது. அவையெல்லாம் அடிப்படை வெர்சன்களிற்கே திரும்பி சென்றன. இந்த தொழில்நுட்ப உதாரணம், நம் அரசியல் களத்திலும் நடக்குமா என்பதை ஆராயலாம்.

உள்ளூராட்சிசபை தேர்தலை நடத்துவதற்கு மைத்திரிபால சிறிசேன விரும்பாமலிருந்தது ஒன்றும் இரகசியமல்ல. அவரது விருப்பமின்மைக்கு காரணம், இந்த தேர்தலில் சறுக்கினால், தொடர்ந்து சறுக்க வேண்டியதாகிவிடும் என்பதே. வெகுஜன மனநிலை என்பது தேர்தல் களத்தில் அனேகமாக ஒரேவிதமாகவே செயற்படுகிறது. ஒரு தேர்தலில் சறுக்கி, சடுதியாக அடுத்த தேர்தலில் மேலெழுவதென்பது, ஏதாவது விதிவிலக்கான சம்பவங்கள் அமைந்தால் மாத்திரமே சாத்தியம். சறுக்கல் நிகழ்ந்தால், ஒரு கால இடைவெளியின் பின்னரே மக்கள் தூக்கி நிறுத்துவார்கள். இந்த உறைக்கும் பாடத்திலிருந்தே தமிழரசுக்கட்சி முடிவுகளை எடுக்க வேண்டும்.

இன்றைய திகதியில், தமிழரசுக் கட்சியின் அடுத்த முதலமைச்சர் வேட்பாளர் விக்னேஸ்வரன் அல்ல. அது, மாவை சேனாதிராசாதான். இம்முறை மாவை போட்டியிடுவதில் பெருமளவிற்கு மாற்றம் - இருக்காதென்றுதான் தெரிகிறது. கடந்த தேர்தலிலும் மாவை இப்படியான கனவுகளுடன்தான் திரிந்தார். ஆனால் அது நிறைவேறவில்லை. இம்முறையும் அப்படி அவர் கனவு கண்டு, கடைசியில் அது பலிக்காமல் விட வாய்ப்பிருக்கிறதல்லவா என்று யாரும் கேட்கலாம். அக,புற அடிப்படையில் சூழ்நிலையை புரிந்துகொண்டால், இந்த கேள்விக்கான பதிலை கண்டடையலாம்.

விக்னேஸ்வரன் முதலமைச்சர் வேட்பாளராக நிறுத்தப்பட வேண்டுமென சம்பந்தன் விரும்பிய அரசியல் சூழ்நிலை இப்போதில்லை. அதற்கு நேர் எதிரானது. கொழும்பு அரசுடன் அதிகபட்சமாக இணங்கி செல்லும் அரசியல் போக்கைத்தான் தமிழரசுக்கட்சி விரும்புகிறது. விக்னேஸ்வரன் முதலமைச்சராக சமயத்தில், மஹிந்த ராஜபக்சவுடன் மல்லுக்கட்டிக் கொண்டிருந்தார்கள் தமிழர்கள். மாகாணசபையும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் முக்கியமான அரசியல் அங்கமாக இருக்குமென அப்பொழுது சம்பந்தர் திட்டமிட்டார். எனினும், விக்னேஸ்வரன் நீளக்கயிற்றில் நடக்க தொடங்க, மாகாணசபையை ஒரு அரசியல் முனையாக உருவாக விடாமல் செய்ததில்' தமிழரசுக் கட்சிக்கும் கணிசமான பங்குண்டு. தீர்மானமெடுக்கும் தமிழ் தேசிய அரசியலில் விக்னேஸ்வரனின் பங்கை இல்லாமல் செய்ய வேண்டுமென்பதிலும், கட்சி கவனமாக இருந்தது. மொத்தத்தில், 2013 இல் விக்னேஸ்வரன் அரங்கிற்கு அழைத்து வரப்பட்ட புறச்சூழல் இப்பொழுது இல்லை.

கட்சிக்குள்ளான அகச்சூழலும் முன்னரைப் போல இல்லை. சம்பந்தரின் பிடி கட்சிக்குள் பெருமளவு இளகிவிட்டது. தனது வயதை கருத்தில் கொண்டு, கட்சியின் அன்றாட செயற்பாட்டில் பெருமளவிற்கு தலையிடுவதை தவிர்த்துவிட்டார். முதலமைச்

தொடர்ச்சி அடுத்தபக்கம்...

சரிற்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணையை வாபஸ்பெற வைப்பதற்கு சம்பந்தர் அதிகளவில் ரிஸ்க் எடுக்க வேண்டியிருந்தது. ஒரு வார்த்தையில் விசயத்தை முடிப்பதென்பது இல்லாமல் போய், கட்சியின் முக்கியஸ்தர்கள் பலருடன் தனித்தனியாக பேச வேண்டியிருந்தது. இப்படியொரு ரிஸ்க் எடுத்து விக்னேஸ்வரனை இன்னொருமுறை கட்சிக்குள்ளால் முதலமைச்சர் வேட்பாளராக்க முடியுமா என்பது தெரியவில்லை.

விக்னேஸ்வரனிற்கும் இது தெரியும். அவர் எப்படி இதை கையாளப்போகிறார் என்பதுதான் தெரியவில்லை. விக்னேஸ்வரன் அடுத்த மாகாணசபை தேர்தலில் களமிறங்குவார் என்றுதான் தெரிகிறது. ஆனால், அதை அவர் இன்னும் பகிரங்கமாக்காமல் இருக்கிறார். அவரது மௌனத்திற்கு இரண்டு காரணம்தான் இருக்க முடியும். ஒன்று அரசியலை மிக சுலபமாக புரிந்து வைத்திருக்க வேண்டும். அல்லது, அதிக சிரமமானதாக நினைக்கலாம்.

நம்பிக்கையில்லா பிரேரணை சமயத்தில் திரண்ட இளைஞர்கள், எழுக தமிழில் திரண்ட மக்களை பார்த்துவிட்டு, எந்த சமயத்தில் தான் வீதிக்கிறங்கினாலும் மக்கள் பின்னால் வருவார்கள் என அவர் நினைக்கலாம். இரண்டு நிகழ்விலும் மக்களை திரட்டியதில் தமிழ் தேசிய மக்கள் முன்னணிக்கு கணிசமான பங்குண்டு. அந்த சனக்கூட்டத்தை தன்னுடையதாக மட்டும் நினைப்பதால், அரசியலை மிகச்சுலபமானதாக அவர் நினைக்க கூடும்.

அல்லது, அதிக ரிஸ்க்கியானதாக நினைத்து, மௌனம் காக்கிறாரோ தெரியவில்லை. இப்பொழுதே நகர்வுகளை ஆரம்பித்தால், தனது போட்டியாளர்களிற்கு (தமிழரசுக்கட்சி) கையாள வாய்ப்பாக அமைந்துவிடும் என நினைக்கலாம். ஆனால், இதிலுள்ள பாதகம் என்னவென்றால், விக்னேஸ்வரனிற்கு அரசியல் நண்பர்களென யாரும் இப்பொழுது கிடையாது. அவரது மௌனத்தை மொழிபெயர்த்தபடி பின்தொடரும் குருகுல பரம்பரையெதுவும் கிடையாது.

தமிழரசுக்கட்சியிலிருந்து வெளியேறினால் விக்னேஸ்வரன் பரந்துபட்ட கூட்டணியொன்றை உருவாக்க முடியுமா என்ற கேள்வியும் உள்ளது. ஏனெனில், தமிழ் தேசிய மக்கள் முன்னணி, ஈ.பி.ஆர்.எல்.எவ் போன்றவற்றுடன் கூட்டு வைக்க முடியாதென அவர் நினைக்கிறார். மாற்று அணி பிரமாண்டமாக இருந்தால், ரெலோ மற்றும் புளொட் என்பன எப்படியான முடிவெடுக்குமென உறுதியாக கூற முடியாது. மாவை சேனாதிராசா சிறப்பான முதலமைச்சர் தெரிவாக இருப்பார் என்று கருத முடியாதென்ற அபிப்பிராயம் இரண்டு கட்சிகளிடமும் உள்ளன. தமிழ் தேசிய மக்கள் முன்னணி மாகாணசபை தேர்தலில் மதில்மேல் பூனையாக இருந்து, முதலமைச்சர் தனி அணியாக களமிறங்கினால், மாற்று அணி பிரமாண்டாக உருவாக வாய்ப்பிருக்காது.

இந்த களச்சூழல்தான் மாவை சேனாதிராசாவை துணிச்சலாக களமிறங்க வைத்துள்ளது. தமிழ் தேசிய மக்கள் முன்னணி, ஈ.பி.ஆர்.எல்.எவ் இரண்டையும் தவிர்த்து விக்னேஸ்வரன் களமிறங்கினால் சுலபமாக தோற்கடிக்கலாமென கட்சியின் உயர்மட்ட கூட்டத்தில் பேசப்பட்டுள்ளது.

இந்த சூழலை அடிப்படையாக வைத்தே, மாவை சேனாதிராசா தனது வெற்றியில் அபரிதமான நம்பிக்கை வைத்துள்ளார். ஆனால், இந்த சூழல் ஒன்றே மாவை சேனாதிராவை கரையேற்றுமா?

நிச்சயம் இல்லை. ஏனெனில், மாகாணசபை தேர்தல் சமயத்தில் இதேவிதமான சூழல் நிலவுமென சொல்ல முடியாது. இந்த சூழலை தவிர்த்து, கவனத்தில் கொள்ள வேண்டிய நிறைய விடயங்கள் உள்ளன. முக்கியமாக, வடமாகாணசபைக்கு அப்டேற் வெர்சனே அவ்வளவாக பலனளிக்கவில்லையென தமிழரசுக் கட்சியினர் குற்றம்சாட்டிவரும் நிலையில், அடிப்படை வெர்சன் பலனளிக்குமா?

மாவை சேனாதிராசா நீண்டகால செயற்பட்டாளராக இருந்தார். அதில் இரண்டாவது கேள்விக்கு இடமில்லை. ஆனால் வெற்றிகரமான தலைவரா? சிறந்த நிர்வாகியா? என கேட்டால், அதற்கு பதிலளிப்பது சிரமம். அவர் தமிழரசுக்கட்சியின் தலைவராக பதவியிலுள்ள சில வருடகாலத்தைதான் அளவுகோலாக கொள்ள முடியும்.

இரண்டு உதாரணங்கள் சொல்கிறோம். உள்ளூராட்சி தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர் தமிழ் தேசிய கூட்டமைப்பின் அங்கத்துவ கட்சி தலைவர்கள் சந்தித்து ஆசனப்பங்கீட்டை முடித்திருந்தார்கள். இந்த பங்கீடு முடிந்ததும், தமிழரசுக்கட்சியின் “சிற்றரசர்கள்” பலர் அதற்கு எதிர்ப்பு தெரிவித்து மாவை சேனாதிராசாவிற்கு குடைச்சல் கொடுத்துள்ளனர். இதையடுத்து, ஏற்கனவே எடுக்கப்பட்ட முடிவுகளை இரத்து செய்துவிட்டு, பங்காளி கட்சி தலைவர்களை மீண்டும் அழைத்தார். பங்காளி கட்சிகளின் தலைவர்களின் கூட்டத்தில், மாவைக்கு குடைச்சல் கொடுத்த உறுப்பினர்களையும் அழைத்து வைத்திருந்தார். கட்சி தலைவர்கள் மட்டும் கூடி முடிவெடுக்க வேண்டிய விசயத்தில், கட்சியின் பிரதேசமட்ட தலைவர்களையும் அழைத்து வைத்திருந்தார். இதனாலேயே பங்காளி கட்சிகளுடன் மோதல் ஏற்பட்டது. தமிழ் தேசிய கூட்டமைப்பை விட்டு வெளியேறுவதாக ரெலோ அறிவித்தது. பின்னர், சம்பந்தன் தலையிட்டே நிலைமையை சுமுகமாக்கினார்.

மற்றது, உள்ளூராட்சி தேர்தலிற்காக சாவகச்சேரி நகரசபை வேட்புமனு தாக்கல் செய்தது. வேட்புமனுவில் குளறுபடி நடந்துவிட்டதாக கூறி மார்ட்டின் வீதியில் அருந்தவபாலன் குமுறிக்கொண்டிருக்க, “சாவகச்சேரி எங்கள் கையைவிட்டு சென்றுவிட்டது” என கூறிவிட்டு மாவை வெளியேறி சென்றுவிட்டார். பின்னர் “சிலபல” வேலைகள் செய்து, சிவாஜிலிங்கம்தான் வேட்பாளர் பட்டியலை இறுதி செய்திருந்தார்.

கட்சிக்கு பலமான தலைமைத்துவம் கொடுக்க மாவை சேனாதிராசாவால் இதுவரை முடியவில்லை. மாவையிடம் தமிழரசுக்கட்சி தலைமையை ஒப்படைத்துவிட்டு, கூட்டமைப்பின் அன்றாட நடவடிக்கைகளிலிருந்து சம்பந்தன் ஒதுங்கிக்கொண்ட பின்னர், கூட்டமைப்பிற்குள் அதிகமான முரண்பாடுகள் தோன்றின. முதலமைச்சரிற்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டு வரப்பட்டது.

மொத்தத்தில் மாவை தன்னையொரு ஆளுமையான தலைவராக நிலைநிறுத்திக் கொள்ளவில்லை. விக்னேஸ்வரனும் பதவிக்குவர முன்னர் அப்படி நிரூபிக்கவில்லைதான். பதவியேற்ற பின்னரும் நல்லதொரு நிர்வாகியாக நிரூபிக்கவில்லை. ஆனாலும், அவர் மீதான வெகுஜன கவர்ச்சியால் அந்த விமர்சனங்கள் மேலெழவில்லை. மாவைக்கு அப்படியொரு வெகுஜன கவர்ச்சி கிடையாது. மாறாக, சமீபகாலத்தில் அளவிற்கதிகமான விமர்சனத்தைதான் வாங்கி வைத்திருக்கிறார்.

தமிழ் அரசியலுக்கு அடிப்படையாக தகுதியாக உள்ள, “ஏ சிங்கள அரசே! சமஷ்டி அடிப்படையில் தீர்வைத்தா. இல்லாவிட்டால் ஐநாவில் முறையிடுவோம். சர்வதேச சமூகத்தின் உதவியுடன் சமஸ்டியை ஏற்படுத்துவோம். பிரபாகரன் ஒரு மாவீரன்” என்றவிதமான பேச்சில் மாவையும் நன்றாக ஸ்கோர் செய்வார்தான். ஆனால் இந்தவகை பேச்சில் இப்பொழுது அப்டேற் வெர்சன்களாக நிறையப்பேர் வந்துவிட்டனர். அந்த வெர்சன்களே சலிப்பூட்டிக் கொண்டிருக்க, basic version வெர்க் அவுட் அகுமா? இந்த ஒற்றை காரணமே மாவையை முதலமைச்சராக்குமா?



விக்னேஸ்வரனை போலவே, மாவையும் மூத்தவர். போதாதற்கு உடல்நல பிரச்சனைகளும் உள்ளன. முற்றிலும் இளைய, சரியான நிர்வாக அச்சு ஏற்படுத்தப்படாத வடமாகாணசபைக்கு புத்துயிர் ஊட்ட மாவையால் முடியாது. அதிகம் பேசிப்பேசியே அரசியல் செய்து வந்த அரசியல் வழியில் வளர்ந்தவர் மாவை. அவரால் அதை மட்டுமே செய்ய முடியுமென்பதைதான், தமிழரசுக்கட்சியின் தலைவர் என்ற அவரது பதவிக்காலம் நமக்கு சொல்லும் உண்மை.

மாவைக்கு எதற்கு இன்னொரு சுமை?










# வட கொரிய - அமெரிக்க உறவில் மாற்றத்துக்கு காரணமானவர்கள் யார்?

வட கொரியாவும் அமெரிக்காவும் போன வாரம் வரை மீசையை முறுக்கிக்கொண்டு (இரண்டு தலைவர்களிற்கும் மீசை இல்லையென்பது வேறு விசயம்!) மல்லுக்கட்டிக் கொண்டிருந்தார்கள். மேசையில்தான் அணுகுண்டு ஸ்விட்சை வைத்திருக்கிறேன், ஏதோ தேனீர் கோப்பையை வைத்திருப்பதைபோல என ஆளாளுக்கு அடித்துவிட, அகில உலகமே நெஞ்சில் கைவைத்துக் கொண்டு பதறியது.

ஆனால், லொஜிக்கே இல்லாத தமிழ் சினிமாவில் திடீரென ஏற்படும் திருப்பத்தை போல, வடகொரியாவும் அமெரிக்காவும் கடந்தவாரம் இணக்கத்திற்கு வந்துள்ளன. இந்த லொஜிக் இல்லா மஜிக் எப்படி நிகழ்ந்தது?

அதற்கு காரணம் ஜாங் ஈயங், சூஹூன் ஆகியோரே!

இப்படி மொட்டையாக சொன்னால், இது யார் சங்கி மங்கி ஆட்களா என நீங்கள் குழம்புவீர்கள். விபரமாக சொல்லிவிடுகிறோம்.

இந்த ஜாங் ஈயங் என்பவர் தென்கொரியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர். சூஹூன், தென் கொரியாவின் உளவுத்துறை தலைவர்.

மொத்தத்தில், தென்கொரியாதான் இந்த திருப்பத்திற்கு காரணம்! (இருக்காதா பின்னே, எங்கோயிருக்கும் நமக்கே பக்குபக்கென அடித்தால், வடகொரியாவிற்கு பக்கத்திலுள்ள அவர்களிற்கு எப்படியிருக்கும்?)

மூன்று வாரங்களின் முன்னர், இவர்கள் இருவரும்தான் வட கொரிய தலைவர் கிம் ஜோங்உன் அழைப்பின் பேரில் வட கொரியா சென்ற தென் கொரிய குழுவில் இடம்பெற்ற முக்கிய பிரதிநிதிகளாவர். அப்போது வட கொரியா அளித்த தகவலை அமெரிக்க அதிபர் டிரம்ப்புடன் அவர்கள் பகிர்ந்ததன் காரணமாகவே தற்போது இருநாடுகளுக்கிடையேயான உறவில் புதிய முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

தென் கொரிய அதிபர் மூன் ஜேஇன்னால் அந்நாட்டின் சிறப்பு பிரதிநிதிகளாக தேர்ந்தெடுக்கப் பட்ட இவர்களிடம் அப்படியென்ன விசேசம் உள்ளது?

**ஜாங் ஈயங்**

தென் கொரியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகராக இருக்கும் 71 வயதான இவர், இத்துறையில் மிகுந்த அனுபவமும், அமெரிக்காவுடன் இணைந்து செயல்பட்ட அனுபவமும் கொண்டவராவார். மூன் ஜேஇன்னின் அதிபருக்கான தேர்தல் பிரச்சாரத்தின் போது வெளியுறவு கொள்கை ஆலோசகராக செயல்பட்ட இவர், 2017 ஆம் ஆண்டு மே மாதம் தென் கொரியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகராக நியமிக்கப்பட்டார்.

தேசிய பாதுகாப்பு ஆலோசகர் பணிக்கான "சிறந்த நபர்" என்று மூன் ஜேஇன்னால் இவர் கூறப்பட்டார்.

**சூ ஹூன்**

உளவுத் துறை தலைவரான 63 வயதாகும் சூ ஹூன், இரு நாடுகளுக்கிடையேயான பேச்சுவார்த்தை நடப்பதற்கு முக்கிய காரணமாக செயல்பட்டார். கடந்த 2000 ஆம் ஆண்டு ஜூன் மாதம் மற்றும் 2007 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் இரு கொரிய நாடுகளுக்கிடையே முக்கிய பேச்சுவார்த்தைகள் நடத்துவதற்கான இரகசிய பேச்சுவார்த்தையை இவர் வட கொரியாவுடன் நடத்தினார்.

உயிரிழந்த வட கொரிய தலைவரான கிம் ஜோங்இல்லை இவர் 2002 மற்றும் 2007 ஆம் ஆண்டிற்குட்டபட்ட காலத்தில் பலமுறை சந்தித்துள்ளார்.

இவர் கடந்த 1996 முதல் 1999 ஆம் ஆண்டிற்குட்பட்ட காலத்தில் கொரிய தீபகற்பத்தின் கூட்டு எரிசக்தி மேம்பாட்டு திட்டத்தின் (கீடோ) தலைவராக செயல்பட்டபோதுதான் வட கொரியவுடனான பேச்சுவார்த்தையை மேற்கொள்ளும் திறனை இவர் பெற்றார்.

---



# அமெரிக்கா -வடகொரியா பேச்சுவார்த்தை: இனி என்ன நடக்கும்?

அமெரிக்க வடகொரிய அதிபர்கள் நேரில் சந்தித்து பேசவுள்ளனர். பேச்சுவார்த்தைகள் எப்படி இருக்கும் என்பதை ஊகிக்கமுடியாது என்றாலும், அமெரிக்கா மற்றும் வட கொரியா தலைவர்கள் முதன்முறையாக சந்திப்பது முக்கியத்துவம் மிக்கது என்பதை மட்டும் உறுதியாக கூறமுடியும். இதற்கு முன்பு பல முன்னாள் அமெரிக்க அதிபர்கள் பலர் வட கொரிய தலைவர்களை சந்தித்திருந்தாலும், அதிபராக பதவிவகித்த காலத்தில் யாரும் அவர்களை சந்தித்ததில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

சீனத் தலைவரான மாவோவை அதிபர் நிக்சன் சந்தித்ததைவிட, தற்போது நடைபெறும் டிரம்ப்கிம் சந்திப்பை குறைவாக மதிப்பிடமுடியாது.

ஆனால், இன்னும் குறுகிய காலமே உள்ள நிலையில், சந்திக்கும் நாள், நேரம், இடம் என எந்த தகவலும் இதுவரை தீர்மானிக்கப்படவில்லை.

இரு நாட்டு எல்லையில் உள்ள ராணுவம் விலக்கப்பட்ட பகுதியான பன்முன்ஜோமில் என்ற 'சமாதான கிராமத்தில்' இந்த சந்திப்பு நடக்க "ஊகமான வாய்ப்பு" உள்ளது. அதேவேளை, சீனா அல்லது வேறு நடுநிலையான நாட்டிலும் நடக்கலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

அணுசக்தி திட்டம் தொடர்பாக 2012க்கு பிறகு நேரடியாக பேசுவது இதுவே முதல்முறையாகும். தென் கொரிய தலைவர் மூன் ஜேஇன்னை ஏப்ரல் மாதத்தில் பன்முன்ஜோமில் சந்திக்க வட கொரிய அதிபர் திட்டமிடப்பட்டுள்ள போதிலும், இதுவரை கிம் ஜோங்உன் எந்தவொரு வெளிநாட்டுத் தலைவரையும் சந்தித்ததில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

அணுஆயுதங்களை குறைக்கவேண்டும் என்பது விவாதத்தில் சந்தேகத்திற்கு இடமின்றி இடம்பெறும். ஆனால் "அணுஆயுதத்தை குறைப்பதற்கு" உறுதிபூண்டிருப்பதாக கிம் ஜோங்உன் கூறியிருந்தாலும், வட கொரியா இதுவரை அதன் அணு ஆயுதத்தை கைவிடுவதாக வாக்குறுதி எதுவும் கொடுக்கவில்லை.

பேச்சுவார்த்தையில் இடம் பெறக்கூடிய பிற முக்கியமான விடயங்கள்: பியோங்யாங்கில் சிக்கியிருக்கும் அமெரிக்கர்களைத் நாட்டுக்கு திரும்ப அனுப்ப கோரிக்கை வைக்கலாம்.

வடகொரியா அணுஆயுதத் திறன் கொண்ட நாடாக அங்கீகரிக்கப்பட்டு, சாத்தியமான சமாதான உடன்படிக்கை கையெழுத்திடப்பட வேண்டும் என்று வடகொரியா எதிர்பார்க்கிறது.

சமாதான உடன்படிக்கையின் ஒரு நிபந்தனையாக தென் கொரியாவிலிருந்து அமெரிக்கத் துருப்புக்களை திரும்பப்பெறவேண்டும் என்று வட கொரியா வலியுறுத்தக்கூடும். இது பேச்சுவார்த்தைகளில் சிக்கல்களை அதிகரிக்கக் கூடும்.

சமாதான உடன்படிக்கை கையெழுத்தானால் பத்து ஆண்டுகளுக்கு பிறகு தென் கொரியாவில் இருந்து அமெரிக்க துருப்புக்கள் வெளியேறும் என்று கிம் எதிர்பார்க்கிறார்..

இதேவேளை, வடகொரியா மீதான தடைகள் எந்த அளவிற்கு அகற்றப்படும் அல்லது தளர்த்தப்படும் என்பதை கணிப்பது கடினம் என்பதை ஆய்வாளர்கள் ஒப்புக்கொள்கின்றனர். இது பேுச்சுவார்த்தைகளின் வெற்றியை சார்ந்திருக்கிறது என்பதையும் அவர்கள் ஒப்புக் கொள்கின்றனர். வட கொரியா நிச்சயமாக தடைகளில் இருந்து நிவாரணம் தேவை என்ற கோரிக்கையை முன்வைக்கும், அது அவர்களின் முக்கிய தேவை.

பேச்சுவார்த்தை தோல்வி அடைந்தால் என்ன நடக்கும்?


டிரம்பின் போக்கு செவிசாய்ப்பதாக இல்லை, அமெரிக்கா கடினமான நாடு என்று கூறி வட கொரியா பேச்சுவார்த்தைகளில் இருந்து வெளியேறவும் வாய்ப்புண்டு. ஆனால் அமெரிக்கவும், வட கொரியாவும் எந்தவித முன்னேற்றமும் ஏற்படாமல் இருக்குமாறு வெறுமெனே இருந்தால் அது மிகவும் மோசமான, நம்பத்தகாத காட்சியாக இருக்கும்.

# நியூஸ் பிட்ஸ்

சன்னி லியோனிற்கு முகவரி தேவையில்லை. சர்ச்சைகளிற்கும் குறைவில்லாதவர். சமீபத்தில் சன்னி சிக்கியுள்ள சர்ச்சை கருப்பையை வாடகைக்கு பெற்ற விசயம். தனது கணவர் வெபருடன் இணைந்து 2017ம் ஆண்டு பெண்குழந்தையொன்றை தத்தெடுத்தார். அதற்கு நிஷா என்ற பெயரும் வைத்தார். ஒரு வருடத்திற்குள் மூன்று குழந்தைக்கு அம்மாவாக இருப்பதென அப்போதே சன்னி முடிவெடுத்திருந்தார். அதற்காக அவர் கையாண்ட உத்தி வாடகைத்தாய் முறை. வாடகைத்தாய் மூலம் இரட்டைக்குழந்தைக்கு அம்மாவாகியிருக்கிறார். குழந்தை பெற்றுக்கொண்டால் உடலழகு கெட்டுவிடும் என நினைக்கும் நடிகைகள், வாடகைத்தாய் முறையை கையாள்வது வழக்கம்தான். ஆனால், பணத்திற்காக தாய்மையை விலை பேசலாமா என்றும் கேட்கிறார்கள்!


**காசிருந்தால் எல்லாவற்றையும் வாங்கலாம்!**





சிங்கள மேடை நாடகங்களில் நடித்துவிட்டு, திரைக்கு வந்திருக்கிறார் ருசுஷினா திசநாயக்கா. சில தொலைக்கார்ட்சி தொடர்கள், சினிமாவில் நடித்துக் கொண்டிருக்கிறார். நல்ல நடிகையென்றபோதும், தொழில்முறை நடிகையாக இருப்பது சிக்கலானது என்கிறார். 'நிரந்தரமான, போதிய பணமீட்டும் வாய்ப்பு நடிகைகளிற்கு குறைவாக இருக்கிறது. வேறு வேலை செய்துகொண்டு, நடிக்கவும் வாய்ப்பில்லை' என்கிறார். தொலைக் காட்சி நிறுவனங்கள், தயாரிப்பாளர்களின் தனிப்பட்ட தொடர்பின் மூலமே, நடிகைகள் தேர்வு செய்யப்படுவதையும் விமர் சித்துள்ளார்.

**துணிந்து நில்!**



மரியா ஷரபோவாவின் இரண்டாவது இன்னிங்ஸ் செம்கம்பளம் வைத்து வரவேற்கவில்லை. பதினைந்து மாத தடையிலிருந்து மீண்டு வந்துள்ள ஷரபோவா, தொடர் தோல்விகளால் துவண்டு போயுள்ளார். அவுஸ்திரேலிய ஓபன், கட்டார் ஓபன் தோல்விகளுடன் இந்தியன் வெல்ஸ் தொடரில் களமிறங்கினார். ஜப்பானின் 20 வயது ஒஸாகாவிடம் நேர் செற்களில் தோல்வியடைந்துள்ளார். இதையடுத்து, தனது பயிற்சியாளர் ஸ்வென் க்ரோனேவெல்ட்டை விட்டு பிரிய முடிவெடுத்துள்ளார். கடந்த நான்கு வருடமாக ஷரபோவாவில் பயிற்சியாளராக இருந்த நெதர்லாந்துக்காரரிற்கு கை காட்டிவிட்டார். புதிய பயிற்சியாளருடன் களமிறங்கியும் பலனில்லாவிட்டால், இந்த வருட இறுதியுடன் ரென்னிஸிற்கு விடைகொடுக்க தயாராகி விட்டார்.

**மாத்தி யோசி!**



ராதிகா ஆப்தே பற்றி செய்தி வெளியாகிறது என்றாலே, அது நிச்சயம் ஏதோ வில்லங்க உடை அணிந்த விசயமாக இருக்குமென்று உறுதியாக நம்பலாம். அப்படி ஆகிவிட்டது ரஜினியின் கபாலி பட நாயகியின் நிலைமை. நடிப்பிற்காக செய்தியாகாமல், அணியும் உடைக்காகவே அடிக்கடி செய்தியாகிக் கொண்டிருக்கிறார் இந்த நல்ல நடிகை. அண்மையில் தனது ஆங்கிலேயே boy friend ரிச்சர்ட்சனுடன் கோவா கடற்கரைக்கு விடுமுறையை கழிக்க போயிருக்கிறார். கடற்கரையில் நீச்சலுடையில் புகைப்படம் எடுத்து, இன்ஸ்டகிராமில் பதிவேற்ற, ரசிகர்களின் அறச்சீற்றம் அளவுக்கதிகமாகி விட்டது. அம்மணி அவர்களிடம் கூலாக கேட்டுள்ளார் கடற்கரைக்கு போகும்போது சேலை கட்டிக்கொண்டா போக முடியும் என்று.

**அதானே!**



என்னவோ தெரியவில்லை, இந்தவாரம் "அந்த" மாதிரி நடிகைகள் பற்றிய செய்திகளாகவே உள்ளன. ஒரு காலத்தில் கலக்கு கலக்கென கலக்கிய ஆபாசப்பட நடிகை மரியா ஒசாவா. ஜப்பான்காரி. அம்மணிக்கு இன்னும் கோயில் கட்டாத குறையாக, வெறித்தனமான ரசிகர் பட்டாளமே உள்ளது. ஓவியா ஆர்மி எல்லாம் எம்மாத்திரம்? ஆபாசப்பட உலகத்திலிருந்து ஒதுங்கிய பின்னரும், தனது ரசிகர்களை முதலீடாக வைத்து அடுத்த தொழில் ஆரம்பித்து விட்டார். Muay Thai challenge என்ற பிலிப்பைன்ஸ் ரியாலிட்டி ஷோவில் இணைந்துள்ளார். ஒருவகை குத்துச்சண்டை தொடர் இது. ஏற்கனவே ஒருமுறை களமிறங்கி, செமத்தியாக அடிவாங்கினார் மரியா. சிலமாத கடும் பயிற்சியின் பின், மீண்டும் களமிறங்கியுள்ளார்.

**மல்லுக்கட்டும் மரியா!**

# வெற்றி தரும் தெளிவான இலக்குகள்!

சக்சஸ்ஃபுல்லான பிஸ்னஸுக்கு பவர்ஃபுல்லான ஆயுதம் மேலாண்மைதான். ஒரு பிஸ்னஸில் சம்பந்தப்பட்ட ஒவ்வொரு துறையையும் அதன் மனேஜர்கள் சரியாக மேலாண்மை செய்துவிட்டால், நிச்சயம் அந்த பிஸ்னஸ் வெற்றியடையும். ஒரு பிஸ்னஸில் முக்கியமாகச் செய்யவேண்டிய ஏழு மேலாண்மை விஷயங்களை விரிவாகப் பார்த்துவருகிறோம். இந்த வாரம் பிஸ்னஸின் மிக முக்கியமான அளவுகோல்களை எப்படித் தீர்மானிப்பது, எப்படி மேலாண்மை செய்வது என்பதைப் பார்க்கலாம்.

பிஸ்னஸில் நாம் செய்யும் முதலீடு முதல், நாம் வைக்கும் இலக்கு, நமக்கு கிடைக்கும் லாபம் வரை அனைத்துமே அளவுகோல்கள்தான். அளவுகோல்கள் என்பது எண்களாலும் தகவல்களாலும் நிறைந்தது. பிஸ்னஸில் அளவுகோல்களை நிர்வகிப்பது, அனாலிஸ் செய்வது போன்றவை எந்த அளவுக்கு முக்கியம் என்பது எல்லோருக்கும் இப்போது புரிய ஆரம்பித்திருக்கிறது. அதன் விளைவாக டேட்டா சயின்டிஸ்டுகளுக்கான மவுசு அதிகரித்து வருகிறது.

ஒரு பிஸ்னஸுக்கு முதலீடு எவ்வளவு தேவை, எவ்வளவு பணியாளர்கள் தேவை, கொள்முதல் எவ்வளவு செய்யலாம், வாடிக்கையாளர்கள் யார், நம்முடைய சந்தை அளவு என்ன, உற்பத்தி எவ்வளவு செய்ய வேண்டும், நம்முடைய இலக்கு என்ன, விற்பனை எவ்வளவு ஆகிறது, ரிட்டர்ன் எவ்வளவு என பிஸ்னஸின் ஒவ்வொரு விஷயங்களையும் தரவுகளாக, அளவுகோல்களாக தயார் செய்தால்தான் நம்முடைய பிஸ்னஸை நம்மால் புரிந்து கொள்ள முடியும்.

அந்தத் தரவுகளை ஆராய்ந்து, அவற்றிலிருந்து கிடைக்கும் முடிவுகளை வைத்து, பிஸ்னஸ் செயல்பாடுகளைத் திட்டமிட வேண்டும். அவற்றிலிருந்து கிடைக்கும் முடிவுகள் மூலம், நாம் இதுவரை செய்துவந்த தவறுகளைத் திருத்திக் கொள்ள வேண்டும். அதன் மூலம் மட்டுமே காலத்தைத் தாண்டி நிலைத்து நிற்கும் வகையிலான பிஸ்னஸை வளர்த்தெடுக்க முடியும். இதன் மூலம்



நிறுவனத்தின் செயல்பாடுகளை மேம்படுத்த முடியும். எந்தவொரு திட்டமும் செயல்படாமல் முடங்கிப் போவதைத் தவிர்க்க முடியும்.

### எப்படி மேலாண்மை செய்வது?

பிஸ்னஸின் அனைத்து மேலாண்மை செயல்பாடுகளுக்கும் அடிப்படையாகப் பயன்படுவது அளவுகோல்கள். எனவே, பிஸ்னஸின் ஒவ்வொரு திட்டத்துக்கும் அவற்றின் செயல்பாடுகளைப் பற்றி ஒவ்வொரு நிலையிலும் தரவுகள் சேகரிக்கப்பட வேண்டும். அவை அறிக்கைகளாகத் தயார் செய்யப்பட வேண்டும். தொழில் மேலாண்மையில் இது மிக முக்கியமானது. அப்போதுதான் தொழில் மேலாண்மையை எப்படிச் செய்யலாம் என்பதை மனேஜர்கள் முடிவு செய்ய முடியும். நிர்வாகத்தின் தரப்பிலும், திட்டங்களைச் செயல்படுத்தப்படும் இடத்திலும் அவற்றின் செயல்பாடுகள் அனைத்தும் அந்தந்த நிலைகளில் பதிவு செய்யப்பட வேண்டும்.

பிஸ்னஸின் எந்தவொரு விஷயத்தையும் தனித்தனியாக கவனிக்க வேண்டும். ஒவ்வொரு வேலையையும்



12 நீங்களும் பிஸ்னஸ் புள்ளி ஆகலாம்

முன்னுரிமை அடிப்படையில் வரிசைப்படுத்த வேண்டும். சரியான நேரத்தில் சரியான வேலைகள் நடக்கிறதா என்பதை அதன் மூலம்தான் உறுதி செய்ய முடியும். அதேபோல் தான் தரமும். வேலையின் தரத்தை உறுதி செய்ய வேண்டும். இவை அனைத்தையும் சரியான பதிவு செய்தல்களின் மூலம் மட்டுமே சாத்தியப்படுத்தலாம்.

### ஏன் அளவுகோல்கள் மேலாண்மை அவசியம்?

பிஸ்னஸில் ஓர் இடத்தில் எடுக்கும் ஒரு தவறான முடிவு, சில நேரங்களில் பிற இடங்களிலும் பாதிப்பை ஏற்படுத்தும். அளவுகோல்கள் மேலாண்மை மூலம் ஒருங்கிணைக்கப்படும் தரவுகளிலிருந்து அதனை எளிதில் நம்மால் அடையாளம் காண முடியும். பிரச்னை எங்கே நடக்கிறது என்பதைத் தெரிந்துகொள்வதில் அலட்சியம் காட்டினால், அது நம்முடைய வளர்ச்சியைப் பாதிக்கும்.

முடிவுகள் எடுக்கப்படும் போது தரவுகள்தான் மிக முக்கியமாக அலசிப் பார்க்கப்படும். முக்கியப் பிரச்னைகளை எளிதாக அவற்றின் மூலம் அறிந்துகொள்ளலாம். இது, சரியான முடிவுகளைத் திட்டமிட்டு எடுக்க உதவியாக இருக்கும்.

இதன் மூலம் நம்முடைய பிஸ்னஸ் சந்தையின் அளவைத் தெரிந்து கொண்டு எவ்வளவு முதலீடு செய்ய வேண்டும், எவ்வளவு உற்பத்தி செய்ய வேண்டும் என்று முடிவெடுக்க முடியும். மேலும், இதற்கான முடிவுகளை எடுக்க சந்தையிலுள்ள டிமாண்ட் மற்றும் போட்டியாளர்களின் சந்தையையும் தெரிந்துகொள்ள வேண்டும். அதற்கும் இந்த மேலாண்மை உதவியாக இருக்கும்.

நம்முடைய பிஸ்னஸ் பற்றி பிறருக்கு எடுத்துச் சொல்ல இது உதவும். வாடிக்கையாளர்களுக்கும், பங்குதாரர்களுக்கும் பிஸ்னஸ் செயல்பாடுகளைப் பற்றி விளக்க, இந்தத் தரவுகளும் அறிக்கைகளும் தான் மிகவும் உதவியாக இருக்கும். இவை இல்லாமல் பேசினால் உங்களை பிஸ்னஸ்மேனாகவே மதிக்கமாட்டார்கள். முக்கியமாக, இந்த மேலாண்மையில், நம்முடைய பிஸ்னஸில் உள்ள ரிஸ்க்குகளைக் குறைக்க முடியும். ரிஸ்க் மனேஜ்மென்ட் என்பது பிஸ்னஸில் மிக முக்கியமான ஒரு அம்சம். அந்த ரிஸ்க் மனேஜ்மென்ட் செயல்பாட்டுக்கு, அளவுகோல்கள் மேலாண்மை நிச்சயம் தேவை. பிஸ்னஸில் உள்ள ரிஸ்க்குகளை அடையாளம் காணவும், அவற்றை ஆய்வுசெய்து தீர்வுகளைக் கண்டறியவும் இது உதவும். ரிஸ்க்குகளை அடையாளம் காணத் தவறினால், பின்னர் அவற்றை சரிசெய்வது கடினமாகிவிடும்.

### எக்காலத்துக்கும் உதவும் அளவுகோல்கள்!

அளவுகோல்கள் முக்காலத்தையும் உள்ளடக்கியவை. கடந்த காலத்தில் நம்முடைய செயல்பாடுகள் எப்படி இருந்தது; இப்போது எப்படி இருக்கிறது; எதிர்காலத்தில் எப்படி இருக்க வேண்டும்..? என அனைத்தையும் உள்ளடக்கியதுதான் இந்த மேலாண்மையின் முக்கிய அம்சம். ஏனெனில், பிஸ்னஸோடு கால மாற்றம் என்பது மிகப் பெரிய பங்கு வகிக்கிறது. காலம் மாறும்போது ஒவ்வொரு பிஸ்னஸும் மாறியாக வேண்டும். இல்லையென்றால் காணாமல் போக வேண்டியதுதான்.

சரியான மாற்றங்களைச் செய்து கொள்ள இந்த அளவுகோல்கள் உதவியாக இருக்கும். எதிர்காலத்துக்கான தெளிவான இலக்குகளையும், அளவுகோல்களையும் ஆராய்ந்த பிறகே முடிவு செய்யமுடியும். எதிர்காலத் திட்டங்களைத் திட்டமிடுவது, திட்டங்களுக்கான கால வரையறைகளை வகுப்பது, பட்ஜெட்டை உருவாக்குவது, செயல்பாடுகளைக் குறிப்பிட்ட கால இடைவெளியில் பதிவு செய்வது ஆகியவற்றையும் வெற்றிகரமாகச் செய்ய முடியும்.

### தொழில்நுட்ப உதவியை நாடலாம்!

இந்த மேலாண்மைக்கு அதிக ஆட்களை எடுக்க வேண்டியதில்லை. மாறாக, சொஃப்ட்வெயார் புரோகிராம்கள் போன்ற தொழில்நுட்ப வசதிகளைப் பயன்படுத்தி மேலாண்மை செய்யலாம். இதன் மூலம், முதலீடு மற்றும் நேரம் விரயமாவதைக் குறைக்கலாம். ஆனால், அதில் பிழைகள் இல்லாமல், அவற்றின் உண்மைத் தன்மையை மனேஜர்கள் உறுதிசெய்து கொள்ள வேண்டும். புதிய தரவுகள், விவரங்கள் சேர்க்கப்படும்போது, அவை சரியாக அப்டேட் ஆகிறதா என்பதையும் பார்க்க வேண்டும்.

பிஸ்னஸில் நாம் எடுக்கும் முடிவுகளை வெற்றிகரமாக்கிக் காட்ட வேண்டிய கட்டாயம் நமக்கு இருக்கிறது. அப்போதுதான் உண்மையான வளர்ச்சியை நம்மால் அடைய முடியும். நம்மை ஒரு வெற்றியாளராக இந்த உலகுக்கு உணர்த்த வேண்டும் என்பதை உணர்ந்தவர்கள், ஒரு போதும் அவர்களுக்கு கிடைத்த வாய்ப்புகளைத் தவறவிட மாட்டார்கள். வளர்ச்சிக்கான வாய்ப்புகளைக் கண்டறிந்து, தெளிவான இலக்குகளை வகுத்து, அவற்றை முழு செயல்திறனுடன் சாத்தியமாக்குவதன் மூலம் பிஸ்னஸில் வெற்றியடையலாம்.

பிஸ்னஸுக்குத் தேவையான ஏழு மனேஜ்மென்ட் கோட்பாடுகளில், ஆறு மனேஜ்மென்ட் கோட்பாடுகளைப் பார்த்து விட்டோம். ஏழாவதாக உள்ள மிக முக்கியமான மணி மனேஜ்மென்ட் பற்றி பின்னர் விரிவாகச் சொல்கிறோம்.

தொடரும்...



## சினி விமர்சனம்

# அவே



நித்யாமேனன், இஷா ரெப்பா, ஸ்ரீனிவாஸ் அவசரலா, ரெஜினா என ஒவ்வொருவரும் வெவ்வேறு டென்ஷனுடன், வெவ்வேறு வகை குணம் கொண்டவர்கள். இவர்களின் பிரச்னை ஒருபுறம் இருக்க, இன்னொருவராக வருகிறார் காஜல் அகர்வால். இவரது பிரச்னைகள் வேறுமாதிரி. இவர்கள் எல்லோரும் ஒரே நேர்க்கோட்டில் வருவதுதான் கதை. இவர்களுக்குள் இருக்கும் தொடர்பைச் சொல்வதுதான் அந்த கிளைமாக்ஸ். இதற்காக எழுதப்பட்டு இருக்கும் திரைக்கதை, செம த்ரில்லிங் வகையறா.

ஹீரோ நானியிடம் இந்தக் கதையை பிரசாந்த் வர்மா சொன்னதும், அவர் தானே தயாரிக்கிறேன் என்று முன்வந்தார். அந்தளவு மாறுபட்டஒரு கான்செப்ட். அதேவேளையில், அனைத்து ரசிகர்களையும் கவரும் வகையில் படம் கொடுத்து இருக்கிறார், இயக்குனர் பிரசாந்த் வர்மா. படத்தின் ஆரம்பக் காட்சி அப்ளாஸ் அள்ளக்கூடியது. அதைத் தவறவிட்டுவிட்டால், முழு படத்தையுமே தவறவிட்டது போலத்தான். பிரபலமான நடிகைகள் முக்கிய கேரக்டர்களில் நடித்துள்ளனர். இவர்களைத் தவிர ஏகப்பட்ட நட்சத்திரங்கள்.

அவர்கள் தோளில்தான் முழு படமும் பயணிக்கிறது. ஒவ்வொருவரும் தங்கள் வேடத்துக்கு நியாயம் செய்திருக்கிறார்கள். இதில் முதல் இடம் நித்யா மேனனுக்கு. வழக்கம்போல், 'நடிப்பதே தெரியாமல் நடிப்பது எப்படி' என்று, அம்மணி கிளாஸ் எடுத்திருக்கிறார். இஷா ரெப்பா, தனது எமோஷனை வெளிப்படுத்தும் விதம் அலாதியானது. பிரியதர்ஷினி தனது லைட் ஹியூமர்த்தன நடிப்பால், முழு படத்திலும் ஆங்காங்கே கொண்டு வரும் என்டர்டெயின்மெண்ட் ரசிக்க வைக்கிறது. ரெஜினா, போதைக்கு அடிமையான பெண் வேடத்தில் கச்சிதம். முதல் பாதியில் இருக்கின்ற சுவாரஸ்யம், இரண்டாம் பாதியின் தொடக்கத்தில் இல்லாதது மைனஸ்.

முரளி சர்மாவின் தேவையில்லாத காட்சிகள் கொட்டாவியை வரவழைக்கிறது. பல கேரக்டர்கள், அவர்களுடைய கதை என்பதால், குழப்பத்துடன் காட்சிகள் நகர்ந்து, பிறகு தெளிவாகும் ஃபார்முலா அனைத்து தரப்பு ரசிகர்களையும் கவராது. என்றாலும், மாறுபட்ட படம் கேட்கும் ரசிகர்களுக்கு இது செம விருந்து. மார்க் ராபினின் பின்னணி இசை, காட்சிகளின் த்ரில் 'மூடை' கூட்டுகிறது. கார்த்திக்கின் ஒளிப்பதிவு, காட்சிகளுடன் ஒன்றவைத்து இருக்கிறது. பாராட்டுகளுக்கு உரியவர், எடிட்டர் கவுதம். மிகவும் குழப்பமான கதைக்குள் பயணிக்க வைத்து, ரசிகனைத் தெளிவுபடுத்தக்கூடிய திரைக்கதையை இயக்குனர் வழங்கியவிதம் கிளாஸ்.




## ஆயிஷாவிற்கு ஆள் இருக்காம்!



விஜய் டிவியில் ஒளிபரப்பாகும் பொன் மகள் வந்தாள் சீரியலுக்கு நல்ல வரவேற்பு கிடைத்து வருகிறது. குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் ரசிக்கும் விதமான கதைக்களத்தை கொண்ட இந்த சீரியலில் புதுமுகம் ஆயிஷா நடித்துள்ளார். கேரளாவை சேர்ந்த இவர், சென்னையில் தங்கியிருந்து படித்துள்ளார். நண்பிகளுடன் விளையாட்டாக ரிவி நிகழ்ச்சியொன்றில் கலந்து கொண்டுள்ளார். அங்கு நல்ல பெர்பேமன்ஸ் கொடுக்க, இந்த சீரியல் வாய்ப்பு தேடி வந்துள்ளது. ஆரம்பத்தில் நடிக்க சிரமப்பட்டுள்ளார். "எனது வருங்கால கணவர் கொடுத்த ஊக்கத்தில்தான் இந்த சவாலை கடந்தேன். எங்களுக்கு நிறைய கனவுகள் உள்ளன. அது நிறைவேறியதும் திருமணம் செய்வோம்" என்றுள்ளார். அந்த வருங்காலம் யார் என்றால், இப்போதைக்கு அதை வெளியில் சொல்லமாட்டாராம்.

## சரண்யாவில் குரல் ஒலிக்கும்



விஜய் டிவியின் நெஞ்சம் மறப்பதில்லை சீரியலில் ஒரு ஹீரோயினாக நடிக்கிறார் சரண்யா. தொகுப்பாளினியாக சுற்றிக்கொண்டிருந்தவரை சீரியலுக்கு இழுத்து வந்தது விஜய் டிவி. நூறு எபிசோட்டை கடந்து விட்டது தொடர். இதையொட்டி ஒட்டப்பட்ட போஸ்டர்களில், 'உங்கள் மனச்சாட்சியை பிரதிபலிக்கும் சரண்யாவின் குரல் தொடர்ந்து ஒலிக்கும்' என எக்ஸ்ட்ரா முக்கியத்துவம் கொடுக்கப்பட்டதில், அவர் பயங்கர குஷியாக இருக்கிறார். பிரியா பவானி சங்கர் அறிமுகமான கல்யாணம் முதல் காதல் வரை சீரியல்தான் இவருக்கு நம்பிக்கை கொடுத்ததாம். பிரியா பவானி சங்கரும் தொகுப்பாளினியாக இருந்தவர்தான். 'சீரியலுக்கு வந்தால் காணாமல் போய்விடுவாய்' என பலர் மிரட்டினார்களாம். அதையெல்லாம் கடந்து, சீரியல் மக்கள் மத்தியில் பெயரெடுத்ததில் செட ஹப்பியாக இருக்கிறார்.

## சர்வம் மகள் மயம்



சினிமாவில் இருந்து சின்னத்திரைக்கு மாறியவர் சாதனா. 15 வருடங்களிற்கு மேலாக சின்னத்திரையில் வலம் வருகிறார். சினிமாவில் நடித்துவிட்டு, வீட்டில் இருந்தவரை குட்டி பத்மினிதான் சீரியலுக்கு அழைத்து வந்தார். சாதனாவின் உடை எப்பொழுதும் அதிகமாக பேசப்படும். இதைப்பற்றி கேட்டால், தனது மகளை நோக்கி கைகாட்டுகிறார். எங்கு நல்ல புடவையை கண்டாலும் வாங்கி வந்து கொடுத்து விடுவாராம். 'உடையை பற்றி பலரும் பாராட்டுகிறார்கள். அந்த பெருமையெல்லாம் மகளையே சேரும்' என்கிறார். சன் டிவி 'வள்ளி' சீரியலில் பாசமான கேரக்டர், விஜய் டிவி 'சின்னத்தம்பி' சீரியலில் கறாரான அம்மா, ஜீ தமிழ் 'அழகிய தமிழ் மகள்' சீரியலில் வில்லி என ஒரே சமயத்தில் பலவிதமான நடிப்பை வெளிப்படுத்தி வருகிறார். இயக்குனர்களின் திறமையாலேயே இப்படியான வித்தியாசத்தை காட்ட முடிகிறது என்றுள்ளார்.


## சீரியலில் பாபி சிம்ஹா



தமிழில் இப்பொழுது வெப் சீரியல்களும் வேகமாக பிரபலமடைந்து வருகின்றன. முன்னணி நடிக, நடிகையர் தயக்கமில்லாமல் அதில் நடிக்க வருகிறார்கள். ஜோக்கர், அருவி படங்களை தயாரித்த ட்ரீம் வாரியர்ஸ் நிறுவனம் இந்த சீரியலை தயாரிக்கிறது. பாபி சிம்ஹாவின் ஜோடியாக நடிக்கிறார் பார்வதி நாயர். ப்ளாக் ஹியூமர் ஜேனரில் தயாராகிறது. ஜிகிர்தாண்டா போல பயங்கர வில்லனாக நடிக்கிறாராம்.

## சூட்டிங் ஸ்பொட்







காலா - கரிகாலன்







இரும்புத்திரை

# வண்ணத் திரை

## விஜயின் ரசிகராக ஜி.வி!

இசையமைப்பாளராக அறிமுகமாகி, இப்போது அதிக படங்களில் நடித்துக் கொண்டிருக்கிறார் ஜி.வி.பிரகாஷ். நீண்ட இடைவெளிக்கு பின்னர் ராஜிவ் மேனன் இயக்கும் சர்வம் தாள மயம் என்ற படத்தில் இப்போது நாயகனாக நடித்து வருகிறார். இந்த படத்திற்கு ஜி.வியின் தாய் மாமனான ஏ.ஆர்.ரஹ்மான் இசையமைக்கிறார். ஜி.வியின் படத்திற்கு ரஹ்மான் இசையமைப்பது இதுதான் முதல்முறை. இந்த படத்தில் விஜயின் ரசிகராக பீட்டர் என்ற பாத்திரத்தில் நடிக்கிறார் ஜி.வி. இதற்கான பாடல்காட்சி படப்பிடிப்பு சென்னையில் நடந்து வருகிறது. மெர்சல் படத்தின் வெளியீட்டிற்காக பீட்டர் கட்டவுட் வைத்துள்ளதை போன்ற செட் அமைத்து படப்பிடிப்பு நடந்து வருகிறது. நிஜத்திலும் விஜயின் தீவிர ரசிகர்தான் ஜி.வி. இதனால் அடிக்கடி அஜித் ரசிகர்களுடன் முட்டுப்பட்டு வருவார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## ரகுலில் சம்பளம் எகிறியது!

பாண்டியராஜ் இயக்கத்தில் கார்த்தி நடித்து வரும் கடைக்குட்டி சிங்கம் படத்தின் இறுதிக்கட்ட படப்பிடிப்பு நடந்து வருகிறது. கார்த்தியின் அடுத்த படத்தை அறிமுக இயக்குனர் ரஜத் ரவிசங்கர் இயக்குகிறார். எங்கேயும் எப்போதும் படத்தை இயக்கிய சரவணன், ஆர்.கண்ணன், பிரபல இந்தி இயக்குனர் அனுராக் காஷ்யாப் ஆகியோரிடம் இணை இயக்குனராக பணிபுரிந்தவர் இவர். தீரன் அதிகாரம் ஒன்றில் கார்த்தியுடன் ஜோடி போட்ட ரகுல் பிரீத் சிங்தான் இந்த படத்திலும் ஜோடி. முன்னைய படத்தைவிட இந்தப்படத்தில் அவரது சம்பளம் அதிகமாம். இவர்களுடன் பிரகாஷ்ராஜ், ரம்யா கிருஸ்ணன் ஆகியோருடன் கார்த்திக்கும் முக்கிய வேடத்தில் நடிக்கிறார். இன்னும் பெயரிடப்படாத இந்த படத்திற்கு ஹரிஷ் ஜெயராஜ் இசையமைக்கிறார்.

## ஜீரோ சைஸ் நிகிஷா!

என்னமோ ஏதோ, தலைவன், நாரதன் என சில படங்களில் நடித்தவர் நிகிஷா படேல். தமிழில் வேகமாக வளர்வார் என எதிர்பார்க்கப்பட்டபோதும், அவர் நடித்த படங்கள் எதுவும் வெற்றியடையாததால், வாய்ப்பில்லாத நடிகையாகி விட்டார். தமிழில் எந்த வாய்ப்பும் கிடைக்காத நிலையில், தெலுங்கு, கன்னட படங்களில் நடித்து வந்தார். அங்கும் அவருக்கு ஆஹா ஓஹோவென்ற வரவேற்பு இல்லை. அவர் கொஞ்சம் வெயிட் போட்டிருந்ததாலேயே வாய்ப்புக்கள் கிடைக்க வில்லையென, நிகிஷாவிற்கு நெருக்கமானவர்கள் ஆலோசனை கூறியிருக் கிறார்கள். இதையடுத்து, தனது உடலில் கவனம் செலுத்த தொடங்கியிருக்கிறார். இதை இயக்குனர்களிற்கும் தெரியப்படுத்த வேண்டும் என்பதால், அடிக்கடி தனது இணையத்தளத்தில் ஸ்லிம் உடல்கட்டை வெளிப்படுத்தும் புகைப்படங்களை வெளியிட்டு வருகிறார். இந்தவகையில் தற்போது தான் ஜீரோ சைஸ் உடலமைப்பை பெற்றுவிட்டேன் என கூறி, ஒரு கவர்ச்சி புகைப்படத்தை வெளியிட்டுள்ளார்.




## இதைகூட வெளியில் சொல்ல முடியாதா?

புதுமுக ஹீரோயின்கள் அதிகளவில் அறிமுகமாகும் காலம் இது. ரிஸ்க்கான காட்சிகளில் நடிக்கும்போது, இவர்களில் சிலர் விபத்துக்களிலும் சிக்கிக் கொள்கிறார்கள். தெலுங்கு நடிகர் ரவி தேஜாவின் புதிய படமான நெல டிக்கெட்டில் இப்படியொரு சம்பவம் நடந்துள்ளது. மாளவிகா சர்மா என்ற புதுமுக ஹீரோயின் அறிமுகமாகியுள்ளார். மோட்டார்சைக்கிள் விபத்தில் சிக்கி அவர் கடுமையான காயமடைந்துள்ளார். எனினும், படக்குழு இதை மறுத்து வந்தது. மாளவிகா நலமாக இருக்கிறார், அவர் விபத்தில் சிக்கவில்லையென கூறி வந்தனர். இந்தநிலையில் மாளவிகா சர்மா, தனது இணையத்தளத்தில் சக்கர நாற்காலியில் காலில் கட்டுப்போட்டபடி உட்கார்ந்திருக்கும் புகைப்படத்தை வெளியிட்டார். இதையடுத்து இயக்குனர், படக்குழு அவரை கடுமையாக திட்டியுள்ளது. விபத்து நடக்கவில்லையென நாம் கூற, எதற்காக படத்தை வெளியிட்டீர்கள், உடனடியாக அகற்றுங்கள் என வற்புறுத்தினராம்.

## பியாவின் தலை பிரச்சனை தீர்ந்தது!

தமிழ், மலையாளத்தில் தயாராகியுள்ள படம் அபியும் அனுவும். டொவினோ தாமஸ், பியா பாஜ்பாய், பிரபு, சுஹாசினி உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர். தரண் இசையமைக்க, பி.ஆர்.விஜயலட்சுமி இயக்கியுள்ளார். வடஅமெரிக்காவில் நடந்த உண்மைச் சம்பவம் ஒன்றை அடிப்படையாக வைத்து படம் தயாராகியுள்ளது. இதுவரை எந்த மொழியிலும் இப்படியொரு கதையுள்ள படம் வெளியானதில்லை என இயக்குனர் கூறியுள்ளார். சமூக வலைத்தளம் மூலம் பழகி திருமணம் செய்யும் டொவினோ தாமஸ், பியா பாஜ்பாய் ஆகியோருக்கிடையில் திடீரென ஏற்படும் பிரச்சனை, யாரும் கேள்விப்படாததாக இருக்குமாம். இந்த படத்தில் பியா மொட்டை போட்டு நடித்ததாக புகைப்படங்கள் வெளியாகியிருந்தன. அதை இயக்குனர் மறுத்துள்ளார். மேக்அப் மூலமே அப்படி தோன்றியதாம்.


## ரஜினியின் தம்பி சேதுபதி!

ரஜினியின் காலா படம் ஏப்ரலில் ரிலீசாகிறது. இதையடுத்து கார்த்திக் சுப்புராஜ் இயக்கத்தில் புதிய படத்தில் நடிக்கிறார். அனிருத் இசையமைக்கிறார். இதன் நடிக, நடிகையர், தொழில்நுட்ப கலைஞர்கள் தேர்வு நடந்து வருகிறது. இந்த படத்தில் விஜய் சேதுபதி வில்லனாக நடிக்கிறார் என்ற செய்தி முன்னர் வெளியாகியிருந்தது. ஏற்கனவே கார்த்திக் சுப்புராஜ் இயக்கத்தில் பீட்சா, இறைவா ஆகிய படங்களில் சேதுபதி நடித்துள்ளார். இதனால் கார்த்திக்கின் புதிய படத்தில் வில்லனாக நடிப்பார் என கூறப்பட்டது. இந்தநிலையில், விஜய் சேதுபதி வில்லனாக நடிக்கவில்லை, ரஜினியின் தம்பியாக நடிக்கிறார் என்ற புதிய செய்தி வெளியாகியுள்ளது. எனினும் படக்குழு இதைப்பற்றி வாய் திறக்கவில்லை.

## தனுஷின் இலட்சியம்!

வடசென்னையில் கரம் போர்ட் விளையாட்டு பிரபலம். இதனால் வடசென்னை சம்பந்தப்பட்ட படம் என்றால் ஹீரோ கரம் விளையாடுவார். கரம் விளையாட்டை மையமாக வைத்து கண்டாட்டம் என்ற படமும் வெளியாகியிருந்தது. இப்பொழுது வெற்றிமாறன் இயக்கத்தில் வடசென்னை படத்தில் நடிக்கும் தனுஷ், கரம் பிளேயராக நடிக்கிறார். அந்த விளையாட்டில் சாதனை படைக்க வேண்டுமென்பதே அவரது இலட்சியம். அதைநோக்கி பயணிப்பவருக்கு என்ன நடக்கிறது என்பதுதான் திரைக்கதை. 15 வயது தொடக்கம் 30 வயது வரையான அவரது வாழ்க்கைதான் கதை.





எம்.ஜி.ஆர்
100
நெடுந்தொடர் 98

# அரசியல் எதிரிகளையும் ஈர்த்த பண்பு!

ஸ்ரீதர் சுவாமிநாதன்

நடிகர் ரஜினிகாந்த் நடித்த 100வது படமான 'ஸ்ரீ ராகவேந்திரர்' படத்துக்கு முதல்வர் எம்.ஜி.ஆர் வரி விலக்கு அளித்தார். சென்னை கோடம்பாக்கத்தில் ராகவேந்திரா கல்யாண மண்டபத்தை ரஜினிகாந்த் கட்ட ஆரம்பித்தபோது, சில பிரச்சினைகள் ஏற்பட்டன. அவற்றை தீர்த்து வைத்து மண்டபம் அமைய எம்.ஜி.ஆர் முக்கிய காரணமாக இருந்ததாக, 'துக்ளக்' இதழில், தான் எழுதிய தொடரில் ரஜினிகாந்த் நன்றியோடு குறிப்பிட்டிருக்கிறார்!

**எம்.ஜி.ஆர்.** மிகவும்அழகானவர், தோற்றப்பொலிவு மிக்கவர், பொன்னைப் போன்ற நிறம் கொண்டவர், சிரித்தபடி அவர் வரும்போது, ரோஜாத் தோட்டமே நடந்து வருவது போலிருக்கும். இதெல்லாம் அவரது வசீகரமான அம்சங்கள்தான்; சந்தேகமில்லை. என்றாலும், இதையெல்லாம் கடந்த அவரது அரவணைத்துச் செல்லும் பண்பும், மனிதநேயமும்தான் அரசியல் எதிரிகளையும் அவர்பால் ஈர்த்தன!

திமுகவில் இருந்து எம்.ஜி.ஆர் நீக்கப்பட்ட சமயம். அவருக்கு ஆதரவாக மாணவர்களும் போராட்டத்தில் ஈடுபட்டதால் பள்ளி, கல்லூரிகளுக்கு விடுமுறை அளிக்கப்பட்டது ஒரு வரலாற்று சம்பவம். கொந்தளிப்பான சூழ்நிலையில், அதிமுகவை எம்.ஜி.ஆர் தொடங்கியதுடன், 'உலகம் சுற்றும் வாலிபன்' படத்தை வெளியிடுவதில் மும்முரமாக இருந்தார். அதற்கு எத்தனையோ முட்டுக்கட்டைகள். அப்போது, திமுகவில் இருந்த மதுரை முத்து, "அந்தப் படம் வெளிவராது. படம் வெளியானால் புடவை கட்டிக் கொள்கிறேன்." என்று சவால் விட்டார். எம்.ஜி.ஆர் பற்றியும் கடுமையாக மேடைகளில் விமர்சித்தார்.

அந்த சமயத்தில் சென்னை சத்யா ஸ்டுடியோவில் தமிழகம் முழுவதும் இருந்து திரண்டு வந்த ரசிகர்களை தினமும் எம்.ஜி.ஆர் சந்தித்து, அவர்களிடம் பேசுவார். ஒருநாள், அப்படிப் பேசும்போது "மதுரை முத்தண்ணன் அவர்கள் கூட..." என்று குறிப்பிட்டார். அப்போது குப்புதாஸ் என்ற ரசிகர், முத்துவைப் பற்றிக் கடுமையாக விமர்சித்து, "அவரைப் பற்றி பேசாதீர்கள்" என்று கத்தினார்.

அரசியலில் எதிரிகளாக இருந்தாலும் மரியாதையோடு பேசும் எம்.ஜி.ஆருக்கு கோபம் வந்தது. கத்திய ரசிகரைப் பார்த்து, "அவர் யாரு? நம்ம ஆளா? குழப்பம் விளைவிக்க வந்திருக்கும் மாற்றுக் கட்சியைச் சேர்ந்தவரா?" என்று கேட்டார். அந்த ரசிகரும் "நான் எம்.ஜி.ஆர் மன்றத்தைச் சேர்ந்தவன்" என்று சொல்லி தன்னிடம் உள்ள அடையாள அட்டையைக் காண்பித்தார். அதைப் பார்த்த எம்.ஜி.ஆர், சற்று கோபம் தணிந்தார்.

கத்திய ரசிகரைப் பார்த்து, "தம்பி, முத்தண்ணன் இன்று என்னை கடுமையாக விமர்சிக்கலாம். ஆனால், அவர் திராவிட இயக்க வளர்ச்சிக்காக செய்த தியாகங்களை மறக்கலாமா? ஏன்? முத்தண்ணனே காலப்போக்கில் நம் பக்கம் வரலாம். யாரை யும் கண்ணியக்குறைவாக பேசாதீர்கள்" என்று கூறிவிட்டு பேச்சைத் தொடர்ந்தார்!

அதைப் போலவே, சில ஆண்டுகளில் நிலைமைகள் மாறின. அதிமுகவில் சேர விரும்பினார் மதுரை முத்து. கட்சியினர் சிலர் எதிர்ப்பு தெரிவித்தபோதும் அவரை அதிமுகவில் சேர்த்துக் கொண்டார் எம்.ஜி.ஆர்! இதுகூட பெரிதல்ல; பின்னர், முத்துவை மதுரை மேயராகவும் ஆக்கினார்!

எம்.ஜி.ஆர் முதல்வராக இருந்த போது, ஊட்டியில் அரசு விருந்தினர் விடுதியில் தங்கியிருந்தார். அதைக் காரணம் காட்டி, அந்த சமயத்தில் கமல்ஹாசன் நடித்த 'ஒரு கைதியின் டைரி' படத்தின் படப்பிடிப்பை அங்குள்ள அரசுக்கு சொந்தமான பூங்காவில் நடத்த அதிகாரிகள் அனுமதி மறுத்தனர்.

தன்னை மக்களிடம் நெருக்கமாக்கிய திரையுலகுக்கும், கலைஞர்களுக்கும் எம்.ஜி.ஆர் எவ்வளவோ உதவிகள் செய் துள்ளார். திரையரங்கு உரிமையாளர்களுக்கு சுமையாக இருந்த விற்பனை வரி செலுத்தும் முறையை நீக்கி, ஒரு காட்சி நடந்தால் இவ்வளவு வரி கட்ட வேண்டும் என்ற அடிப்படையில் 'காம்பவுண்டிங் டாக்ஸ்' முறையை முதல்வர் எம்.ஜி.ஆர் அமல்படுத்தினார்.


அப்படிப்பட்டவர், படப்பிடிப்பு நடத்த அனுமதி மறுப்பாரா? விஷயம் அறிந்து 'ஒரு கைதியின் டைரி' படப்பிடிப்பை அரசு பூங்காவில் நடத்தச் சொன்ன எம்.ஜி.ஆர், படப்பிடிப்பைக் காணவும் வந்து விட்டார்.

படப்பிடிப்பின்போது தொழில் நுட்பக் கலைஞர்கள் இரண்டு பேர் எம்.ஜி.ஆரைப் பார்ப்பதை தவிர்த்துக் கொண்டே இருந்தனர். இதை கவனித்து அவர்களைப் பற்றி விசாரித்து இருவரும் திமுகவைச் சேர்ந்தவர்கள் என்று எம்.ஜி.ஆர் அறிந்து கொண்டார். அவர்களது பெயர்களையும் கேட்டுத் தெரிந்து கொண்டார்.


பின்னர், படப்பிடிப்புக் குழுவினர் அனைவருக்கும் எம்.ஜி.ஆர் தனது சொந்த செலவிலேயே மதிய விருந்து அளித்தார். சுற்றிச் சுற்றி வந்து எல்லோரையும் உபசரித்தார். அந்த தொழில் நுட்பக் கலைஞர்கள் இரண்டு பேரும் ஒரு மூலையில் அமர்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தனர். எம்.ஜி.ஆர் அளிக்கும் விருந்தை சாப்பிடுவதில் அவர்களுக்குத் தயக்கம். அதேநேரம், விருந்தை புறக்கணிக்கவும் முடியாத நிலைமை. இந்த தர்ம சங்கடத்தாலும் எம்.ஜி.ஆரைப் பார்க்க விரும்பாததாலும் குனிந்த தலை நிமிராமல் சாப்பிட்டனர்.

அந்தத் தொழில்நுட்பக் கலைஞர்கள் அருகில் எம்.ஜி.ஆர் வந்தார். அவர்களது தலைகள் இன்னும் குனிந்தபோது, சத்தமாக அவர்களின் பெயரை சொல்லி அழைத்தார்! அதிர்ச்சியுடன் இருவரும் நிமிர்ந்து பார்த்தனர். எம்.ஜி.ஆர் சிரித்துக் கொண்டே அவர்களது தோளைத் தட்டி, "நல்லா சாப்பிடுங்க" என்றார். சொன்னதோடு மட்டுமில்லாமல், "இதை சாப்பிடுங்கள், நல்லா இருக்கும்" என்று சொல்லி சில பதார்த்தங்களை அவர்களது இலையில் வைத்து உபசரித்தார். ஒரு முதல்வர், தங்கள் மீது இவ்வளவு அன்பு காட்டியதில் இருவரின் கண்களும் கலங்கி விட்டன. அதற்கு மறுநாள் அந்தத் தொழில்நுட்பக் கலைஞர்கள் இருவரும் அதிமுகவில்!

தொடரும்...







# பாகலிலும் பயங்கர இலாபம் இருக்கு!

அதிரடியாக உச்சத்துக்கு ஏறாமலும் திடீரென அதலபாதாளத்துக்கு இறங்காமலும் நிலையாக விலை கிடைக்கக்கூடிய காய்கறிகளில் ஒன்று பாகற்காய். கொடிவகை காய்கறியான பாகற்காய், பந்தல் காய்கறிச் செய்கையாளர்களின் கட்டாயத் தேர்வாக இருந்துவருகிறது. அதே நேரத்தில் கல்தூண் பந்தல் அமைக்க லட்சக்கணக்கான ரூபாய் செலவு பிடிக்கும் என்பதால், பல விவசாயிகள் பந்தல் செய்கையில் ஈடுபடத் தயக்கம் காட்டி வருகிறார்கள். பந்தலுக்காக அதிகம் செலவழிக்காமல், எளிய தொழில்நுட்பத்தில் குறைந்த செலவில் பந்தல் அமைத்துப் பாகற்காய்ச் செய்கை செய்யலாம்.

ஒரு ஏக்கர் நிலத்தில் பாகற்காய்ச் செய்கை செய்யும் விதம் பற்றி குறிப்பிடுகிறோம்.

செம்மண்ணில் பாகற்காய்ச் செய்கை செய்யும்போது நல்ல விளைச்சல் கிடைக்கும். ஆண்டு முழுவதும் நடவு செய்யலாம். இதன் வயது 150 முதல் 160 நாள்கள் வரை. ஒரு ஏக்கர் அளவு நிலத்தில் விதைக்க 200 கிராம் விதை தேவை. தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு ஏக்கர் நிலத்தில் ஆட்டுப்பட்டியை அடைக்க வேண்டும். பிறகு, நிலத்தை ஆழமாக உழுது 5 தொன் தொழுவுரத்தைக் கொட்டிப் பரப்பி, மீண்டும் உழவு செய்ய வேண்டும். 15 அடி இடைவெளியில் 3 அடி அகலம், முக்கால் அடி உயரம் என்ற அளவில் நீளமாகப் பார்கள் எடுக்க வேண்டும். நிலத்தின் அமைப்பைப் பொறுத்துப் பார்களின் நீளத்தை அமைத்துக்கொள்ளலாம். பாரில் இரண்டரை அடி இடைவெளியில் வரிசையாகக் குழிக்கு ஒரு விதை வீதம் நடவுசெய்து தண்ணீர் பாய்ச்ச வேண்டும்.

பிறகு பந்தல் அமைத்துக்கொள்ள வேண்டும். நிலத்தின் ஈரப்பதத்தைப் பொறுத்துத் தண்ணீர் பாய்ச்சி வர வேண்டும். 15, 25 மற்றும் 45ம் நாள்களில் களையெடுக்க வேண்டும். விதைத்த 8ம் நாளுக்குள் விதை முளைத்துவரும். 20ம் நாளில் கொடி வீசத் தொடங்கும். அந்தச் சமயத்தில் கொடிகளைப் பந்தலில் ஏற்றி விட வேண்டும்.

30ம் நாளுக்குள் பந்தல் முழுவதும் பாகல் கொடிகள் படர்ந்துவிடும். 35ம் நாளுக்குமேல் பூவெடுக்கும். 55ம் நாளுக்குமேல் காய்கள் திரளத் தொடங்கும். 60ம் நாளுக்குமேல் பறிப்பைத் தொடங்கலாம். ஆரம்பத்தில் விளைச்சல் குறைவாக இருக்கும். அடுத்தடுத்த பறிப்புகளில் விளைச்சல் அதிகரிக்கும்.

### பாகற்காயில் வருமானக் கணக்கு

பாகற்காய் விளைச்சல் மற்றும் வருமானம் குறித்து மல்லாவியில் பாகற்தோட்டம் செய்யும், விவசாயி சி.மாசிலாமணியிடம் பேசினோம். "இரண்டரை மாசத்தில் 20 முறை காய் பறிச்சதுல மொத்தம் 10,650 கிலோ பாகல் கிடைச்சிருக்கு. அதுல 900 கிலோ பாகலைக் கிலோ 40 ரூபாய்னு விற்பனை செஞ்சதுல 36,000 ரூபாய் கிடைச்சது. 4,950 கிலோ பாகலைக் கிலோ 30 ரூபாய்னு விற்பனை செஞ்சதுல 1,48,500 ரூபாய் கிடைச்சது. 3,000 கிலோ பாகலைக் கிலோ 25 ரூபாய்னு விற்பனை செஞ்சதுல 75,000 ரூபாய் கிடைச்சது. 1,800 கிலோ பாகலைக் கிலோ 20 ரூபாய்னு விற்பனை செஞ்சதுல 36,000 ரூபாய் கிடைச்சது.

ஆக மொத்தம் 10,650 கிலோ பாகலை விற்பனை செஞ்சதுல மொத்தமா 2,95,500 ரூபாய் வருமானம் கிடைச்சிருக்கு. உழவு, விதை, பந்தல், அறுவடை, வாகனக்கூலினு இதுவரை 62,000 ரூபாய் செலவாகியிருக்கு. அதுபோக மீதி 2,33,500 ரூபாய் நிகரலாபமா கிடைச்சிருக்கு. இன்னும் எட்டு, ஒன்பது பறிப்பு இருக்கும்னு எதிர்பார்க்கிறேன். அதுமூலமா 6,000 கிலோ பாகல் கிடைக்கும். குறைஞ்சபட்ச விலையா 20 ரூபாய்னு அது விற்பனையானாலே 1,20,000 ரூபாய் வருமானம் கிடைச்சுடும். அதுல அறுவடை, போக்குவரத்துனு 30 ஆயிரம் ரூபாய் செலவானாலும் 90 ஆயிரம் ரூபாய் லாபமா கிடைக்கும்னு எதிர்பார்க்கிறேன். அந்த வகையில 160 நாள்ல ஒரு ஏக்கர்ல இருந்து மொத்தமா 3,23,500 ரூபாய் லாபம் கிடைச்சுடும்" என்றார்.

### மூலிகைப் பூச்சிவிரட்டி தயாரிப்பு

பாகற்காயில் பூக்கள் பூப்பதற்கு முன்பாகச் சாறு உறிஞ்சும் பூச்சிகள், இலைச்சுருட்டுப் புழு, காய்ப்புழு ஆகியவற்றின் தாக்குதல் இருக்கும். பூச்சிகள் தென்பட்டால் அவற்றைக் கட்டுப்படுத்த மூலிகைப் பூச்சிவிரட்டி மற்றும் இஞ்சி, பூண்டு, பச்சை மிளகாய்க் கரைசலைச் சுழற்சி முறையில் தெளிக்க வேண்டும். காட்டாமணக்கு இலை, ஊமத்தம் இலை, ஊமத்தம் காய், சோற்றுக்கற்றாழை மடல், நொச்சியிலை, வேப்பிலை ஆகியவற்றில் தலா அரைக்கிலோ எடுத்து ஒன்றாகச்சேர்த்து, உரலில் இட்டு இடிக்க வேண்டும்.

பிறகு, இடித்த கலவையை 15 லிட்டர் மாட்டுச் சிறுநீரில் மூன்று நாள்கள் ஊற வைக்க வேண்டும். அக்கரைசலுடன் 250 கிராம் மஞ்சள்தூள், 1 கிலோ பசுஞ்சாணம் ஆகியவற்றைச் சேர்த்து 7 நாள்கள் ஊற வைக்க வேண்டும். இந்த ஏழு நாள்களும் தினமும் இரண்டு வேளைகள் கலக்கி வர வேண்டும்.

இக்கரைசலை வடிகட்டி 10 லிட்டர் தண்ணீருக்கு 500 மில்லி கரைசல் எனக் கலந்து தெளிக்க வேண்டும். இது பயிர் வளர்ச்சி ஊக்கியாகவும் செயல்படும்.

### இஞ்சி, பூண்டு, பச்சை மிளகாய்க் கரைசல்

தலா ஒரு கிலோ அளவில் இஞ்சி, பூண்டு, பச்சை மிளகாய் ஆகியவற்றை எடுத்துக்கொண்டு மூன்றையும் தனித்தனியாக விழுதாக அரைக்க வேண்டும். மூன்றையும் ஒன்றாகச்சேர்த்து வைத்துக்கொள்ள வேண்டும். 10 லிட்டர் தண்ணீரில் 100 கிராம் விழுது எனக் கலந்து செடிகளில் தெளிக்கலாம். இது இலைச் சுருட்டுப்புழு, காய்புழு, அசுவினி, வெள்ளை ஈ ஆகியவற்றின் தாக்குதல்களிலிருந்து செடிகளைக் காப்பாற்றும்.

### பாகலுக்கு ஊட்டம்

விதைத்த 15ம் நாளிலிருந்து 15 நாள்களுக்கு ஒருமுறை, ஒவ்வொரு செடியின் தூரிலும் ஒரு லிட்டர் தண்ணீரில் 30 மில்லி பஞ்சகவ்யாவைக் கலந்து ஊற்ற வேண்டும். 20ம் நாளிலிருந்து 15 நாள்களுக்கு ஒருமுறை 25 கிலோ கடலைப்பிண்ணாக்கு, 5 கிலோ வேப்பம் பிண்ணாக்கு ஆகியவற்றை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து, ஒவ்வொரு செடியின் அருகிலும் சிறிதளவு ஊற்ற வேண்டும்.

### குச்சிப்பந்தல்

பத்து அடி உயரம்கொண்ட சவுக்கு அல்லது விண்ணாங்கு தடிகளை 8 அடி இடைவெளியில் நிலத்தைச் சுற்றி ஊன்ற வேண்டும். தடிகளின் மேல்பகுதியில் கயிறுகொண்டு இறுக்கமாகக் கட்ட வேண்டும். நிலத்துக்குள் 7 அடி உயரம்கொண்ட வேப்பங்குச்சிகளை... தெற்கு வடக்காக 8 அடி இடைவெளி, கிழக்கு மேற்காக 15 அடி இடைவெளி எனக் கொடுத்து ஊன்ற வேண்டும்.

ஊன்றப்பட்ட தடிகளின் அடிப்பகுதியில் பழைய ஓயிலைப் பூசிவிட்டால், கறையான் அரிக்காது. வேப்பங்குச்சிகளை ஊன்றிய பிறகு, நாடா நூல் கொண்டு குறுக்கும் நெடுக்குமாகப் பின்னி, பந்தல் அமைக்க வேண்டும். ஒவ்வொரு செடிக்கும் அருகே ஏதாவது கொடிகளை நட்டு அவற்றை இழுத்து மேலாகக் கட்டிவிட்டால், பாகல் கொடிகள் அதைப் பற்றிக்கொண்டு படர்ந்துவிடும். ●



## சைக்கிள் உழவு கருவி

விவசாயிகளிற்கு பயன்படக்கூடிய எளிமையான களை, உழவு கருவியொன்றை அறிமுகப்படுத்துகிறோம். நீங்களே செய்து கொள்ளலாம்.பழைய சைக்கிளில் பின்பக்க வீல், பெடல், செயின் பொக்ஸ் ஆகியவற்றை எடுத்துவிட்டு பெடல் இருந்த இடத்தில் ஒரு இரும்புப்பட்டையை வெல்டிங் மூலம் இணைக்க வேண்டும். அதில் கொலுவை போல்ட், நட் கொண்டு இணைக்க வேண்டும். தேவைக்கேற்ப இரண்டு, மூன்று கொலுக்கள்கூடச் செய்து வைத்துக்கொள்ளலாம்.

களை எடுக்க 4 பல்கொண்ட கருவியையும் செய்துவைத்துக்கொள்ளலாம். உழவுக்கும் விதைப்புக்கும் ஒற்றைக் கொலுவைப் பயன்படுத்த வேண்டும். சீட் இருந்த இடத்தில் கைப்பிடியைப் பொருத்திச் சைக்கிளை முன்னோக்கித் தள்ளும்போது டயர் சுழலச் சுழலக் கொலு மண்ணைக் கிளறிவிடும். சாதாரணமாக அரை அடி ஆழமும், மண் பதமானதாக இருந்தால் முக்கால் அடி ஆழம் வரையும் கொலு இறங்கும். இக்கருவி மூலம் களை எடுக்கும்போது, களைகள் வேரோடு வந்து விடும்.



# ஈரானுக்கு ஆயுதம் சப்ளை செய்த இஸ்ரேல்!

## சி.ஐ.ஏயின் தலையை சுற்றவைத்த 'அந்த' இரகசிய நபர்கள்!

## புலனாய்வு அதிகாரியின் ராஜதந்திர விளையாட்டு!

ஈரானும், இஸ்ரேலும் ஏதோ ஜென்மத்து பகைவர்கள், இரண்டு நாட்டுக்காரர்களும் நேரில் சந்தித்தால் கொலையில்தான் முடியுமென்று நினைப்பவர்கள், இந்த செய்தியை கேட்டால் காறித்தான் துப்புவார்கள். ஈரானிய வெளியுறவுத்துறை அதிகாரிகளை இரகசியமாக டீல் பண்ணிய, இஸ்ரேலிய வெளியுறவுத்துறை அதிகாரிகள், வெளிநாடொன்றில் சந்தித்து பேசுவோம் என சொன்னார்கள். இந்த விசயம் வெளியில் லீக் ஆகாமல் பார்த்துக் கொள்ள வேண்டுமென்பதிலும் இரண்டு தரப்பும் இணக்கம் கண்டன.

இதையடுத்து ஈரானின் வெளியுறவுத்துறையில் உள்ள புலனாய்வு அலுவலர் உள்ளிட்ட மூன்று அதிகாரிகளும், இஸ்ரேலிய வெளியுறவுத்துறை அதிகாரிகளும் பாரஸிலுள்ள விடுதியொன்றில் சந்தித்தனர். சுற்றிவளைக்காமல் நேரடியாகவே இஸ்ரேல் டீல் பேசியது. ஈராக் நாட்டின் குசும்புகள் இஸ்ரேலுக்கு மட்டுமல்ல, ஈரானிற்கும் எரிச்சலை ஏற்படுத்திக் கொண்டிருந்தது. (ஈரான் ஈராக் நாடுகளிற்கிடையில் எப்பொழுதும் போர் மூளலாம் என்ற நிலைமை அப்பொழுது ஏற்பட்டிருந்தது) இஸ்ரேலைவிட, ஈரான்தான் அதிகமாக ஈராக்கினால் பர்திக்கப்பட்டுள்ளது. ஈராக் மீது போர் தொடுப்பதென்ற ஒப்ஷன் ஈரானிய தலைவர்களிடம் இருந்தால், அதற்கு இஸ்ரேல் உதவிசெய்ய தயாராக இருக்கிறதென்பதே இஸ்ரேல் பரிமாறிய செய்தி.

இஸ்ரேலின் இந்த செய்தி ஈரானிய பிரதிநிதிகளிற்கு பயங்கர சந்தோசத்தை கொடுத்திருந்தது. சந்திப்பு முடிந்ததுமே, வெளியுறவுத்துறை அதிகாரிகளிற்கு விசயத்தை சொன்னார்கள். அப்படியே அந்த தகவல் ஈரான் அரசு தலைமைக்கும் சென்றது. ஈராக் மீது போர் தொடுக்கும் ஐடியா இருக்கிறதா இல்லையா என்பதை அரசு தலைமைதான் சொல்ல வேண்டுமல்லவா.

அரசு தலைமையிடமிருந்து பாரிஸ் வெளியுறவுத்துறை அதிகாரிகளிற்கு வந்த தகவல் "ஆம். அப்படியொரு திட்டம் உள்ளது. இஸ்ரேலிடமிருந்து ஆயுதங்களை வாங்குங்கள். ஆனால், என்னவிதமான ஆயுதங்கள், எவ்வளவு தொகையானவை என்ற விபரங்களை இப்பொழுதே பேசி முடித்து, அந்த தகவல்களையும் முன்னரே அனுப்பிவைக்க வேண்டும்".

அடுத்த சிலநாட்களில் பாரிசிலேயே சகல பேச்சுக்களும் முடிந்து, என்ன ஆயுதங்கள், எவ்வளவு, எந்த வழியால் ஈரானிற்கு வந்து சேரும் என்ற சகல விபரங்களும் பேசி முடிக்கப்பட்டது. அத்தனை தகவலும் ஈரான் அரசுத்தலைமைக்கும் அனுப்பப்பட்டது.

அடுத்த சில வாரங்களில், திட்டமிட்டபடி ஈரானிற்கு ஆயுதங்களும் போய் சேர்ந்தது!

காதும் காதும் வைத்ததைபோல ஆயுதங்கள் அனுப்பப்பட்டதால், இந்த செய்தி வெளியில் லீக் ஆகவில்லை.

இஸ்ரேலின் ஆயுதங்கள் ஈரானிற்கு போய் சேர்ந்த பின்னர், சம்பந்தப்பட்டவர்கள் சத்தமில்லாமல் இருந்து விட்டார்கள். ஆனால் மத்திய கிழக்கில் சிலபல சிக்கல்கள் திடீரென ஆரம்பித்தன.

முதலாவது, லெபனானில் இருந்த அமெரிக்க தூதரகத்திற்கு ஒரு மிரட்டல் கடிதம் சென்றது. லெபனானில் இருந்து வெளியேறி விட வேண்டும், இல்லாவிட்டால் இங்கிருக்கும் மொத்த அமெரிக்கர்களையும் பரலோக ராஜ்ஜியத்திற்கு அனுப்பிவிடுவோம் என்று அதில் எழுதப்பட்டிருந்தது. அதுவரை அறிமுகமில்லாத ஒரு போராளிக்குழுவின் பெயரும் குறிக்கப்பட்டிருந்தது.

அப்போது மத்திய கிழக்கில் நான்குபேர் சேர்ந்து ஒரு இயக்கம் தொடங்கினால், முதல் காரியமாக அங்குள்ள அமெரிக்க தூதரகத்திற்கு ஒரு அனாமதேய மிரட்டல் கடிதம் அனுப்புவார்கள். "வயதுக்கு வந்துவிட்டார்கள்" என அப்போது அமெரிக்க தூதரக அதிகாரிகளும் தமக்குள் பகிடியாக பேசிக்கொள்வார்கள். அப்படி யாரோ சிலர் "வயதுக்கு வந்துவிட்டார்கள்" போல என அமெரிக்க தூதரக அதிகாரிகள் நினைத்து, அதை சீரியசான விசயமாக எடுக்கவில்லை.

அடுத்த சில நாட்களிலேயே லெபனான் தலைநகர் பெய்ரூட்டில் அமெரிக்க கடற்படையை இலக்கு வைத்து நடத்தப்பட்ட மிகப்பெரிய குண்டுத்தாக்குதலில் 241 அமெரிக்க கடற்படையினர் கொல்லப்பட்டனர்.

மத்திய கிழக்கில் தம் மீது தாக்குதல் நடத்தக்கூடிய ஒரே ஆட்கள், ஈரானிய உளவுத்துறைதான் என அமெரிக்க உறுதியாக நம்பியது. அது வெறும் நம்பிக்கைதான். ஆதாரம் கிடையாது.



அதற்கு பின்னர்தான் ஈரானிய உளவுத்துறையின் செயற்பாடுகளை பற்றி கூடுதல் கவனம் செலுத்த ஆரம்பித்தார்கள். இராஜதந்திர துறையிருந்த சோஸ் ஒன்றின் மூலம், இஸ்ரேல்ஈரான் ஆயுத விநியோக விசயம் சி.ஐ.ஏ இன் கவனத்திற்கு சென்றது!

இதற்கு பிறகுதான் சி.ஐ.ஏ விழித்துக் கொண்டது. இந்த விசயம் சி.ஐ.ஏ இற்குள் விவாதிக்கப்பட்டபோது, மத்திய கிழக்கு நாடுகளில் இருந்த சி.ஐ.ஏ இன் ஸ்டேசன் சீப்கள் (station chief) இன்னொரு குற்றச்சாட்டை வைத்தனர். மத்திய கிழக்கில் தமது ஆட்கள் ஏதாவது சின்ன நடவடிக்கை செய்தால்கூட, மொசாட்டின் ஆட்கள் எப்படியாவது குறுக்கேவருவதைபோல வந்து கொண்டிருக்கிறார்கள். அது எதேச்சையாக நடப்பதை போலத்தான் நடக்கிறது. ஆனால் திடீரென மத்திய கிழக்கில் நாம் செய்யும் எல்லா ஒப்ரேசன்களிலும் மொசாட்டின் ஆட்கள் எதேச்சையாக எப்படி வர முடியும்? என கேள்வியெழுப்பினர்.

அப்பொழுது ஜோர்தானில் சி.ஐ.ஏ ஒரு சிறிய இரகசிய ஒப்ரேசன் செய்திருந்தது. லெபனான் ஹிஸ்புல்லா புலனாய்வு. பிரிவின் இரண்டாம் நிலை தலைவரான அபூபக்கர் அஸ்லாம் ஷேக் என்ற பெயரில் அறியப்பட்ட ஆள் ஜோர்தானிற்கு இரகசியமாக வந்திருந்தார். அவரது வருகையை சி.ஐ.ஏ ஏஜெண்ட்கள் அறிந்து கொண்டனர். மர்மநபர்களால் கடத்திச் செல்லப்படுவதைபோல, அவரை கடத்திச்செல்ல ஜோர்தான் சி.ஐ.ஏ ஸ்டேசன் சீப் திட்டமிட்டார். சுப்பர்மார்க்கெட் ஒன்றில் தான் கடத்தல் திட்டம் அரங்கேறவிருந்தது.

அபூபக்கர் அஸ்லாம் ஷேக்கை சி.ஐ.ஏ ஏஜெண்ட்கள் கடத்துவதற்காக வளைத்த நேரத்தில், சுப்பர்மார்க்கெட்டில் திடீர் ரகளை நடந்தது. யாரோ ஒரு வயதானவரை வேறு சிலர் கடத்தினார்கள். சுப்பர்மார்க்கெட்டில் அப்படியிப்படி அவர்கள் துப்பாக்கிச் சூடு நடத்தியதில் மூவர் கொல்லப்பட்

தொடர்ச்சி அடுத்தபக்கம்...

டனர். பெரும் களேபரம் நடந்து எல்லோரும் சிதறியோடினர். இந்த களேபரத்தில் சி.ஐ.ஏ இன் திட்டம் தோல்வியில் முடிந்தது. அபூபக்கர் அஸ்லாம் ஷேக் தப்பிச்சென்றுவிட்டார்.

சுப்பர்மார்க்கெட்டில் கடத்தப்பட்ட முதியவரை சிலநூறு மீற்றர்களில் கடத்தல்காரர்கள் இறக்கிவிட்டு சென்றுவிட்டனர்.

அது மொசாட்டின் வேலையென்பதை சி.ஐ.ஏ பின்னர்தான் அறிந்தது. இந்தசம்பவத்தையும்சி.ஐ.ஏ கூட்டத்தில் உதாரணமாக சொன்னார்கள்.

தமது நடவடிக்கைகளில் மொசாட் தலைபோடுகிறதென்பதை புரிந்து கொண்ட சி.ஐ.ஏ, அமெரிக்க அரசின் கவனத்திற்கு விசயத்தை கொண்டு வந்தது. அமெரிக்க வெளிவிகார அமைச்சின் ஊடாக, இராஜதந்திர ரீதியில் அணுகுவதே பொருத்தமானதென முடிவெடுத்தனர் வெள்ளைமாளிகை அதிகாரிகள். வெளியுறவு அமைச்சிலிருந்து இஸ்ரேலிற்கு உடனடியாக ஒரு தகவல் பறந்தது

“ஈரானிற்கு நீங்கள் ஆயுதம் வழங்கிவரும் விசயம் எங்களிற்கு தெரியும். அதற்கான ஆதாரங்களும் உள்ளன. தொடர்ந்து மத்திய கிழக்கு நாடுகளிற்கு இப்படியான ஆயுத விநியோகம் செய்வது சரியான கொள்கையாக இருக்க முடியாது. ஏனெனில், அந்த ஆயுதங்களில் ஒரு பகுதியாவது எம்மை நோக்கி திரும்பிக்கொண்டிருக்கிறது. பெய்ரூட் குண்டுவெடிப்பு இதற்கு உதாரணம். அதனால், உடனடியாக இரகசிய ஆயுத விநியோகங்களை நிறுத்திவிடுங்கள்”


இந்த செய்தி இஸ்ரேலிற்கு அனுப்பப்படுவதற்கு ஒருவாரம் முன்னர்தான், பெய்ரூட்டில் அமெரிக்க கடற்படையை இலக்கு வைத்து குண்டுதாக்குதல் நடத்தப்பட்டிருந்தது.

அரச தலைமைக்கு விசயத்தை அறிவித்துள்ளதாகவும், அங்கிருந்து பதில் கிடைத்ததும் தாமதமின்றி அனுப்பிவைப்பதாகவும் இஸ்ரேலிடமிருந்து பதில் வந்தது.

இந்த சமயத்தில் ஜோர்டான், லெபனான், லிபியா போன்ற நாடுகளில் அமெரிக்கர்கள் இனம்தெரியாதவர்களால் கடத்தப்பட்டு கொண்டிருந்தனர். கடத்தப்பட்டவர்களில் சிலர்தான் திரும்பி வந்தனர். பலர் வரவில்லை. குறிப்பாக லெபனானில்தான் இந்த கடத்தல்கள் அதிகமாக நடந்தது. லெபனான் தலைநகரில் அமெரிக்கர்கள் கடத்தப்பட்ட செய்தி அன்றாடம் வெளியாகிக் கொண்டிருந்தது. அடுத்தது ஜோர்தானில் நடந்தது.

மத்திய கிழக்கு விசயங்களில் ஆர்வமுள்ளவர்கள் அறிந்திருக்கக்கூடும் அப்போதைய மத்திய கிழக்கு நெருக்கடியில் லெபனான், ஜோர்டானில்தான் எல்லா நாட்டு புலனாய்வு அமைப்புக்களும் ஸ்டேசன்களை அமைத்திருந்தன. அங்கிருந்தபடியே ஈரான், ஈராக், சிரியா, இஸ்ரேல், பாலஸ்தீனம், லிபியா உள்ளிட்ட நாடுகளின் புலனாய்வு விசயங்களை கையாண்டு கொண்டிருந்தனர். மேலே சொன்ன மற்ற நாடுகளை விட, இந்த இரண்டு நாடுகளும்தான் ஓரளவு பாதுகாப்பாக இருந்தன. சிரியா, லெபனான், பாலஸ்தீனம், ஈராக், ஈரான் போன்ற நாடுகளில்இருந்த ஆயுத அமைப்புக்கள், அதிருப்தியாளர்களின் தலைமைகள் இந்த இரண்டுநாட்டிலும்தான் இருந்தார்கள். பாலஸ்தீன வீதிகளில் கையில் ஆயுதங்களுடன் திரியும் பி.எல்.ஓ இயக்க போராளிகள், லெபனானிலோ, ஜோர்டானிலோ அப்படி திரிவதில்லை.

**காதும் காதும் வைத்ததைபோல ஆயுதங்கள் அனுப்பப்பட்டதால், இந்த செய்தி வெளியில் லீக் ஆகவில்லை. இஸ்ரேலின் ஆயுதங்கள் ஈரானிற்கு போய் சேர்ந்த பின்னர், சம்பந்தப்பட்டவர்கள் சத்தமில்லாமல் இருந்து விட்டார்கள். ஆனால் மத்திய கிழக்கில் சிலபல சிக்கல்கள் திடீரென ஆரம்பித்தன.**





**பேரதிர்ச்சி அமெரிக்காவிற்கு காத்திருந்தது. பெய்ரூட்டில் ஹோட்டல் ஒன்றில் தங்கியிருந்த ஏழு அமெரிக்கர்களை, ட்ரக்கில் வந்த இனம்தெரியாத நபர்கள் கடத்தி சென்றனர்.**

ஆகவே, லெபனானிலும், ஜோர்டானிலும் பலமான ஸ்டேசன்களை அமைத்தாலே, மத்திய கிழக்கு விவகாரத்தை கையாளலாமென எல்லா நாடுகளும் நினைத்தன. உலகத்தின் அத்தனை வல்லரசு நாடுகளில் ஸ்டேசன்களும் இந்த இரண்டு நாடுகளிலும்தான் இருந்தன.

லெபனானிலும், ஜோர்டானிலும் நடக்கும் கடத்தல்கள் அவர்களிற்கு புது தலையிடியாக மாறின. யார் இதன் பின்னணி, ஏன் செய்கிறார்கள் என ஒரு தகவலும் வெளியாகியிருக்கவில்லை. இடைத்தரகர்கள் ஊடாக அங்குள்ள இயக்கங்களிடமும் விசாரித்து பார்த்தார்கள். இயக்கங்களும் தலையை சொறிகின்றார்களாம் என்ற பதில்தான் வந்தது.

இந்த சமயத்தில்தான், லெபனான் தலைநகர் பெய்ரூட்டின் உணவகம் ஒன்றிலிருந்து அமெரிக்கர் ஒருவர் கடத்தப்பட்டார். அது பத்திரிகைகளிலும் செய்தியாகியது. அமெரிக்க உல்லாச பயணியொருவர் கடத்தப்பட்டார் என செய்திகள் கூறின. இதுவரை தலையை சொறிந்து கொண்டிருந்த புலனாய்வு அமைப்புக்கள், இந்த செய்தி வெளியானதும், சீரியசாக களமிறங்கினார்கள்.

அமெரிக்க, ரஷ்யா, பிரான்ஸ், பிரித்தானியா, இஸ்ரேல், ஜோர்தான் உளவுத்துறைகள் இந்த கடத்தலின் துப்பை துலக்க, தனித்தனியாக தமது அணிகளை களமிறக்கின. கடத்தல் தொடர்பான ஒவ்வொரு சிறு தகவலையும் தொகுத்துக் கொண்டிருந்தனர். தகவல் கொடுப்பவர்களிற்கு நல்ல சன்மானம் கிடைக்கும் என தமது முகவர்கள் ஊடாக வலைவீசினார்கள்.

பெய்ரூட்டில் வைத்து கடத்தப்பட்ட முதல் அமெரிக்கர் அவரல்ல. ஏற்கனவே நாற்பது வரையான அமெரிக்கர்கள் கடத்தப்பட்டு விட்டார்கள். அப்போது வரை பேசாமல் இருந்த புலனாய்வு அமைப்புக்கள், இந்த ஒரு உல்லாச பயணி கடத்தப்பட்டதும் ஏன் துடித்துப்பதைத்துக் கொண்டு களத்தில் இறங்க வேண்டும்?

யாரந்த உல்லாச பயணி?

கடத்தப்பட்ட உல்லாச பயணியின் பெயர் வில்லியம் பக்ளி என்று செய்தி வெளியானது. இப்படியொரு செய்தி வெளியானால், அது யாரோ லெபனானை பார்க்க வந்த அமெரிக்கர் என்றுதான் நினைப்போம். ஆனால், அங்குள்ள புலனாய்வு அமைப்புக்களிற்கு வில்லியம் பக்ளியை தெரியும். அதுவும், நன்றாக தெரியும்.

ஏனென்றால், அந்த வில்லியம் பக்ளிதான் லெபனானில் இருந்த சி.ஐ.ஏ station chief!

அதாவது, ஆட்டை கடித்து மாட்டைக் கடித்துக் கொண்டிருந்த கடத்தல்காரர்கள், அமெரிக்காவின் அடிமடியிலேயே கை வைத்து விட்டார்கள்!

ஒரு station chief கடத்தப்படுவது சாதாரண விசயமல்ல. அந்த station நெற்வேர்க் எல்லாமே கடத்தல் காரர்களிற்கு தெரிந்துவிடும். இவ்வளவு பெரிய கடத்தல்காரர்களை புலனாய்வு அமைப்புக்கள் மன்னிப்பதே கிடையாது. ஆனால், வில்லியம் பக்ளியை பணம் கொடுத்தாவது மீட்டெடுக்க சி.ஐ.ஏ, அமெரிக்க தயாராக இருந்தன. பேரம் பேசவும் முயன்ற. ஆனால் யார் கடத்தியதென்பது தெரியாத நிலையில், யாருடன் பேசுவதென்பதில் நிறைய குழறுபடிகள் நடந்தது. பல இடைத்தரகர்களை பிடித்தும் கடத்தல்காரர்களுடன் நேரடியாக பேரம் பேச முடியவில்லை. அவரை தெரியும், இவரை தெரியும் என்றபடி பல இடைத்தரகர்கள் வந்தபோதும், அந்த பேரம்பேசல் எதுவும் சரிவரவில்லை. எவ்வளவு காசு கொடுத்தும் வில்லியம் பக்ளியை மீட்டெடுக்க அமெரிக்கா முயன்று கொண்டிருக்க, கடத்தப்பட்ட ஆறாம் நாள் அவர் கொல்லப்பட்டார்.

அமெரிக்க அரசும், சி.ஐ.ஏ உம் அதிர்ந்தன.

அந்த அதிர்ச்சி அடங்குவதற்குள், இன்னொரு பேரதிர்ச்சி அமெரிக்காவிற்கு காத்திருந்தது. பெய்ரூட்டில் ஹோட்டல் ஒன்றில் தங்கியிருந்த ஏழு அமெரிக்கர்களை, ட்ரக்கில் வந்த இனம்தெரியாத நபர்கள் கடத்தி சென்றனர்.

முதன்முறையாக கடத்தல் பற்றி ஒரு துரும்பு கிடைத்தது. கடத்தலிற்கு இயக்கமொன்று உரிமைகோரியது. அது புதிய இயக்கமொன்று. புதிய இயக்கமென்பதால், விட்டுக்கொடுக்காத நிலைப்பாட்டில் இருந்து கடத்தியவர்களை கொன்றுவிடுவார்கள் என சி.ஐ.ஏ நினைத்தது. அந்த இயக்கத்தை பற்றிய விபரங்களை சேகரிக்க தொடங்கினார்கள். மற்றைய புலனாய்வு அமைப்புக்களிடமும் உதவிகேட்டார்கள்.

மொசாட் அமைப்புத்தான், அந்த இயக்கத்தை பற்றிய விபரத்தை முழுமையாக கொடுத்தது. ஈரானை தளமாக கொண்ட இயக்கம் அது.

(தொடரும்)

# சனீஸ்வர பகவானுக்கு எள் தீபம் ஏற்றுவது சரியா, தவறா?



காரியங்களில் ஏற்படக்கூடிய தடைகளை அகற்றி, வெற்றியைத் தருபவர் சனீஸ்வர பகவான். நவகிரகங்களில், சனிபகவான் என்றாலே, எல்லோருக்கும் ஓர் அச்சமும், தவிப்பும் ஏற்படும். சனிபகவானுக்கான வழிபாடுகளும் பூஜைகளும்கூட வெகு சிரத்தையுடன் செய்யப்படுகிறது. 'சனிபகவானைப்போல கொடுப்பவரும் இல்லை, கெடுப்பவரும் இல்லை' என்ற பயமே காரணம். சனி பகவானுக்கு எள்ளைக் கொண்டு தீபம் ஏற்றுவது சிலருடைய வழக்கமாக இருக்கிறது. ஆனால், சனி பகவானுக்கு எள்ளைக் கொண்டு தீபம் ஏற்றுவது தவறானது என்றும், சரியானதுதான் என்றும் இருவிதமான கருத்துகள் நிலவுகின்றன. இது குறித்த நம் சந்தேகத்தைப் போக்கிக்கொள்வதற்காக, வேத விற்பன்னர் சிவஸ்ரீ சுவாமிகளிடம் கேட்டோம்.

"பொதுவாக தானியங்களை எரிப்பது என்பதே தவறு. யாகங்களில், ஹோமங்களில் தானியங்களை முழுமையாகத் தீயில் சமர்ப்பிப்பது என்பது வேறு. அது அந்தந்த தேவதைகளுக்கு உரிய ஆகுதியாகச் சென்று சேர்ந்து விடுகிறது. ஆனால், சனீஸ்வரனுக்கு உரிய சமித்தான எள்ளைக் கொண்டு விளக்கு ஏற்றுவது என்பது தவறான செயல். எள்ளில் இருந்து பெறப்பட்ட நல்லெண்ணெயைக் கொண்டுதான் விளக்கேற்ற வேண்டும். அதுவே சாஸ்திரங்கள் சொல்லும் உண்மையும்கூட.


ஆர்வக்கோளாறால் எவரோ செய்ததை நாமும் ஆராயாமல் செய்வது தவறானது. ஆகமங்கள் எங்கும் இந்த விளக்கைப் பற்றி சொல்லவே இல்லை. எள் சாதம் செய்து சனீஸ்வரனுக்கு நைவேத்தியமாக்கி கொடுக்கலாம் அது வேறு விஷயம்.

தானியங்கள் யாவும் ஒவ்வொரு கிரகங்களின் ஆதிக்கத்தைப்பெற்றவை. அந்த கிரகங்களின் குணாதிசயங்களைபிரதிபலிப்பவை. சனீஸ்வர பகவானின் குணங்களைக் கொண்டிருக்கும் எள்ளை தீபத்தின் வழியாக எரிப்பது எந்த விதத்திலும் நல்லதல்ல. இதனால் எதிர்மறை எண்ணங்களே உருவாகும். யாரோ எப்போதோ செய்ததால் அதைத்தொடர்ந்து எல்லோரும் செய்து வருகிறார்கள். சண்டிகேஸ்வரருக்கு கையை தட்டி காண்பிப்பது, நந்தியம்பெருமானின் பின்பக்கம் தட்டுவது போன்ற ஆதாரமற்றச் செயலைப்போன்றது தான் எள் தீபம் ஏற்றுவதும். எள் சூடு. எள் நெய் குளிர்ச்சி. எள்ளை எண்ணெய்யாக தீபமிட்டு வணங்குவது தான் சனிபகவானுக்கு ப்ரீத்தியைத்தரும்.

இறைவனுக்கு ஒளியைத் தரும் விளக்கேற்றும் செயல் புண்ணியமான காரியம். கோயில்களில் விளக்கேற்றும் கைங்கர்யத்துக்காக அரசர்களால் நிவந்தம் எனும் பெயரில் தானமாக நிலங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன. முக்கூட்டு எண்ணெய் என்று ஆதிகாலத்தில் பனையெண்ணெய், ஆமணக்கெண்ணெய், எள் எண்ணெய் தான் ஆலயங்களில் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது என வரலாறு கூறுகிறது. வசதியானவர்களால் மட்டுமே பசு நெய் கொண்டு விளக்கு ஏற்றப்பட்டு வந்துள்ளது. இன்று விளக்கேற்றும் எண்ணெய் என வகை வகையாக பல எண்ணெய்கள் வந்துள்ளன. என்றாலும், எள் எண்ணெய் கொண்டு போடப்படும் தீபமே உத்தமமானது. அப்படி இருக்க மகாலட்சுமி வாசம் செய்யும் எள்ளை எரித்து விளக்கேற்றுவது நல்லதல்ல.

எள்ளை எரித்து விளக்கிடும் முறை இலங்கையில் மட்டும்தான் நடைமுறையில் இருந்தது. எள்ளைச் சிறு மூட்டையாகக் கட்டி, நல்லெண்ணெயில் இட்டு விளக்கிடுவார்கள். அது இப்போது தமிழகத்துக்கும் பரவி, விவாதமாகியுள்ளது.

ஆலயங்களில் வழிபாடு என்பது, பகவான் வகுத்துத் தந்த ஆகமங்களிபடிதான் செய்யப்படவேண்டும்" என்றார்.






| ஒப்பீடு | ரியல் எஸ்டேட் | தங்கம் |
|---|---|---|
| முதலீட்டு தொகை | பெரும் தொகை | வசதிக்கேற்ப சிறிய தொகை போதுமானது |
| காலம் | நீண்ட காலத்திற்கானது | குறைந்த காலத்திற்கு உகந்தது |
| வருமானம் | வாடகை மூலமாக நிலையான வருமானம் சாத்தியம் | சந்தை நிலவரப்படி ஏற்ற இறக்கம் கொண்டது |
| பணமாக்குதல் | கடினம் | சுலபம் |
| ஏற்ற இறக்கம் | குறைவு | அதிக வாய்ப்பு |
| முதலீட்டு புரிதல் | சந்தை பற்றிய அறிவு மற்றும் புரிதல் | ஒளிவு மறைவற்ற தர முதலீடு |
| வரி | கட்டமைக்கப்பட்ட வரி சலுகைகள் | மூலதன இலாப வரி |
| பொருளாதார தாக்கம் | பொருளாதார வளர்ச்சிக்கு நலல்து | பொருளாதார வளர்ச்சிக்கு உகந்ததல்ல |

# தங்கமா அல்லது சொத்தா - எது சரியான முதலீடு?

நம்மவர்களிற்கு தங்கத்தின் மீது எப்பொழுதும் அலாதி பிரியம் உண்டு. காலம் காலமாக தங்கம் சேமிப்பது என்பது உயர் பொருளாதார நிலைக்கு ஒப்பிடப்பட்டது. தங்கத்தில் முதலீடு செய்வது விவேகமான முடிவாக கருதகப்பட்டது. ஆனால் தற்போதுள்ள ஏற்ற இறக்கமான சூழலில், இந்த புனிதமான மஞ்சள் உலோகத்தில் முதலீடு செய்வது உகந்ததா என்ற கேள்வி எழாமலில்லை.

தங்கத்திற்கு நிகரான முதலீடு என்றால் ரியல் எஸ்டேட்டை சொல்லலாம். இந்த இரண்டையும் பல்வேறு அளவுகளுக்குள் ஒப்பிட்டு பார்க்கலாம்.

### மூலதனம்

தங்கமோ சொத்தோ, எதில் முதலீடு செய்வது என்பது எவ்வளவு மூலதனம் கையிருப்பில் உள்ளது என்பதை பொறுத்துள்ளது.

சொத்து முதலீட்டுக்கு பெரும் தொகை தேவை. பொதுவாக மொத்த மதிப்பில் இருபது சதவிகிதம் முன்தொகையாக செலுத்த வேண்டும். மீதமுள்ள தொகையை வங்கியில் வீட்டுக்கடனாக பெற்றுக் கொள்ளலாம். ஒரு சிறிய ஃப்ளாட் வாங்க வேண்டும் என்றாலும் பல லட்சங்கள் தேவைப்படும்.

தங்கத்தில் முதலீடு செய்ய குறைவான தொகையே போதுமானதாக இருக்கும்.

### வருமானம்

வருமானத்தை கணக்கிடும் போது சொத்தின் மீது நிலையான வருமானம் பெற முடியும். இதுவே தங்கத்தின் மீது சந்தையின் நிலவரப்படி வருமானம் வேறுபடும்.

### முதலீட்டு இயல்பு

ஏற்ற இறக்கம் சந்தை முதலீட்டாளராகளை என்றுமே அச்சுறுத்தக் கூடியது. ரியல் எஸ்டேட்டில் முதலீடு ஒப்பீட்டளவில் பார்க்கையில் நிலையானதே. தங்கத்தில் முதலீடு ஏற்ற இறக்கம் கொண்டது.

### முதலீட்டு காலம்

நீண்ட கால வருமானத்திற்கு ஏற்றது ரியல் எஸ்டேட். குறுகிய காலத்தை விட நீண்ட கால முதலீடு நன்மையை தரும். குறுகிய கால வருமானம் வேண்டுபவர்களுக்கு ஏற்றது தங்கத்தின் மீதான முதலீடு.

### பணமாக்குதல்

முதலீடு செய்வதற்கு முன் அவசர தேவைக்கு எளிதாக பணமாக்க இயலுமா என்பதை கருத்தில் கொள்வது அவசியம். ரியல் எஸ்டேட் முதலீட்டில் இது சாத்தியப்படும் என்றாலும் தங்கம் மற்றும் .ணிஜிதி ஆகியவற்றில் இது அதிகமாக சாத்தியப்படும்.

### பொருளாதார தாக்கம்

பிற நாடுகளில் இருந்து தங்கம் இறக்குமதி செய்யப்படுகிறது. அதிக மதிப்புடைய பணத்தில் இறக்குமதி செய்யும் போது நம் ரூபாயின் மதிப்பு குறையும். இதனால் மூலதன பொருட்கள் மற்றும் எரிபொருளின் விலை ஏற்றம் அடையும். இதனால் தங்கத்தில் முதலீடு நாட்டின் பொருளாதாரத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும். ஆனால் ரியல் எஸ்டேட் மீதான முதலீடு பொருளாதாரத்தை மேம்படுத்தும்.

பொருளாதார நெருக்கடியின் பொழுது தங்கம் கையிருப்பு உதவும் என்றாலும் நீண்ட கால முதலீட்டிற்கு உகந்ததல்ல என்கிறார்கள் நிபுணர்கள். பழைய சிந்தனை முறையை கையாள்வதை தவிர்த்து காலத்திற்கேற்ப முதலீடு முடிவு எடுப்பதே சலாச் சிறந்தது.

# தீபம் சுப்பர் மார்க்கெட்

ஒரு சொத்தையோ, பொருளையோ வாங்குவதும், விற்பதும் நமது கையை மீறி சென்று கொண்டிருக்கிறது. வாகனம், காணி, வீடு எதுவென்றாலும் தரகர்களின் தொல்லை அதிகரித்து செல்கிறது. தரகர்களின் தொல்லையால் எதையும் நியாயமான விலைக்கு விற்கவோ, வாங்கவோ முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

இந்த பிரச்சனைக்கு தீர்வுகாண சில சிங்களம், ஆங்கில மொழி இணையத்தளங்கள் இயங்கினாலும், தமிழில் எந்த முயற்சியும் நடக்கவில்லை. தீபம் வாரஇதழ் முதன்முறையாக அச்சு ஊடகத்தில் இந்த முயற்சியை ஆரம்பிக்கிறது. உங்களிற்கு தேவையான சொத்தை/ பொருளை பற்றியோ, அல்லது விற்பனைக்கு உள்ள சொத்தை/ பொருளை பற்றியோ தீபம் வாரஇதழின், தீபம் சுப்பமார்க்கெட் பகுதியில் விளம்பரப்படுத்துங்கள். இதில் இடைத்தரகர்களிற்கு இடமில்லை. இடைத்தரகர்கள் நிராகரிக்கப்பட்டு விடப்படுவீர்கள் என்பதால், தொடர்பு கொள்வதை தவிர்த்து விடுங்கள். இந்த பகுதியில் வெளியாகும் அனைத்து விளம்பரங்களிற்கும் இது பொருந்தும்.

விளம்பரப்படுத்துவதென்றால், எவ்வளவு பணம் செலுத்த வேண்டும்? இந்த கேள்விதான் உங்களிற்கு முதலில் ஏற்படும். அந்த கவலையையே விடுங்கள். பரீட்சார்த்த முயற்சியாக முற்றிலும் இலவசமாகவே இதை செயற்படுத்துகிறோம்.

உங்களிடம் உள்ள சொத்தை/ பொருளை விளம்பரப்படுத்த வேண்டுமென்றால் என்ன செய்ய வேண்டும்?

நீங்கள் மின்னஞ்சல் கணக்கு வைத்துள்ளவரா? அப்படியென்றால், deepamdesk@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு, விற்பனை பொருளின் படம், அதன் பாவனை விபரம், எதிர்பார்க்கும் விலை, உங்கள் தொலைபேசி இலக்கம் என்பவற்றை குறிப்பிட்டு அனுப்பி வையுங்கள்.

மின்னஞ்சல் கணக்கு இல்லையென்றாலும், கவலைப்பட வேண்டியதில்லை. 0768255562 என்ற தொலைபேசி எண்ணுக்கு, விபரங்களை SMS செய்யுங்கள். மேலதிக விபரங்களிற்கு நாங்களே உங்களை தொடர்பு கொள்வோம்.

தபாலில் அனுப்பிவைப்பவர்கள்
தீபம் சுப்பர்மார்க்கெட்,
தீபம் வாரஇதழ்,
989/1, பருத்தித்துறை வீதி,
கல்வியங்காடு, நல்லூர், யாழ்ப்பாணம்.
என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

## தேவை

**Chick incubator**

நல்ல நிலையில் முட்டை பொரிக்கும் இயந்திரம் வைத்திருப்பவர்கள் தொடர்பு கொள்ளவும்.
Capacity 350700
தொடர்புக்கு: 0770575314

**முச்சக்கரவண்டி**

நல்ல நிலையிலுள்ள 2 Stoke முச்சக்கர வண்டியொன்று தேவை. வடக்கின் எந்த பகுதியிலிருந்தாலும், உடன் தொடர்புகொள்ளவும்.
தொடர்புக்கு: 0771816039

**வீடு**

யாழ் நகரிலுள்ள அலுவலகமொன்றிற்கு வீடு தேவை. மாநகரசபை எல்லைக்குட்பட்ட, அல்லது அண்மித்த பகுதியிலுள்ள, நல்ல நிலையிலுள்ள வீடு தேவை.
தொடர்புக்கு: 0771816039





**HONDA HONART BIKE**
20,000km
எதிர்பார்க்கும் விலை:
**250,000Rs**
தொடர்புக்கு: 0771864593
(டினேஷ்)




**YAMAHA FAZER BIKE**
27000km.
எதிர்பார்க்கும் விலை:
**325,000Rs**
தொடர்புக்கு: 0774403654
(கபீசன்)





**HONDA TWISTER BIKE**
5500km
எதிர்பார்க்கும் விலை:
**210,000Rs**
தொடர்புக்கு:
0770366456 (அஜந்தன்)



**TVS WEGO**
43,100km
எதிர்பார்க்கும் விலை:
**110,000Rs**
தொடர்புக்கு: 0771816039



பீஷ்மர்

விடுதலைப்புலிகள் அமைப்பிற்குள் கலகம் செய்து, தனிவழி செல்ல கருணா முடிவெடுத்ததன் பின்னணி, இதனால் ஏற்பட்ட குழப்பங்கள் பற்றி இந்த தொடரின் கடந்த அத்தியாயங்களில் விரிவாக எழுதியிருந்தோம். புலிகளை எதிர்த்து போரிட முடிவெடுத்த கருணா, பின்னர் போரிட முடியாத நெருக்கடி நிலைமையை சந்தித்தார். அவருக்கு தப்பிச்செல்வதை விட வேறு எந்த மாற்றுவழியையும் புலிகள் ஏற்படுத்திக் கொடுக்கவில்லை. கருணா தப்பிச் செல்வதைவிட வேறு வழியில்லையென்றபோதும், புலிகள் நிறைய விட்டுக்கொடுப்புக்கள் செய்தார்கள். கருணாவிற்கு எட்டு வாக்குறுதிகள் தொடர வேண்டுமென அவர் விரும்பவில்லை.

விடுதலைப்புலிகளிற்கு கருணா தரப்பிலிருந்து வழங்கப்பட்ட எட்டு வாக்குறுதிகளில், நான்காவது வாக்குறுதி இது. கைது செய்து தடுத்து வைக்கப்பட்டுள்ள விடுதலைப்புலிகளின் ஆதரவாளர்கள், போராளிகளை உடனடியாக ஆபத்தின்றி விடுதலை செய்யப்படுவார்கள்.

ஆனால் இந்த வாக்குறுதியை கருணா தரப்பு காப்பாற்றவில்லை. பதிலாக புலிகளை சீண்டும் விதமாக நடந்தார்கள். கருணா தரப்பு அப்படி நடந்து கொண்டதுதான், பின்னாளில் பெரும் இரத்தகளரி ஏற்பட பிள்ளையார்சுழி போட்டது. அது என்ன சம்பவம்?

புலனாய்வுத்துறை உறுப்பினர்கள் அத்தனை பேரையும் கருணா அணியினர் வளைத்துப்பிடித்திருந்தனர். சந்திப்பொன்றிற்காக வருமாறு அழைத்து, சூட்சுமமாக அவர்களை வளைத்து பிடித்தனர். அவர்களை வளைத்து பிடித்த கருணா அணியின் ஒப்ரேசனிற்கு பொறுப்பாக இருந்தவர் இன்று கிழக்கில் வெள்ளை வேட்டி, சட்டை அரசியல் செய்யும் ஒருவர். வார்த்தைக்கு வார்த்தை அகிம்சை போதிக்கும் ஆள்!

நீலனையும் சில புலனாய்வு போராளிகளையும் கருணா அணியினர் விலங்கிட்டு, அடைத்து வைத்திருந்தனர் என்பதை ஏற்கனவே குறிப்பிட்டிருந்தோம்.

கிழக்கிலிருந்து தப்பி செல்ல போராளிகளை 01.03.2004 அன்று கருணா அணியினர் கைது செய்தனர். 12.04.2004 அன்று காலையில் தனது மருதம் முகாமிலிருந்து கருணா தப்பியோடினார். கைது செய்யப்பட்டதிலிருந்து, கருணா தப்பியோடும் வரை நீலனும் போராளிகளும் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். மீனகம், வடகாடு என பல இடங்களில் மாற்றி மாற்றி தடுத்து வைத்திருந்தனர்.

12ம் திகதி அதிகாலையில் தனது உதவியாளர்களை அழைத்த கருணா, தடுத்து வைக்கப்பட்டிருந்த நீலனை தனது மருதம் முகாமிற்கு கொண்டு வரும்படி கட்டளையிட்டார்.

12ம் திகதி காலையில் தனது கட்டுப்பாட்டில் இருந்த கடைசி அணியான, மகளிர் படையணியினரை

# பிரபாகரன் வளர்த்த கடா மார்பில் பாய்ந்தது!





தற்காப்புகலையில் பிரபாகரன்




கொடுத்தார்கள். பதிலுக்கு கருணாவும் எட்டு வாக்குறுதிகள் கொடுத்தார். கடந்த அத்தியாயத்தில் இதைப்பற்றி விரிவாக குறிப்பிட்டிருந்தேன்.

கருணாவுடனான யுத்தத்தில் வெற்றி பெறும் கடைசிப்புள்ளியில் இருந்து கொண்டும், கருணாவுடன் இணக்கப்பாட்டை ஏற்படுத்தி, ' அமைதியாக பிரச்சனையை முடிக்க புலிகள் முயன்றார்கள். வழக்கமாக புலிகள் இப்படி நடந்து கொள்வதில்லை. கருணா விசயத்தில் மட்டுமே பிரபாகரன் இப்படி முடிவெடுத்தார்.

ஆனாலும், பிரபாகரனின் நல்லெணத்தை கருணா உதாசீனம் செய்தார். கருணா புலிகள் உடன்படிக்கை வலுவிழக்க காரணமாக அமைந்தது, கருணா தரப்பு செய்த ஒரு செயல் என்பதை கடந்தவாரம் குறிப்பிட்டு, அதைப்பற்றி இந்த வாரம் எழுதுவதாக கூறியிருந்தேன். புலிகளிற்கும், கருணாவிற்குமிடையில் இணக்கப்பாடு எட்டப்பட்டிருந்தபோதும், மட்டக்களப்பிலிருந்து தப்பிச் செல்வதற்கான வாய்ப்பாக மட்டுமே கருணா பயன்படுத்தினார். அந்த இணக்கப்பாடு

இந்த தொடரை வாசித்து வருபவர்களிற்கு, சிலவாரங்களின் முன்னர் நீலனை பற்றி குறிப்பிட்டது நினைவிருக்கலாம். புலிகளின் மட்டு. அம்பாறை துணை புலனாய்வுத்துறை பொறுப்பாளராக இருந்தவர். கருணா குழப்பம் விளைவிக்க தொடங்கியதும், அதை ஆரம்பத்திலேயே முறியடிக்க, புலிகளின் பாணியிலான இரகசிய ஒப்ரேசன் ஒன்றிற்கு தயாரானவர். ஆனால், அவரது அணியிலிருந்த ஒரு சாதாரண போராளியின் காதல் சமாச்சாரத்தால் விசயம் லீக் ஆகி, மட்டக்களப்பில் தங்கியிருந்த

முடிவெடுத்ததும் கருணா செய்தது இரண்டு விசயங்கள். முதலாவது தளபதிகளை அழைத்து தனது முடிவை சொன்னார். பல தளபதிகள் அதற்கு உடன்படவில்லை. இராணுவத்துடன் இணைந்து செயற்படுவது அவர்களிற்கு உடன்பாடாக இருக்கவில்லை. “ நமது எதிரி இலங்கை அரசுதான். விடுதலைப்புலிகளின் நடவடிக்கை பிழையாக இருக்கிறது, அவர்களிற்கு எதிராக போராடுங்கள் என்று நீங்கள் சொன்னால் அவர்களிற்கு எதிராகவும் போராடுவோம். ஆனால் விடுதலைப்புலிகளுடனான முரண்பாட்டை காரணமாக சொல்லி, அரசாங்கத்துடன் இணைய நாங்கள் தயாராக இல்லை“ என பல தளபதிகள் நேரடியாக சொல்லிவிட்டனர்.

தப்பிச்செல்ல முன்னர் கருணா செய்த இரண்டாவது விசயம் தடுத்து வைக்கப்பட்டிருந்த விடுதலைப் புலிகளின் போராளிகளை கொல்ல முடிவெடுத்தது.

மீனகம் முகாமில் சந்திப்பொன்றிருப்பதாக கூறி அழைத்த நீலன் தலைமையிலான புலனாய்வுப்பிரிவு

வீட்டுக்கு செல்லுமாறு கருணா கூறினார். ஆனால் அவர்கள் அதை ஏற்கவில்லை. அதற்கு முக்கிய காரணம் கருணா தம்முடன் பகிடி விடுகிறார் என்றுதான் அவர்கள் நினைத்தார்கள். ஆனால், தனது நெருக்கடி நிலைமையை அவர்களிடம் சொன்ன கருணா, வீட்டுக்கு செல்லுங்கள் என்றார். அவர்களில் சிலர் அதை ஏற்கவில்லை. ஒரு கைக்குண்டை• வீசியெறிந்து வெடிக்க வைத்து, அவர்களை கலைத்தார். பின்னர், முகாமின் இன்னொரு அறைக்குள் தடுத்து வைக்கப்பட்டிருந்த நீலனை இழுத்து வந்தனர். அவரது கையில் விலங்கிடப்பட்டிருந்தது. கண் கட்டப்பட்டிருந்தது. அவரை சுட்டுக் கொன்றனர்.

கருணா அணியினரால் கொல்லப்பட்ட முதலாவது விடுதலைப்புலி போராளி நீலன் அல்ல. அதற்கு முன்னரே, தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்களில் ஐவர் கொல்லப்பட்டனர். 07ம் திகதி இரண்டுபேர் கொல்லப்பட்டனர். 10ம் திகதி அதாவது புலிகளின்

தொடர்ச்சி அடுத்தபக்கம்...

ஒப்ரேசன் ஆரம்பிக்கப்பட்டதற்கு மறுநாள் மூவர் கொல்லப்பட்டனர். அவர்கள் கொல்லப்பட்ட விசயத்தை உடனுக்குடன் தொலைத்தொடர்பு சாதனங்களின் ஊடாக விடுதலைப் புலிகளிற்கு அறிவித்து, கோபமூட்டும் காரியத்தையும் செய்துகொண்டிருந்தனர். இந்த வரிசையில் கொல்லப்பட்டவரே நீலன்.

அதாவது, தடுத்து வைக்கப்பட்டுள்ள விடுதலைப்புலிகளின் போராளிகளை விடுவிப்பேன் என வாய்மூல உத்தரவாதத்தை இடைத்தரகர்கள் ஊடாக விடுதலைப்புலிகளிற்கு கருணா வழங்கியதற்கு மறுநாள் காலையில், அவர்களின் பிடியிலிருந்து முக்கிய புலிகளின் தளபதி கொல்லப்பட்டார்.

கருணா தப்பியோடிய பின்னர், மருதம் முகாமிற்குள் நுழைந்து புலிகள் தேடுதல் நடத்தியபோது, சிறிய பதுங்குகுழியொன்றிற்குள் நீலனின் உடல் கண்டுபிடிக்கப்பட்டது. கருணாவின் வாக்குறுதியின்படி நீலன் கை, கால்கள் கட்டப்பட்ட நிலையிலாவது எங்காவது தடுத்து வைக்கப்பட்டிருக்ககூடும் என்றுதான் புலிகள் எதிர்பார்த்தனர். ஆனால் அவரது சடலம்தான் இருந்தது.

கருணா குழுவுடன் எந்த இணக்கப்பாடும் சரியாக வராதென புலிகள் முடிவெடுத்த கணம் அது.

இதற்கு பின்னர் என்ன நடந்த தென்பதை நான் எழுத வேண்டியதில்லை. இரு தரப்பும் மாறிமாறி சன்னதமாடியதில் கிழக்கில் தொடங்கிய இரத்த ஆறு, கொழும்புவரை ஓடியது. அதைப்பற்றி புதிதாக எதையும் சொல்ல வேண்டியதில்லை.

மட்டக்களப்பில் இருந்து தனக்கு மிக நெருக்கமானவர்கள், முக்கிய தளபதிகளுடன் கொழும்பின் புறநகர் பகுதிக்கு கருணா தப்பிச்சென்றார். ஐ.தேக பாராளுமன்ற உறுப்பினர் அலிசாஹிர் மௌலானா இதற்கான ஏற்பாடுகளை செய்தார். கொழும்பில் சில வாரங்கள் தங்கியிருந்த கருணா, பின்னர் எங்கிருக்கிறார் என்பதை புலிகளால் அறிய முடியாமல் போனது.

தமது உயர்மட்ட தொடர்புகளின் ஊடாக புலிகளின் புலனாய்வுத்துறை முழு மூச்சில் தேடியபோது, ஒரு அதிர்ச்சி செய்தி கிடைத்தது.

கருணா இந்தியாவில் தங்கியிருக்கிறார் என்பதே அந்த செய்தி!

விடுதலைப்புலிகளில் இருந்து பிரிந்து வந்த தளபதியை இந்திய புலனாய்வு அமைப்பான றோ அதிகாரிகள் நேர்காணல் செய்ய விரும்பியிருந்தார்களாம். இதையடுத்து, தமிழகத்திலுள்ள றோவின் இரகசிய முகாம் ஒன்றில் கருணா தங்கவைக்கப்பட்டு, றோ அதிகாரிகளால் தகவல்கள் பெறப்பட்டுக் கொண்டிருக்கிறது என்று கிடைத்த செய்தி, புலிகளை உண்மையில் கொஞ்சம் பயமுறுத்தியது.

மட்டக்களப்பில் இருந்து வெளியேறிய பின்னர், எந்தவிதமான இராணுவ செயற்பாட்டிலும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஈடுபட மாட்டேன், புலிகளுக்கு எதிராக செயற்படமாட்டேன் என வாக்குறுதி வழங்கிவிட்டு சென்ற கருணா, எதற்காக இந்திய புலனாய்வு அமைப்பின் இரகசிய முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ளார்?

கருணா தமக்கு வழங்கிய உத்தரவாதம், பாதுகாப்பாக தப்பிச்செல்வதற்கான சூழலை ஏற்படுத்தகையாண்ட உத்தியென புலிகள் கருதினார்கள். இந்த சமயத்தில் இலண்டனில் இருந்த தமது தொடர்பாளர்கள் மூலம், இந்தியாவிற்கு தமது அதிருப்தியை புலிகள் தெரிவித்தனர். எனினும், கருணா தமது நாட்டில் இல்லையென இந்தியா தரப்பில் பதிலளிக்கப்பட்டது.

இந்த சமயத்திலேயே கொழும்பில் தங்கியிருந்த கருணா அணியினரின் மீது தாக்குதல்களை ஆரம்பித்தனர் புலிகள். கருணா அணியில் இருந்தவர்கள் அனைவருமே அங்கு விசுவாசமாக இருந்தவர்கள் அல்ல. சிலர் சந்தர்ப்ப சூழ்நிலைகளால் அங்கு சிக்கிகொண்டவர்கள். சிலர் தப்பிவர வழியில்லாமல் அங்கிருந்தவர்கள். இன்னும் சிலர், விடுதலைப்புலிகளின் ஆட்கள். அவர்கள் இரகசியமாக கருணா குழுவிற்குள் ஊடுருவியிருந்தனர்!.

தப்பிவர வழியில்லாமல் கருணா குழுவிற்குள் சிக்கியிருந்தவர்களை புலிகள் இரகசியமாக தொடர்பு கொண்டு, தமது பக்கம் இழுத்தெடுத்தனர். சும்மா இழுத்தெடுக்கவில்லை. நடுஇரவில் கருணா குழுவினர் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தபோது, அவர்களை சுட்டுக்கொன்றுவிட்டு, புலிகளிடம் தப்பிவர தொடங்கினார்கள்.



கருணாவின் சகோதரர் றெஜி

**தப்பிவர வழியில்லாமல் கருணா குழுவிற்குள் சிக்கியிருந்தவர்களை புலிகள் இரகசியமாக தொடர்புகொண்டு, தமது பக்கம் இழுத்தெடுத்தனர். சும்மா இழுத்தெடுக்கவில்லை. நடுஇரவில் கருணா குழுவினர் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தபோது, அவர்களை சுட்டுக்கொன்றுவிட்டு, புலிகளிடம் தப்பிவர தொடங்கினார்கள்.**

கருணாவின் சகோதரரான றெஜி இப்படித்தான் கொல்லப்பட்டார். கொழும்பு கொட்டாவ பகுதியில் கருணா அணியின் இரகசிய மறைவிடத்தில் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில், அவர்களின் நிதி பொறுப்பாளராக இருந்த குகனேசன் என்பவர் உள்ளிட்ட எட்டுப்பேர் கொல்லப்பட்டனர்.

இந்த தாக்குதல்கள் கருணா அணிக்குள் பெரும் குழப்பத்தை ஏற்படுத்தியது. நிம்மதியில்லாத நிலைமையை ஏற்படுத்தியது.

இந்த சமயத்தில் கருணா இந்தியாவிலிருந்து திரும்பி வந்து, பொலனறுவ எல்லையிலுள்ள மின்னேரியா முகாமில் தங்கியிருக்கிறார் என்ற தகவல் புலிகளிற்கு சென்றது. இதன்பின்னரே, வெலிகந்த பகுதிகளில் இராணுவ முகாமிற்கு அருகில் கருணா அணி பிரமாண்ட முகாமொன்றை அமைத்து தங்கியிருக்க தொடங்கியது.

இப்படி பிரமாண்ட முகாமாக இருந்தால், நடு இரவில் சுட்டுவிட்டு செல்வதை தவிர்க்கலாமென நினைத்தார்கள். இதுதான் கருணா பிரிவு, அதன்பின் நடந்தசம்பவங்களின் முழுமையான விபரம்.

இந்த கதையுடன் தொடர்புடைய இன்னொரு பெரிய பிளாஷ்பேக் உள்ளது. அதையும் சொன்னால்தான் கருணா விவகாரம் முழுமையடையும். இதற்காக உங்களை கருணாவின் ஆரம்ப காலத்திற்கு அழைத்து செல்கிறோம்.

1983ஆம் ஆண்டில் விடுதலைப் புலிகள் அமைப்பில் இணைந்தவர் கருணா. இந்தியாவின் மூன்றாவது பயிற்சி முகாமில் பயிற்சியை முடித்துக் கொண்டு, இலங்கைக்கு திரும்பினார். சிறிதுகாலத்தில் மட்டக்களப்பிலிருந்து பத்து வரையான போராளிகளை அழைத்து தன்னுடன் வைத்திருந்தார். அதில் கருணாவும் ஒருவர்.

தன்னுடைய மெய்க்காவலர் அணியில் உள்ள திறமையானவர்களிற்கு பெரிய பொறுப்புக்கள் வழங்குவது பிரபாகரனின் வழக்கம். கருணாவில் ஏற்பட்ட நம்பிக்கை, அவரின் செயற்பாடுகளில் உண்டான திருப்தியெல்லாம் சேர, அமைப்பில் சேர்ந்து வெறும் மூன்றரை வருடத்தில் அவரை மாவட்ட தளபதியாக்கினார். அந்த சமயத்தில் மட்டக்களப்பில் குமரப்பா, ராம், றீகன், அன்ரனி உள்ளிட்ட பல தளபதிகள் இருந்தனர். ஆனால், கருணாவை மட்டக்களப்புக்கு தளபதியாக நியமிக்க பிரபாகரன் முடிவெடுத்தார். 1986ஆம் ஆண்டின் பிற்பகுதி. தன்னுடன் நின்ற கருணாவை மட்டக்களப்பிற்கு பிரபாகரன் அனுப்பி வைத்தார் சும்மா அல்ல, தளபதியாக!

அனுப்பும்போதே, மட்டக்களப்பு தளபதியாக கருணா செயற்படுவார் என பிரபாகரன் அறிவித்திருந்தார். அப்போது குமரப்பா மட்டக்களப்பில் தளபதியாக இருந்தார். கருணாவிடம் பொறுப்பை ஒப்படைத்துவிட்டு, அவர் சரியாக செயற்படுகிறாரா என்பதை அவதானிக்க சிறிதுகாலம் அங்கேயே தங்கியிருந்தார். ஏனெனில் கருணா புதியவர். பல சீனியர்கள் அங்கிருந்தார்கள். அவர்கள் கருணாவிற்கு ஒத்துழைக்காமல் விடலாம். அல்லது, மாவட்ட தளபதியாக செயற்பட்டு அனுபவமில்லாத கருணா ஆரம்பத்தில் தடுமாறலாம். இதையெல்லாம் யோசித்துத்தான், குமரப்பாவை மட்டக்களப்பில் தங்கியிருக்குமாறு பிரபாகரன் உத்தரவிட்டிருந்தார். கருணா தனித்து செயற்படுவார் என குமரப்பா உறுதிசெய்த பின்னர்தான் யாழ்ப்பாணம் வந்தார்.

கருணா மட்டக்களப்பிற்கு தளபதியாக செயற்பட்ட காலத்தில் அம்பாறை தளபதியாக இருந்தவர் அன்ரனி. (இவரது பெற்றோர் கனகசூரியம் சௌந்தரி தம்பதியினர் கல்முனை 1ம், 2ம் வார்ட் உறுப்பினர்களாக இருந்தவர்கள்) 5வது பயிற்சிமுகாமில் பயிற்சியெடுத்தவர். பயங்கர திறமைசாலி. கிழக்கு தள்பதியாக அவர் வருவார் என அப்போது புலிகளின் தளபதிகள் பலரிடம் ஒரு அபிப்பிராயம் இருந்தது. கிட்டு அதை பலமுறை சொல்லியிருக்கிறார். ஆனால் அவரது துரதிஸ்டம் அன்ரனியை விட கருணாவில் பிரபாகரனிற்கு சற்று கூடுதல் நம்பிக்கையிருந்தது. பிரபாகரனின் மெய்பாது காவலர் அணியில் கருணா இருந்தார். அன்ரனி அவ்வளவு நீண்டகாலம்



மேஜர் அன்ரனி

பிரபாகரனுடன் நெருங்கியிருக்கவில்லை.

கிழக்கின் தளபதியாக வருவார் என எதிர்பார்க்கப்பட்ட, அன்ரனியின் அதிர்ஸ்டமின்மை, அவரை 1990 இல் யாழ்ப்பாணத்திற்கு அழைத்தார் பிரபாகரன். அன்ரனி யாழ்ப்பாணம் வந்தபின்னர், மட்டுஅம்பாறை தளபதியாக கருணா நியமிக்கப்பட்டார். கருணாவிற்கு அப்படியொரு பொறுப்பை வழங்குவதற்காகவே, அன்ரனி யாழ்ப்பாணத்திற்கு அழைக்கப்பட்டிருக்க வேண்டும். இரண்டாம் ஈழப்போரில், வசாவிளான் முகாமிலிருந்த இராணுவம் மேலும் முன்னேறாமல் புன்னாலைக்கட்டுவன் பகுதியில் அன்ரனி பொறுப்பாக நியமிக்கப்பட்டார். 1990 ஒக்ரோபரில் அந்த பகுதியில் மரணமானார். அவருக்கு புலிகள் மேஜர் தரநிலை வழங்கினார்கள்.

அந்த பகுதி மக்களுடன் அவர் நெருக்கமாக பழகியதால், அங்குள்ள ஆஸ்பத்திரி வீதிக்கு அன்ரனி வீதியென மக்கள் பெயரும் சூட்டினர். அன்ரனி கிழக்கிலிருந்து வடக்கிற்கு வந்தது, கருணாவிற்கு சாதகமாகவே அமைந்தது.

மொத்தத்தில், வளர்த்த கடா மார்பில் பாய்வதென்பது இதைத்தானோ?

தொடரும்...

டி.நாராயண ரெட்டி
செக்ஸாலஜிஸ்ட்



# சொல்லித் தெரிவதே மன்மதக் கலை!

பழங்கால தமிழர் வாழ்வில் செக்ஸை வாழ்க்கையின் பிரிக்கமுடியாத ஓர் அங்கமாக நினைத்தார்கள். அதை ஒதுக்கி வைக்கவோ, ரகசியப் பொருளாகப் பதுக்கி வைக்கவோ அவர்கள் நினைத்ததில்லை. ஓர் ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே அரும்பும் அன்பு, காதலாக மலர்ந்த பிறகு அவர்கள் இணைந்து நடத்தும் திருமண வாழ்க்கை இந்த உறவில்தான் முழுமை பெறுகிறது என்பது அவர்களுக்குப் புரிந்திருந்தது. செக்ஸ் உறவில் ஆண் பெண் என்ற பாகுபாடு ஏதுமில்லை. கணவன்மனைவி உறவு நிலைத்து நீடிப்பதற்கு பரஸ்பரம் புரிந்துகொள்ளுதலோடுகூடிய தாம் பத்யமும் முக்கியம்.

திருமணமான புதிதில் பொங்கி வழியும் ரொமான்ஸ் போகப்போக நீர்த்துப் போய்விடும் தம்பதிகளையும் பார்க்கிறோம். 'மகிழ்வித்து மகிழ்' என்ற சொற்பதம் செக்ஸுக்கு சாலப் பொருந்தும். செக்ஸ் உறவில் காலம் காலமாகப் பலருக்கும் சந்தேகங்கள் இருக்கின்றன. எனக்குச் சமீபத்தில் வந்த வித்தியாசமான கேள்விகள் இவை.

**கேள்வி: எனக்கு வரப்போகும் பெண் நல்லவளா கெட்டவளா என்பதை எப்படித் தெரிந்து கொள்வது? திருமணத்துக்கு முன்பு உறவில் ஈடுபட்ட ஒரு பெண்ணை எப்படி இனம் காணுவது?**

**என் பதில்:** திருமண பந்தத்தின் அடிப்படையே நம்பிக்கைதான். திருமணத்திற்குப் பிறகு மனைவியின் கடந்த காலத்தை ஆராய்ச்சி செய்தால் உறவில் முறிவுதான் வரும். ஒரு பெண் கன்னித்தன்மைஉள்ளவளா இல்லையா எனக் கண்டுபிடிக்கவே முடியாது. திருமணத்துக்கு முன்பு பெண்ணுறுப்பு விரல் நுழையும் அளவுக்கே இருக்கும். ஆனால், விளையாட்டு, சைக்கிள் ஓட்டுதல் போன்ற பல்வேறு உடல் உழைப்பு சார்ந்த காரணிகளால் இயற்கையாகவே கன்னித்திரை கிழிந்து, உறுப்பு தளர்வாக இருக்கும். அதை வைத்தே கன்னித்தன்மை இழந்ததாக நினைக்கக் கூடாது. அதேபோல ஆண் ஈடுபடுவது போல இன்றைய பெண்களும் சுய இன்பத்தில் ஈடுபடுகிறார்கள். சுய இன்பம் என்பது ஓர் ஆணோ பெண்ணோ சாதாரணமாக இருப்பதற்கான அறிகுறி. சுய இன்பத்தில் ஈடுபடும் பெண்ணின் குறி விரிவடைந்திருக்கும். இப்படிப் பல்வேறு காரணிகள் இருப்பதால் சந்தேகத்தோடு இதை அணுக வேண்டாம்.

**கேள்வி: என் தாத்தாவின் தாத்தா பல பெண்களை மணந்து ஒரே வீட்டில் வாழ்ந்து வந்தவர். இப்போது என் மனைவியும் நானும் சந்தோஷமாகத்தான் இருக்கிறோம். ஆனால்,என் மனைவி,பெண்களோடு நான் பழகினாலே பயந்து சண்டை போடுகிறார். எனக்கு நல்ல தோழிகள் நிறைய பேர் உண்டு. என் மூதாதையர் வழி என் ஜீனிலும் பலதார மணம் என்ற விஷயமோ செக்ஸ் ஆசையோ இருக்கும் என்கிறாள். மனைவியைத் தவிர யாருடனும் வேறுமாதிரியான உறவினையும் கனவிலும் நினைத்ததில்லை நான். எப்படிப் புரிய வைப்பது?**

**என் பதில்:** அந்தக் காலத்தில் நிறைய பெண்களைக் கல்யாணம் செய் வதை ஒரு சோஷியல் ஸ்டேட்டஸாக நினைத்தார்கள். 'பார்த்தியா பொரு ளாதார ரீதியா நான் இத்தனை பேரை சமாளிக்கிறேன்னு' உலகத்துக்குக் காட்டத்தான்.

அதற்குத் தோதாக அன்றைய பெண்களின் மனநிலையும் கல்விச் சூழலும் இருந்தது. இன்றைய கால கட்டத்தில் படித்த விபரமறிந்த பெண் அதற்குச் சம்மதிக்க மாட்டாள். எனக்குத் தெரிந்து அந்தக் காலத்தில் பலதார மணம் செய்த பல ஆண்கள் அந்தப் பெண்களைக் கண்டுகொள் ளாமல் பொருளாதார ரீதியாகக் கடும் அவதிக்குள்ளாகி இருக்கிறார்கள். அவர்களின் குழந்தைகள் சமூகச் சிக்கலுக்கு உள்ளாகியிருக்கிறார்கள்.

இன்று சட்டத்திலும் அதற்கெல்லாம் இடமில்லை. உங்கள் மனைவியுடன் முதலில் மனம் விட்டுப் பேசுங்கள். அவரும் உங்கள் தோழிதான்: தோழிகளில் முதன்மையான அந்தரங் கமான சிநேகிதி அவர் ஒருவர் மட்டும் தான் என்று புரிய வையுங்கள். செக்ஸ் ஆசைக்கும் ஜீனுக்கும் சம்பந்தமில்லை என்ற அறிவியல் உண்மையை எடுத்துச் சொல்லுங்கள்!

*(இன்னும் கற்றுத் தருகிறேன்)*

---



# 'மிக்ஸ் ஃப்ரூட் குடிக்கலாமா?'

கோடைக்காலம் தொடங்கிவிட்டது. இளநீர் கடைகள், ஜூஸ் கடைகளில் கூட்டம் மொய்க்கிறது. புதிது புதிதாகத் தள்ளுவண்டிகளில் ஜூஸ் கடைகள் முளைக்கத் தொடங்கியுள்ளன. கூல்ட்ரிங்க்ஸ் கடைகளும் ஆங்காங்கே தோன்றுகின்றன. பல கூல்ட்ரிங்க்ஸ் கடைகளில், செக்கச்சிவப்பு வண்ணத்தில் 'மிக்ஸ் ஃப்ரூட்' என்ற பானத்தை விற்பனை செய்கிறார்கள். பெரும்பாலானோரின் விருப்பத்துக்குரிய பானமாக அது மாறியிருக்கிறது.

வாழைப்பழத்தைக் கொண்டு செய்யப்படும் இந்த 'மிக்ஸ் ஃப்ரூட்' உடலுக்குக் கெடுதல் செய்யும் பல பொருள்கள் சேர்க்கப்படுவதாகப் புகார் எழுந்துள்ளது.

இதுகுறித்து விரிவாகப் பேசினார் சித்த மருத்துவர் செந்தில் கருணாகரன்.

" பெரும்பாலும் இந்தப் பானத்தில் வாழைப்பழம்தான் இருக்கும். பெயருக்கு, கொஞ்சம் அன்னாசிப்பழம், திராட்சை, சிறிதளவு அப்பிள் சேர்ப்பார்கள். வாழைப்பழத்தைக் கரைத்து பிற பழங்களை சிறு சிறு துண்டுகளாக வெட்டிச் சேர்ப்பார்கள். கூடவே, சில ரசாயனங்கள் சேர்க்கப்படுகிறது. இனிப்புக்கு 'சக்ரின்' எனப்படும் செயற்கை இனிப்பூட்டி பயன்படுத்துகிறார்கள். ஒரு கிலோ சீனி தருகிற இனிப்பை, இந்த இனிப்பூட்டி ஒரு சிட்டிகையிலேயே கொடுத்துவிடும். ஆனால், இது வயிற்றுக்கு மிகவும் கேடு விளைவிக்கும். வாய் வெந்துபோகும். 'சக்ரீன்' கலந்த பானத்தைக் குடித்த சில நிமிடங்களிலேயே நம் உடலில் இன்சுலின் உற்பத்தியாக ஆரம்பித்துவிடும். தேவையில்லாத நேரத்தில் உற்பத்தியாவதால், தேவைப்படும்போது அதன் உற்பத்தி குறைந்துவிடும். இதனால் நீரிழிவு பாதிப்பு ஏற்பட வாய்ப்புள்ளது.

சிலர் சுவைக்காக இதனுடன் பாதாம்பால் சேர்ப்பார்கள். இரண்டையும் கலந்து குடிக்கும்போது வயிற்றுக் கோளாறுகள் ஏற்பட வாய்ப்புள்ளன.

இது மட்டுமின்றி, இந்த பானத்தில் வீரியமுள்ள ஒருவகை எசன்ஸ் சேர்க்கிறார்கள். அதுதான் இந்தப் பானத்தின் வாசனைக்குக் காரணம். ஆனால், அதுவும் உடலுக்குக் கேடுவிளைவிக்கக் கூடியது. அதைவிட ஆபத்தானவை செயற்கை நிறமூட்டிகள். நம் உணவுப்பண்டங்களில் சேர்ப்பதற்காகவே ஏறத்தாழ 1000த்துக்கும் மேற்பட்ட செயற்கை நிறமூட்டிகள் உள்ளன. இந்த நிறமூட்டிகளைப் பயன்படுத்திச் செய்யப்பட்ட உணவுகள் செரிமானக்கோளாறை ஏற்படுத்தும். நரம்புக் கோளாறுகள், தோல் சம்பந்தமான பிரச்னைகளும் உண்டாகும். வாந்தி, குமட்டலையும் ஏற்படுத்தும்.மேலும் செயற்கை நிறமூட்டிகள் கலந்த உணவுகள் நம் குடலுக்குள் அப்படியே தங்கிவிடும் . இது குடலின் உட்கிரகிப்புத்தன்மையை குறைத்துவிடும்.

வெள்ளைச் சீனியோ, சக்ரீனோ கலக்கும்போது அதனுடைய உண்மையான பலன் கிடைக்காது. அதேபோல், ஒவ்வொரு பழத்துக்கும் இனிப்பு,புளிப்பு, துவர்ப்பு என தனித்தனிச் சுவை இருக்கிறது. தனித்த சத்துகளையும். உடையது. ஒவ்வொரு பழத்தையும் தனியாகச் சாப்பிட்டால்தான் அதற்குரிய பலன் கிடைக்கும். அனைத்தையும் ஒன்றாகக் கலந்து சாப்பிடும்போது அஜீரணக் கோளாறுதான் உண்டாகும். பொதுவாக, இதுபோன்ற பானங்களைத் தவிர்த்து, பழங்களை அப்படியே சாப்பிடுவதுதான் ஆரோக்கியத்துக்கு நல்லது. அப்படிச் சாப்பிட்டால் பழங்களில் உள்ள நார்ச்சத்து முழுமையாகக் கிடைக்கும். அல்லது வீட்டுக்குப் பழங்களை வாங்கிச்சென்று ஜூஸாக்கி, சீனி சேர்க்காமல் குடிக்கலாம்.

வெள்ளைச் சீனியை பெரும்பாலும் தவிர்ப்பது நல்லது. பனங்கற்கண்டு, பனை வெல்லம், நாட்டு வெல்லம் பயன்படுத்தலாம், எழுமிச்சம்பழம், புதினா, பனங்கருப்பட்டி கலந்த பானத்தை தாகம் எடுக்கும் தருணங்களில் அருந்தலாம். இளநீர், தாளித்த நீர்மோர் அருந்துவதும் நல்லது." என்கிறார் அவர்.



# WWE
## கிங்ஸ் ஓவ் ரிங்ஸ்
### அதிரடி அடிதடி



## ஹல்க் ஹோகன் முதல் செத் ரோலின்ஸ் வரை

**வேர்ல்ட்** ரெஸ்லிங் என்டர்டெயின்மென்ட் சுருக்கமாக 'WWE'. தூய தமிழ்தான் வேண்டுமென யாராவது சொன்னால், உலக மற்போர் மகிழ் கலை நிறுவனம். பல ஆண்டுகளாக 'ப்ரோ ரெஸ்லிங்' எனப்படும் வல்லுநர் மல்லாடல் போட்டிகளை நடத்திவரும் மிகப் பிரபலமான நிறுவனம். வெறும் ஜட்டிதான் அணிந்திருப்பார்கள். ஆனால்,பெல்ட்டுக்காக அடித்துக் கொள்வார்களே... அவர்களே தான். அவர்களைப் பற்றித்தான் இந்தத் தொடர் முழுக்கப் பேசவிருக்கிறோம். ஏனெனில், கிரிக்கெட், சினிமாவைத் தாண்டி பெரும்பாலான சிறுவர்கள், இளசுகளின் பேசுபொருளாக இருந்தவர்கள் / இருக்கிறவர்கள் இந்த பெல்ட் ப்ரியர்கள்தான்.

நாம் கிழித்துப் போட்ட கலண்டர் பேப்பர்களிலும், கடிகார முள் கடந்து வந்த நேரத்திலும் பசை தடவி அவர்களை ஒட்ட வைத்திருக்கிறோம். என்றோ ஒருநாள் அவர்களின் முகமோ, பெயரோ நம் மூளைக்கு எட்டும்போது, அங்கே ஒட்டியிருந்தவர்கள் நம்மை பிற்காலத்துக்கு இழுத்துவிடுகிறார்கள். அந்தத் தாள்களும் நிமிடமும் தாங்கியிருக்கும் வேறு பல நினைவுகளையும் மீட்டெடுத்து தருகிறார்கள். எனவே, இது ஒரு நாஸ்டால்ஜியா உணர்வை உங்களுக்குள் கிளப்பிவிடும் பயோடெக்னாலஜி தொடராகவும் இருக்கலாம்!

முதல் நாள் மாலை 'ரோ'வையோ, 'ஸ்மாக் டவுனை'யோ பார்த்துவிட்டு, அன்றிரவே அதன் மறுஒளிபரப்பையும் 'கொட்ட கொட்ட' கண் விழித்துப் பார்த்துவிட்டு, அடுத்த நாள் காலையும் அலாரம்வைத்து எழுந்து அதன் 'மறுமறு'ஒளிபரப்பையும் பார்த்தவர்கள் நிறையபேர். பின்னர் கடையில் சிடி வாங்கிவந்து பார்த்தது பட்டியலிற்குள் இல்லை! சிலர் ஆர்வமின்மை, நேரமின்மை போன்ற காரணங்களால் பார்ப்பதை நிறுத்தியிருப்பீர்கள். இன்னும் சிலர் ஒருசில எபிசோடுகளை மட்டும் பார்த்துவிட்டு, 'இது ஃபேக். அத்தனையும் நடிப்பு. இதெல்லாம் எப்படித்தான் பார்க்கிறாங்களோ!' எனச் சலித்திருப்பீர்கள். உண்மையில், ப்ரோ ரெஸ்லிங்கில் வீரர்கள் நிஜமாகவே அடித்துக்கொள்வதில்லை என்பது, பார்ப்பவர்கள் அனைவருக்குமே தெரியும். பிறகு ஏன் அதை ரசிக்கிறோம்?

ப்ரோ ரெஸ்லிங் போட்டிகள் 'ஃபேக்'கானது எனும் வார்த்தையைவிட 'ஸ்க்ரிப்ட்' செய்யப் பட்டது எனும் வார்த்தை தான் பொருத்தமானதாக இருக்கும். சண்டை தொடங்குவதற்கு முன்பே இங்கே வெற்றியாளன் தீர்மானிக்கப்பட்டுவிடுகிறான். ஒரு மேடை நாடகத்தில் வரும் சண்டைக் காட்சியைப் போன்றுதான் ப்ரோ ரெஸ்லிங் போட்டிகளைப் பார்க்க வேண்டும். அது எவ்வளவு சுவாரஸ்யமாக, நேர்த்தியாக வடிவமைக்கப் பட்டுள்ளது என்பதுதான் மேட்டர். சில நேரங்களில் அதை அரங்கேற்றும்போது ஏற்படும் தவறுகளால் நிஜமாகவே அடிபடும், எலும்பு உடையும், சதை கிழியும், ரத்தமும் வழியும். சண்டைனா சட்டை கிழியத்தானே செய்யும்!



உங்களைப் போன்றே 'WWE' பற்றி மணிகணக்காகப் பேசிய, டிரம்ப் கார்ட்கள் வாங்கிக் குவித்த, தலையணைக்கு அண்டர்டேக்கர் ஸ்மேக் போட்ட, அட்டையை வெட்டி சாம்பியன்ஷிப் பெல்ட் செய்த, ட்ரிப்பிள் ஹெச்சைப் போன்று தண்ணீரைத் தனக்குதானே துப்பிக் கொண்ட WWEயின் வெறித்தன ரசிகனாகத்தான் இதை எழுதுகிறேன். கோல்டன் ஏஜ், நியூ ஜெனரேஷன். ஆட்டிட்யூட் எரா, ரூத்லெஸ் அக்ரஷன் எரா, பிஜி எரா, தி ரியாலிட்டி எரா, தி 'நியூ' எரா என அனைத்து எரா இறால் குழம்பையும் ரௌடி பைப்பர் முதல் ரோமன் ரெய்ன்ஸ் வரை எல்லா படா பயில்வான்கள் பரும்பு சாம்பாரையும் பற்றிப் பேசுவோம்.

அண்டர்டேக்கருக்கு ஏழு உயிர், ஸ்டோன் கோல்ட் தம்பிதான் கோல்ட்பெர்க் போன்ற கலகலப்பான விஷயங்களையும், கிறிஸ் பெனாய்ட் மரணம், மான்ட்ரியல் ஸ்க்ரூஜாப் போன்ற சலசலப்பான விஷயங்களையும், த்ரிஷ் ஸ்ட்ராடஸ், லீடா, டோரி வில்ஸன் போன்ற கிளுகிளுப்பான விஷயங்களையும் இன்னும் சுவாரஸ்யமான பல அம்சங்களையும் அடுத்தடுத்து வரும் பகுதிகளில் ஆற அமர அலசுவோம். WWEயில் ரசிகர்களாக இருக்கும் பிரபலங்களின் பேட்டிகளும் லிஸ்ட்டில் இருக்கின்றன. ஆர் யூ ரெடி?








# 7 சென்றதும் வென்றதும்!



மெக்கல்லன்

வாஸ்கோட காமா பிறந்து 20 ஆண்டுகள் கழித்து, அதே போர்த்துக்கல் நாட்டில் மெக்கல்லன் பிறந்தார். ஆனால், போர்ச்சுக்கலைச் சேர்ந்த வரலாற்று ஆசிரியர்கள், ஆஹா ஓஹோ என மெக்கல்லனைப் புகழ மாட்டார்கள்.

'மெக்கல்லன் பிறந்தது என்னவோ இங்கேதான், ஆனால், அவர் ஸ்பெயின் மன்னரின் உதவியுடன் தானே பயணம் மேற்கொண்டார்' என்பார்கள்.

ஸ்பெயினுக்குச் சென்று கேட்டால், அவர்களும் முகத்தைத் திருப்பிக் கொள்வார்கள். 'எங்கள் மன்னர் உதவி செய்தாலும் அவர் போர்த்துக்கல் நாட்டுக்காரர்தானே' என நகர்ந்து விடுவார்கள்.

பாவம்தான் இந்த மெக்கல்லன். இவர் புகழ் சர்வதேச அளவில் பரவியதால் பிழைத்துக்கொண்டார். மெக்கல்லன், உலகை வலம்வந்த கதையைப் பார்ப்பதற்கு முன்னால், சுருக்கமாக அவரை வலம்வந்து விடலாம்.

மெக்கல்லன் பிறந்த ஆண்டு 1480. போர்ச்சுக்கலில் குறிப்பாக எங்கே பிறந்தார், எந்த மாதம், எந்தத் தேதி? என எதுவும் இதுவரை தெரியவில்லை.

கிட்டத்தட்ட 20 ஆண்டுகளைக் கடலில் கழித்திருக்கிறார் மெக்கல்லன். இது, அவர் வாழ்நாளில் பாதி ஆண்டுகள்.



ஸ்பைஸ் தீவுகளுக்குப் போக வேண்டும் எனும் கனவு மெக்கல்லனுக்கு ஏற்பட்டபோது, அவர் வயது 18.

வாசனைப் பொருளான கிராம்புக்கு அற்புதமான ஆற்றல் இருக்கிறது. அது, நோய்களைக் குணப்படுத்தும் என ஐரோப்பியர்கள் நம்பினார்கள். கிராம்புச் சாறு குடித்தால், கண் பார்வை பிரகாசமாகும். பொடி செய்து சாப்பிட்டால், காய்ச்சல் ஓடிவிடும் எனப் பல விசித்திர நம்பிக்கைகள் இருந்தன.

மெக்கல்லன் காலத்தில் ஐரோப்பாவில் போர்த்துக்கலும் ஸ்பெயினும் தான் வல்லரசுகள். இந்த இரண்டையும் சேர்த்து, 'ஐபீரியன் தீபகற்பம்' என்று அழைப்பார்கள். இங்கிருந்த வணிகர்கள், அரசர்கள், மாலுமிகள், பொதுமக்கள் எல்லோருக்கும் அப்போது இருந்த ஒரே விருப்பம், ஸ்பைஸ் எனப்படும் வாசனைப் பொருட்கள். இறைச்சியைப் பாதுகாக்கவும் உணவுக்குச் சுவையூட்டவும் மிளகு, ஏலக்காய், பட்டை உள்ளிட்ட வாசனைப் பொருட்களை விரும்பிப் பயன்படுத்தினர். இந்த வாசனைப் பொருட்களின் தாய்வீடு, ஸ்பைஸ் தீவுகள் (தற்போதைய பெயர் இந்தோனேஷியா). இங்கே, நூற்றுக்கணக்கான சிறிய தீவுகள் இருந்தன.

முதலில் அரேபியர்களுக்கு மட்டுமே இந்தத் தீவுகள் தெரியும். வாஸ்கோட காமா இந்தியாவுக்குப் பயணம் மேற்கொண்டதைத் தொடர்ந்து, போர்த்துகீசியர்களும் தெரிந்துகொண்டனர். ஸ்பைஸ் தீவுகள் மட்டுமின்றி, ஒட்டுமொத்த ஆசியாவும் ஐரோப்பியர்கள் மத்தியில் பிரபலமானது. ஆசியாவைக் குறிவைத்து கொலம்பஸ் பயணம் மேற்கொண்டார். அவருக்குப் பிறகு மெக்கல்லன்.

மெக்கல்லனின் ஆரம்பகால வாழ்க்கை மர்மமாகவே இருக்கிறது. இங்கே வசித்திருக்கலாம், அங்கே படித்திருக்கலாம் எனும் யூகங்களே அதிகம். உறுதியாகத் தெரியவரும் தகவல், இளம் வயதில் மெக்கல்லன் போர்த்துக்கல் அரண்மனையில் பணியாளராக இருந்தார். எப்படிப் பட்ட வேலை?

ராஜ குடும்பத்தினர் அரண்மனைக்கு வரும்போது, முதுகை வளைத்து வணக்கம் செலுத்த வேண்டும். பணிவாகப் பின்னால் போக வேண்டும். அவர்களைக் குஷிப்படுத்த வேடிக்கையாகக் கதை சொல்ல வேண்டும். விடுகதை, நகைச்சுவைச் சம்பவங்களைச் சொல்லி சிரிக்கவைக்க வேண்டும். தேவைப்பட்டால் நடனம் ஆட வேண்டும்.

இதை மட்டுமே மெக்கல்லன் செய்து கொண்டிருக்காமல், அரண்மனைக்கு வந்துபோகும் விதவிதமான மனிதர்களையும் கவனிக்க ஆரம்பித்தார். அவர் வாழ்க்கை மாற ஆரம்பித்தது. மெக்கல்லன் சந்தித்த பலரும் வணிகர்களாகவும் மாலுமிகளாகவும் கப்பல் அதிகாரிகளாகவும் இருந்தனர். அவர்களுடைய நடை உடை, பழக்கவழக்கம், பேச்சு முறை எல்லாம் அவரைக் கவர்ந்தன. குறிப்பாக, ஸ்பைஸ் தீவுகள் குறித்து அவர்கள் பேசிக்கொண்டதை உன்னிப்பாகக் கேட்டுக் கொண்டார். அங்கே போவதற்கு போர்த்துக்கலில் இருந்து புதிய வழிகளைக் கண்டறிவது பற்றித் தெரிந்து கொண்டார்.

'அப்படி என்னதான் இருக்கிறது அந்தத் தீவுகளில்? மிளகும் ஏலக்காயும் அங்கே மட்டும் தான் கிடைக்குமா? அங்கே போவது அவ்வளவு கஷ்டமா? ஆசியா, ஆசியா என்கிறார்களே... அது எங்கே இருக்கிறது?' அவருக்குள் கேள்விகள் எழுந்தன. மெக்கல்லனின் ஆர்வம், கப்பல் மீது திரும்பியது. ஒரு பெரிய கப்பலில் செல்லும் வாய்ப்பு வந்தால், பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என நினைத்தார். கடலில் இறங்கிய பிறகு எல்லா பக்கமும் நீர்தானே இருக்கும்? எந்தப் பக்கம் போக வேண்டும், எங்கே திரும்ப வேண்டும் என்பதை எப்படித் தெரிந்து கொள்வார்கள்? என ஒவ்வொரு கேள்விக்கும் விடை கேட்டுத் தெரிந்துகொண்டார். பிறகு, திசை காட்டி குறித்தும் வரைபடங்கள் குறித்தும் கற்றுக்கொண்டார். கடல் பயணத்தின்போது புயலையும் மழையையும் எப்படிச் சமாளிப்பது என்பது புரிந்தது. வாசனைப் பொருட்களின் முக்கியத்துவத்தையும் உணர்ந்து கொண்டார்.

மெக்கல்லனையும் ஸ்பைஸஸ் ஆசை பிடித்துக்கொண்டது. 'நாமும் கடலில் சென்றால் என்ன? ஸ்பைஸஸ் தீவுகளையும் ஆசியாவையும் கண்டு வந்தால் என்ன? அரண்மனையில் பாடுவதும் ஆடுவதும் சலாம் போடுவதும் சுலபமாக இருக்கலாம். ஆனால், அதில் சுவாரஸ்யம் என்ன இருக்கிறது? கடல் நீரில் கால் நனைப்பதைவிட பெரிய இன்பம் வேறு' என நினைத்தார்.

ஒரு நாள், அவர் காதுக்கு ஒரு செய்தி வந்தது. ஸ்பைஸ் தீவுகளுக்குச் செல்ல, ஒரு புதிய வழித்தடத்தைக் கண்டுபிடித்துவிட்டார்களாம். விரைவில் ஒரு கப்பல் அங்கே போகப் போகிறதாம். புகழ்பெற்ற பெரிய மாலுமி அதைச் செலுத்தப்போகிறாராம். மெக்கல்லனின் இதயம் வேக வேகமாகத் துடித்தது. அந்த மாலுமி யார் என விசாரித்தார். வாஸ்கோட காமா எனச் சொன்னார்கள்.

'அந்தக் கப்பலில் எனக்கும் இடம் கிடைக்குமா?' எனக் கேட்டார். மன்னர் அனுமதித்தால் கிடைக்கும் என்றார்கள்.

இரண்டாம் ஜோர்ஜ் மன்னர் இறந்து, முதலாம் மனுவேல் அப்போது மன்னராகப் பொறுப்பேற்றிருந்தார். புதிய மன்னர் நிச்சயம் நம் கோரிக்கையை நிறைவேற்றுவார் என நம்பிக்கையுடன் சென்று விண்ணப்பித்தார் மெக்கல்லன்.



மன்னர், மெக்கல்லனை ஏற இறங்கப் பார்த்தார். அரண்மனைப் பணியாளருக்கு ஏன் இந்த வேலை என நினைத்தாரோ என்னவோ, 'உனக்கு எதற்கு கப்பல் பயணம்? போய் உன் வேலையைப் பார்' என்று சொல்லிவிட்டார்.

பாவம், மெக்கல்லன். அவர் கண் முன்னால் வாஸ்கோட காமாவின் கப்பல் கிளம்பிச் சென்றுவிட்டது. 'போய் வா கப்பலே' என்று முதுகை வளைத்து சலாம் போட்டார் மெக்கல்லன். கண்கள் முழுக்க கண்ணீர்.

'இன்று இல்லாவிட்டாலும் நிச்சயம் ஒரு நாள் நானும் இதே போன்ற ஒரு கப்பலில் போகத்தான் போகிறேன். அழகிய கடலே, எனக்காக அப்போது நீ காத்திருப்பாயா?' என கடலைப் பார்த்துக் கேட்டார்.

கடலுக்கு மட்டும் வாய் இருந்திருந்தால், நிச்சயம் அது சத்தம் போட்டு, 'மெக்கல்லன், நிச்சயம் உனக்காக நான் காத்திருப்பேன்' எனச் சொல்லியிருக்கும்.

மெக்கல்லனின் கனவு நிறைவேறும் நாளும் வந்தது. அன்று முதல் அவர் சந்தித்த சவால்களும் சாகசங்களும் பிரமிக்கவைப்பவை.

(பயணம் தொடரும்...)

# மாய மனிதன் க்ரி:ஃபின் 7


VENU VARIATH ஓவியம்: கே.எஸ்.ரகு தமிழில்: ரமேஷ்












# ஐந்தில் ஒன்றை தொடுங்க... உங்கள ஆன்மாவை சொல்கிறோம்!

இந்த உலகில் பிரச்சனை இல்லாத மனுஷனே இருக்க முடியாது. அப்படி ஒருவர் இருக்கிறார் என்றால் அவர் இயந்திரத்தனமாக வாழ்ந்து வருகிறார் என்பதை நாம் மிக எளிதாக அறிந்துக் கொள்ளலாம். பிரச்சனைகள் இருக்க தான் செய்யும், நீங்கள் எடுக்கும் ஒவ்வொரு முடிவிலும், தேர்வுகளிலும் பிரச்சனைகள் இருக்கும். உண்மையில், தவறு செய்பவர்களை காட்டிலும், நன்மை செய்பவர்களுக்கு தான் அதிக பிரச்சனை வரும். சிலருக்கு ஏன் தங்கள் வாழ்வில் இப்படியான பிரச்சனை ஏற்படுகிறது என்றே தெரியாது. பிரச்சனை எவ்வளவு கடினமாக இருந்தாலும், அதற்கான பதிலும், தீர்வும் நிச்சயம் இருக்கும்.

அவ்வகையில், உங்கள் ஆத்மா / ஆன்மாவை சூழ்ந்திருக்கும் பிரச்சனை எது சார்ந்து இருக்கும், அதில் இருந்து நீங்கள் எப்படி வெளிவரலாம் என்பதை குறிக்கும் பர்சனாலிட்டி டெஸ்ட் தான் இது. இந்த ஐந்து இலட்சினைகளில் ஒன்றை தேர்வு செய்யுங்கள். உங்கள் ஆழ்மனத்தின் பிரச்சனை மற்றும் அதற்கான தீர்வை எப்படி பெறலாம் என்பது குறித்து இந்த தொகுப்பில் காணலாம்...

**சிங்கம்!**

சிங்கம் சூரியனை குறிக்கிறது. உங்கள் விதியை நீங்கள் கட்டுப்படுத்த வேண்டிய நிர்பந்தத்தில் இருக்கிறீர்கள். ஒருவேளை நீங்கள் சிங்கத்தை தேர்வு செய்திருந்தால்., பிரச்சனை: அல்டிமேட் சக்தி கொண்டிருக்கும் சிங்கம் சூரியனை குறிக்கிறது. சிங்கம் ஆளுமை, ஆதிக்கத்திற்கு இணையானது.




இப்போது நீங்கள் வாழ்ந்து வரும் வாழ்க்கைகாக நீங்கள் எதையும் சிறந்த முறையில் செய்ய வேண்டும் என்ற முனைப்புடன் செயல்பட்டிருப்பீர்கள். ஆனால், ஒரு கட்டத்தில் உங்கள் ஓயாத கடமையினால் நீங்கள் பிரச்சனையில் சிக்கி இருக்கலாம். அதில் இருந்து வெளிவர நீங்கள் புதிய, வித்தியாசமான பாதையை தேடலாம்...

**தீர்வு:** உங்களது தற்போதைய வாழ்க்கை உங்களை மிகவும் சோதிக்கிறதா? மீண்டும் நிம்மதியாக பெருமூச்சு விட வேண்டும் என்று கருதுகிறீர்களா? இந்நிலையில் இருந்து வெளிவர புதிய வழிகளை தேடுகிறீர்களா? நீங்கள் என்ன செய்தீர்களோ, ஏன் செய்தீர்களோ? அதற்கெல்லாம் ஒரு காரணம் இருக்கிறது. அக்காரணத்தை நீங்கள் முதலில் ஒப்புக்கொள்ள வேண்டும். இதை நீங்கள் என்று ஒப்புக் கொள்கிறீர்களோ, அன்று உங்கள் பாதையில் மாற்றங்கள் தென்படும், உங்கள் தீர்வுக்கான வழி நீங்கள் காண்பீர்கள். உங்கள் கடமைகளை மீண்டும் சிறப்பாக செய்வதற்கான முறையை அறிவீர்கள்.

**ஹவர் கிளாஸ்!**

தவிர்க்க முடியாததின் இலட்சினை தான் இந்த ஹவர் கிளாஸ். இது நேரத்தின் சுழற்சியாகும். ஒருவேளை நீங்கள் ஹவர் கிளாஸ் தேர்வு செய்திருந்தால்.., பிரச்னை: ஹவர்கிளாஸ் நேரத்திற்குள் சிக்கிக் கொண்ட



உணர்வை தரவல்லது. உங்கள் கடந்த காலத்தில் என்றேனும் நீங்கள் வலிமிகுந்த துயரமான அனுபவத்தை கடந்து வந்திருக்கலாம். அதனால், மெல்ல, மெல்ல நீங்கள் நீரில் மூழ்குவது போலவும், சக்தி இருந்து இருப்பது போலவும், இது தவிர்க்க முடியாத சூழல் என்றும் கருதி இருக்கலாம்.

**தீர்வு:** இந்த மண்ணில் பிறந்த அனைவருக்கும் வளர, வளர வயதாவது, மரணம் வாழ்க்கையின் ஒரு பகுதி. இதன் நடுவே நாம் அனைத்து அன்பவங்களையும் கடந்து வர வேண்டும். மரணத்தை விட ஒருவரை அதிகம் அச்சுறுத்திப் பார்த்துவிடக் கூடிய அனுபவம் வேறு ஏதேனும் உண்டா? எனவே, நேரத்துடன் கொஞ்சம் அமைதி காணுங்கள். உங்களால் முடிந்தால் பழையதை மறந்து, உங்கள் கடந்த காலத்தையும் சாந்தியடைய செய்யுங்கள். அதை மீண்டும், மீண்டும் சிந்தித்தது இறந்த காலத்திற்கு உயிர் கொடுத்துக் கொண்டே இருக்காதீர்கள். இது தான் உங்களை யார் என்று நீங்கள் தீர்மானம் செய்ய வைக்கும். இதனால் உங்களிடம் முன்பை விட வலிமை அதிகரிக்கலாம்.

**நிலா!**

நிலா உணர்வுகளோடு இணைப்பும், தொடர்பும் உடையது. இதனிடம் புதைந்த உண்மைகள் பலவன இருக்கும். ஒருவேளை நீங்கள் நிலாவை தேர்வு செய்திருந்தால்... பிரச்சனை: உங்கள் மனம் ஒரு போர்க்களம் போன்றது. உங்கள் ஆள் மனதில் இருக்கும் ஒரு விஷயம் நிம்மதியாக உறங்கவிடாமல் செய்யலாம். அது உங்களை நள்ளிரவுகளில் எழுப்பிக் கொண்டிருக்கும். அந்த ரகசியம் உங்கள் ஒவ்வொரு இரவையும்




சூழ்ந்திருக்கும். அது பகை, வெறுப்பு, கோபம் அல்லது பேரார்வம் என்று எதுவாக கூட இருக்கலாம்.

**தீர்வு:** உங்கள் மனம் அமைதியை தேடுகிறது. உங்கள் உணர்வுகளை ஒருமுகமாக்கி அதன் இலட்சியத்தை வெற்றியடைய செய்ய உதவும் ஒரே கருவி அமைதி தான். இரகசியங்களுக்கு பெரும் சக்தி இருக்கிறது. அது இருளில் மறைந்திருக்கும். அது ஒரு நாள் வெளிச்சத்திற்கு வரும் போது இருபாலரிடமும் பெரும் தாக்கத்தை உண்டாக்கும். இரகசியம் எத்தனை ஆழத்தில் இருக்கிறதோ, தாக்கத்தின் வீரியம் அத்தனை பெரிதாக இருக்கும்.

**சாவி!**

சாவி வாழ்க்கையின் ஞானம் மற்றும் பாதையுடன் தொடர்பும், இணைப்பும் உடையது. ஒருவேளை நீங்கள் சாவியை




தேர்வு செய்திருந்தால்.., பிரச்சனை: உங்கள் ஆத்மா பதில்களை தேடுகிறது. நீங்கள் பயணித்துக் கொண்டிருக்கும் பாதையில் நிறைய கேள்விகள் நிறைதிருக்கலாம். அந்த அனைத்து கேள்விகளுக்கும் நீங்கள் பதில் கண்டுபிடிக்க வேண்டும். ஒருவேளை நீங்கள் அந்த பதில்களை எங்கே காண்பது, எப்படி கண்டறிவது, எப்படி தேடுவது என்பது அறியாது இருக்கலாம். ஒரு கட்டத்தில் நீங்கள் அந்த பதில் தேடும் பயணத்தில் சோர்வடைந்து, போதுமடா சாமி என்ற நிலைக்கும் தள்ளப்பட்டிருக்கலாம்.

**தீர்வு:** இது உங்கள் நேரம், சூரியன் போல உதிக்க வேண்டிய, ஜொலிக்க வேண்டிய காலம். சாவி உங்கள் கனவுகள் மற்றும் பேரார்வத்திற்கான வழி. இது நீங்கள் இப்போது வாழ்ந்துக் கொண்டிருக்கும் வாழ்க்கையை மீறி, தாண்டி இருக்கும் ஒரு அட்டகாசமான, திரில்லான வாழ்க்கையின் பகுதியை திறக்க செய்யும்.

**ஹம்சா கை!**

ஹம்சா கை (Hamsa hand) கெட்ட சக்திகளிடம் இருந்து காக்கும். ஒருவேளை நீங்கள் ஹம்சா கை தேர்வு செய்திருந்தால்.., பிரச்சனை: உங்கள் ஆத்மாவை ஏதேனும் கெட்ட சக்தி ஆட்கொண்டிருக்கலாம். அதில் இருந்து வெளிவந்து சுதந்திரமாக இருக்க ஆத்மா விரும்பலாம். நீங்கள் ஏற்கனவே ஏதேனும் சில விசித்திரமான அறிகுறிகளை கண்டிருக்கலாம். அது



அந்த சூழல் அறியானதாக இல்லை, உங்களுக்கு தீய தாக்கம் ஏற்படுத்தும் என்று உணர்த்தி இருக்கலாம்.

**தீர்வு:** வெற்றி மட்டுமல்ல, தோல்வியும் உங்கள் கைகளில் தான் இருக்கிறது. நம்ப கூடாத நபரை நம்பினால் தோல்வியும், நஷ்டமும் தான் ஏற்படும். எனவே, அனைத்தும் உங்கள் கைகளில் தான் இருக்கிறது என்பதை நம்புங்கள். கைதாவது மட்டுமல்ல, விடுதலை ஆவதும் உங்கள் கைகளில் தான் இருக்கிறது. நீங்கள் செய்த தவறுகளை நீங்களே கண்டறியுங்கள், உங்களை ஏமாற்றியவர்கள் யார் என்று நீங்கள் தான் கண்டுபிடிக்க வேண்டும். இது மிகவும் எளிது, உங்கள் மீது நீங்களே அனுப்பு செலுத்த ஆரம்பிக்கும் போது உங்களை சுற்றி இருக்கும் கூட்டத்தில் உங்கள் மீது உண்மையான அன்பு யார் கொண்டிருக்கிறார், போலியாக யார் நடிக்கிறார் என்பதனை அறிந்துவிடலாம். இதை நீங்கள் செய்ய துவங்கிவிட்டாலே, உங்களை சுற்றியிருக்கும் இடையூறுகள் அனைத்தும் தவிடுபொடியாகிவிடும்.

அறிவுரை: நீங்கள் ரிலாக்ஸாக உணர நேரம் ஒதுக்குங்கள். எனர்ஜியை புத்துயிர் பெற செய்யுங்கள். நீங்கள் யாரென்றும், உங்களை சுற்றி இருப்பவர்கள் யார், எப்படி பட்டவர்கள் என்றும் உணர இவை மிகவும் உதவும்.

இந்தப்பத்திரிகை நோர்சி மீடியா (பிறைவேற்) லிமிற்ரட் நிறுவனத்தால் பருத்தித்துறை வீதி, 5ம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியில் உள்ள நாவலர் பிரிண்டர்ஸில் அச்சிட்டு 18.03.2018 அன்று வெளியிடப்பட்டது.